DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Realty Inc., Brokerage
Siva Shanmuganathan, Broker
Joy H Selvanayagam, Broker

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative — homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam, Broker
RE/MAX
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள் பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam, Sales Representative
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel : 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE மோர்ட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது வெள்ளி விழா 2021
UTHAYAN உதயன்
சிந்திக்கும் தமிழ் உலகின் உலகில் எதிர்க்கும் சுதந்திர ஏடு
$1.00
416-752-1524
416-752-6703
உதயம் 1312 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday May 28, 2021

# ஒன்றாரியோப் பாடசாலைகளை பாதுகாப்பாக மீண்டும் திறக்க மருத்துவ அதிகாரிகளின் ஆலோசனைகளை இன்று மாலைக்குள் எதிர்பார்க்கும் முதல்வர் டக் போர்ட்



ஒன்றாரியோப் பாடசாலைகளை பாதுகாப்பாக மீண்டும் திறக்க மருத்துவ அதிகாரிகளின் ஆலோசனைகளை இன்று மாலைக்குள் எதிர்பார்க்கும் முதல்வர் டக் போர்ட் மேலும் முடிவுகளை எடுக்க வாரதி இறுதி நாட்கள் கழிந்து குயின்ஸ்பார்க் வளாகத்தில் தனது ஆலோசகர்களுடன் கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது

முதல்வர் டக் போர்ட் அவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க, ஒன்றாறியோவின் தலைமை மருத்துவ அதிகாரி டாக்டர் டேவிட் வில்லியம்ஸ் மற்றும் அனைத்து பிராந்திய சுகாதார அதிகாரிகளும் நேற்று வியாழக்கிழமை சம்மதம் தெரிவித்தனர். அடுத்த வாரம் ஆரம்பத்தில் மாகாணத்தின் சில பகுதிகளைத் திறப்பது பாதுகாப்பானது எனவும், கொரோனா தொற்று பாதித்துள்ளவர்கள் அதிகரித்து வரும் பிராந்தியங்கள் தொடர்பாக கணக்குகள் எடுக்கவும் அவர்கள் தயாராகியுள்ளார்கள். இந்தக் குழுவில் டொராண்டோ பெரும்பாகத்தின் மற்றும் ஹாமில்டன் பிரதேசத்தின் அனைத்து சுகாதார அதிகாரிகளும் தங்களோடு இணைந்து கொள்ளவுள்ளதாகவும் வில்லியம்ஸ் அவர்கள் கூறினார். “வகுப்பறைகளில் தங்கள் கற்கைகளை தொடர்வதற்காக பாடசாலைகளை மீண்டும் திறந்துவிடுவதை ஆதரிக்கின்றேன் ஆனால் மாணவர்களின் உடல்நலம் மற்றும் மேம்பாடு தொடர்பான விடயங்கள் வெவ்வேறு நிபுணர்களால் என் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன,” என்று தெரிவித்துள்ள ஒன்றாரியோ தலைமை மருத்துவ அதிகாரி வில்லியம்ஸ் அவர்கள் தொடர்ந்து “பல பகுதிகளை மதிப்பீடு செய்ய வேண்டும் அத்துடன் இது ஒரு குழு முயற்சி.” என்றும் உறுதியாகக் கூறினார்.

*(தொடர்ச்சி உள்ளே 3ம் பக்கத்தில்)*



# தடுப்பூசிகள் காலாவதியாவதற்கு முன்னர் பயன்படுத்துவதை துரிதப்படுத்துமாறு கனடிய மத்திய அரசு மாகாண அரசுகளை கேட்டுக்கொண்டுள்ளது

கோவிட்-19 தடுப்பூசிகள் காலாவதியாகும் முன்னர் பயன்படுத்தும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு கனடாவின் மத்திய அரசு மாகாண அரசுகளை கேட்டுக்கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள மத்திய அரசின் அறிக்கையொன்றில் ஆயிரக்கணக்கான குப்பிகள் ஆக்ஸ்போர்டு ஆஸ்ட்ராசெனகா கொரோனா தடுப்பு மருந்து இன்னும் சில நாட்களில் காலாவதியாக உள்ளதால், உடனே அவற்றை மக்களுக்கு செலுத்த நடவடிக்கை எடுக்குமாறு மாகாணங்களை கனடாவின் மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது.

கனடாவில் உள்ள மாகாண அரசாங்கங்களுக்கு கடிதங்களை எழுதியுள்ள மத்திய சுகாதாரத்துறை அமைச்சு, தடுப்பு ஊசிகளை இம்மாத இறுதிக்குள் பயன்படுத்த முடியாமல் வைத்திருக்கும் மாகாணங்கள், அவற்றை ஏனைய தேவையுள்ள மாகாணங்களுக்கு வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

காலாவதியாகும் நாட்கள் நெருங்குகின்ற நிலையில் உள்ள கோவிட்-19 தடுப்பூசிகள் வீணாகிவிடாமல் இருப்பதை உறுதி செய்யும் நோக்கத்தோடே இந்த அறிவுறுத்தல்கள் மாகாணங்களுக்கு விடுக்கப்படுவதாக தெரிவித்துள்ள கனடிய சுகாதார அமைச்சு அவர், சில மாகாணங்களில் தேவைகள் இருப்பதால் அவற்றை பயன்படுத்திக்கொள்ள உதவுமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

இந்நிலையில், ஏற்கனவே மார்ச் 10 முதல் 19 வரை ஆஸ்ட்ராசெனகா தடுப்பூசியை முதற் தடவையாகப் பெற்றுக்கொண்டவர்களுக்கு இரண்டாவது டோஸ் தடுப்பு மருந்தை வழங்க இருப்பதாக ஒன்றாறியோ மாகாண அரசு கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்தது. ஆனால், அவ்வாறு ஊசி போட்டுக்கொள்ள தகுதியானவர்கள், அவை கிடைக்கும் இடங்களை கண்டுகொள்வதில் பல சிரமங்களை அனுபவிப்பதாகவும் அறியப்படுகின்றது.

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7 — 905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905 794 4404

குடும்பத்தினரை
ஒன்றிணைக்க

நம்
அனைவராலும்
உதவ
முடியும்.

தடுப்பூசி
போட்டுக்கொள்ளுங்கள்.

Canada.ca/covid-vaccine
1-833-784-4397

Government of Canada Gouvernement du Canada

Canada

உதயன் **கதிரோட்டம்**

# மலையக தொழிற் சங்கத் தலைவர்களே! உங்களுக்கு ஏணிகளாய் விளங்கிய தோட்டத் தொழிலாளர்களை திரும்பிப் பாருங்கள்...

இலங்கையில் வடக்கு கிழக்கு தமிழ் மக்களைப் போன்று மலையகத்திலும் தோட்டத் தொழிலாளர்கள் என்ற அழைக்கப்பெறும் தமிழ் மக்கள் பல ஆண்டு காலமாக பரம்பரையாக பரம்பரையாக வாழ்ந்து வருகின்றார்கள். ஆங்கிலேயர்களினால் தேயிலை மற்றும் றப்பர் தோட்டங்களில் கூலிகளாக வேலை செய்வதற்கென இந்தியாவிலிருந்து, இலங்கைக்கு எவ்வித விசாவுமன்றி அந்நாட்களில் கடல் மார்க்கமாகவும் தரை மார்க்கமாகவும் அழைத்து வரப்பட்ட மக்களின் நான்காவது அல்லது ஐந்தாவது பரம்பரையினர் அங்கு தற்போது வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறான தோட்டத் தொழிலாளிகளின் வரலாற்றை நாம் படிக்கும் போது, எமது கண்களிலேயே கண்ணீர் வடியுமளவிற்கு கஸ்டங்களும் கவலைகளும் நிறைந்த வாழ்வோட்டம் ஆகும். எவ்வித வசதிகளும் அற்ற 'லயன்கள்' என்றழைக்கப்படும் வதிவிடங்கள், மின்சார வெளிச்சமின்றி ஒரு அறைக்குள் ஒரு குடும்பம் வாழ்ந்த அந்த நாட்களில் அவர்கள் அடைந்த சிரமங்கள் அதிகம்.

இவ்வாறாக குறைந்த ஊதியம், ஓய்வற்ற வேலை, தோட்டத்துரை, கங்காணி, கணக்குப்பிள்ளை, கிளார்க்கர் என தங்கள் தோட்டத்து மேற்பார்வையாளர்களின் கட்டளைகளை தலை சுமந்த வண்ணம் தங்கள் இரத்தத்தைச் சிந்திய மக்களை கஸ்டங்களிலிருந்து மீட்டு வந்து நல்வாழ்வு தருகின்றோம் என்று தாமாக முன்வந்தவர்களும் அவர்கள் மத்தியில் பிறந்த தொழிலாளிகளின் வாரிசுளும், ஏனைய கற்ற சில தலைவர்களுமே தொழிற்சங்கங்களின் தலைவர்கள் ஆனார்கள். "தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையை மாற்றி அமைக்கின்றோம்" என்று முன்வந்த பல தொழிற்சங்கத் தலைவர்கள், தொழிலாளர்களின் வாழ்க்கையை வளப்படுத்தாமல், தங்களதும், தங்கள் குடும்பத்தினதும், தங்கள் உறவினர்களினதும் வாழ்க்கையை உயர்த்துவதிலும், தங்களை மேற்தட்டு மக்களின் வாழ்க்கையை அடைந்தவர்களாக, அதனைப் பெற்றுக்கொள்வதற்கே பயன்படுத்தினார்கள் என்பதற்கு சான்றாக பல தொழிற்சங்கத் தலைவர்கள் விளங்கி வந்தார்கள், அத்துடன் இன்னும் பலர் உதாரணமாகத் திகழ்கின்றார்கள்.

ஆனால் சாதாரண தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்ததா என்றால் அது நிச்சயமாக இடம்பெறவில்லை. இலங்கையில் எத்தனையோ தடவைகள் இனக்கலவரங்கள் இடம்பெற்றன. அவற்றில் தமிழ் பேசுகின்றவர்கள் என்ற வகையில் தோட்டத்தொழிலாளர்களும் ஆயிரக் கணக்கில் பாதிக்கப்பட்டார்கள். இடம் பெயர்ந்து சென்றார்கள். ஆனால் தொழிற்சங்கத் தலைவர்களான பல மலையகத் தமிழர்கள் இலங்கை காவல் துறையினரால் பாதுகாக்கப்பட்டார்கள். காரணம் அவர்களுக்கு அரசியல் செல்வாக்கும் அதன் வாயிலாகக் கிடைத்த பண பலம் அனைத்தும் இருந்தன. இது, மலையக மக்கள் மத்தியில் தோன்றியுள்ள வர்க்க முரண்பாடுகளை நன்கு வெளிச்சமிட்டு காட்டும் ஒரு பாடமாக விளங்குகின்றது.

இவ்வாறான நிலையில் இலங்கையில் தோட்டத் தொழிலாளர்களுக்காக, அவர்கள் மத்தியில் தொழிற் சங்க அமைப்பை முதலில் தோற்றுவித்தவர் கே. நடேசுஐயர் ஆவார். அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சம்மேளனம் என்ற அமைப்பை முதலில் தோற்றுவிக்க, தொடர்ந்து அது போலவே இலங்கை சமசமாசக்கட்சியானது அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தை ஆரம்பித்தது.

1950களில் சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்ற தொழிற்சங்கம் தோற்றம் பெற்றது. தொண்டமான் ஏனைய எல்லா அமைப்புகளையும் விட மலையக மக்களுடைய தேசிய உணர்வை திறமையாகப் பயன்படுத்தினார். அத்தோடு தனது தொழிற்சங்க அமைப்பைப் பெரிதாகக் கட்டியமைத்து பணபலம் நிரம்பிய ஒரு தொழிற் சங்க சாம்ராஜ்யமாக்கினார். அதனால் அவரை மேற் தட்டு வர்க்கத்தின் ஒரு பிரதிநிதியாக காலம் மாற்றியது. மாறி மாறி வரும் அரசாங்கங்களில் அங்கம் வகித்து அமைச்சர் பதவிகளை வகித்து ஒரு தொழிற்சங்கத் தலைவராக மட்டுமன்றி இலங்கையின் ஒரு பெரிய செல்வந்தராக வாழ்ந்து உயிர் நீத்தார். அவர் விட்டுச் சென்ற 'செல்வாக்கும்" செல்வமும்: வாக்கு பலமும் அவரது வாரிசுக்களை காப்பாற்றி நின்றன.

அதனைத் தொடர்ந்து தற்போது வரை மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கான தொழிற்சங்களின் வரலாற்றை எழுதுவதுதான் இன்றைய எமது கதிரோட்டத்தின் நோக்கமல்ல. ஆனால் அன்று பாதிக்கப்பெற்ற தோட்டத் தொழிலாளர்கள் இன்றும் பாதிப்படைகின்றார்கள். ஆனால் அவர்களை கண்டு கொள்ள தொழிற்சங்கத் தலைவர்கள் அவர்கள் பக்கம் தலை காட்டுவதே இல்லை என்பது அங்கு யதார்த்தமாகவே தோன்றும் ஒரு காட்சியாகும்.

வடக்கின் தமிழ்த் தலைவர்கள் போலவே மலையகத் தலைவர்களும் தங்கள் நலம் பேணுவதிலும், குடும்ப நலத்திலும் அக்கறையாக உள்ளார்கள். ஆளும் அரசாங்கம் பக்கத்திற்கு தலை சாய்த்து உல்லாசக் கதிரைகளில் சாய்ந்து கொள்கின்றார்கள்.

இதற்கு பல உதாரணங்கள் உள்ளன. அவற்றை பட்டியலிடுவது சாதாரணமான விடயமல்ல. ஆனால் அவ்வப்போது மலையக மக்களைப் பாதிக்கும் பல விடயங்களில் தொடர்புடைய பல நண்பர்களின் கருத்துப்படி, அங்கு பாதிக்கப்படும் மலையக மக்களுக்கு அரசியல் தலைவர்களோ அன்றி தொழிற்சங்கத் தலைவர்களோ உதவிகள் தேவைப்படும் போது அவர்கள் மத்தியில் தோன்றுபவர்களாக இல்லை என்றே தெரிகின்றது.

சில வாரங்களுக்கு முன்னர் மலையகத்தின் சில பகுதிகளில் மண்சரிவால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களுக்கு உதவிகளை வழங்கும் படி பல்வேறு இடங்களில் உள்ள சாதாரண மக்களின் உதவிகளை நாடுகின்றார்கள். "உங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களோ அன்றி தொழிற்சங்கத் தலைவர்களோ உங்களுக்கு உதவிகள் வழங்குவதற்கு வருவதில்லையா?" என்று கேட்டால் பெரும்பாலும் "இல்லை" என்றே பதில் வருகின்றது.

தங்கள் உடலை வருத்தி வேலை செய்த தோட்டத் தொழிலாளர்களின் சந்தாப் பணத்தால் செல்வந்தச் சங்கங்களாக விளங்கும் தொழிற்சங்கங்களின் குடைகளின் கீழ் குளிர் காயும் தொழிற்சங்கத் தலைவர்கள், அடுத்து பாராளுமன்ற உறுப்பினர்களாக வரவும், பின்னர் அமைச்சர்கள் ஆகவும் விரும்புகின்றார்களே தவிர தங்களுக்கு ஏணிப்படிகளாக விளங்கிய தொழிலாளர்கள் பற்றியும் சிந்திப்பதை நிறுத்திவிட்டார்களா என்றே கேட்கின்றோம். மேலும் மலையகத் தொழிலாளர்களின் சிறு சிறு கஸ்டங்களையாவது போக்கும் புண்ணியவான்களாக நீங்கள் காட்சி தரவேண்டும் என்பதையே இந்த வாரத்தில் அவர்களிடத்தில் வலியுறுத்த விரும்புகின்றோம்.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers
EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## ஒன்றாரியோப் பாடசாலைகளை... *முதலாம் பக்கத் தொடர்ச்சி*

மேலும் முதல்வர் அவர்கள் 28ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு முன்னர் மாகாணத்தில் பல தரங்களில் உள்ள மருத்துவ அதிகாரிகள் மற்றும் கல்வியாளர்கள் ஆகியோரின் முடிவுகளையும் இந்த செயல்முறைக்கு சாதகமாக உள்ள விடயங்களை அறிந்து கொள்வதற்கு ஆவலாக உள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்

இந்த நிலையில் மாகாண முதல்வர் டக் போர்ட் அவர்கள் மாகாணத்தின் முதன்மை மருத்துவ அதிகாரி வில்லியம் அவர்களின் தலைமையில் தீர்மானம் எடுக்கவுள்ள மருத்துவர்கள் மற்றும் கல்வியாளர்களின் ஆலோசனை தனது அதிகாரிகளோடு கலந்தாலோசித்து தொடர்ந்து எதிர்வரும் திங்கள் அல்லது செவ்வாய்க்கிழமை பாடசாலைகள் மீண்டும் வகுப்பறைக் கல்விக்காக திறப்பது தொடர்பான ஒரு முடிவை எடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இது தொடர்பாக ஒன்றாரியோ முதல்வர் அலுவலகத்தின் உதவியாளர் ஒருவர் கனடா உதயனுக்கு வழங்கிய விபரங்களின் படி முதல்வர் போர்டு அவர்கள் தனது அரசாங்கம் பள்ளிகளை மீண்டும் திறப்பது அல்லது அடுத்த செப்டம்பர் வரை அவற்றை மூடி வைத்திருப்பது போன்ற முடிவை எடுப்பதற்கு மேற்கூறிய மருத்துவர்கள் மற்றும் கல்வியாளர்களின் ஆலோசனைகளை முக்கியமானதாகக் கொள்வார் என்று தெரிவித்துள்ளார்.

**பெண்களுக்கு வேலைவாய்ப்பு**
ஸ்காபுறோவில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் உடனடியாக வேலைவாய்ப்புக்கள் உள்ளன.
தயவு செய்து பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்.
விபரங்களுக்கு: ஜெயா 647 669 2739
(647) 669-2739

**DZ Driver Wanted**
Looking for DZ driver for GTA & surrounding areas.
Call: NATHAN
(416) 520-1324
Email:
Sentax72@gmail.com

**தையல் வேலை வாய்ப்பு**
ஸ்காபுறோவில் Markham-Finch சந்திப்பிற்கு அருகில் உள்ள தொழிற்சாலையொன்றில் தையல் மெசினில் வேலை செய்வதற்கு உடனடியாக வேலையாட்கள் தேவை. மணித்தியாலத்திற்கு 20 டாலர்கள் வழங்கப்படும். தங்களுக்கு வசதியான நேரங்களிலும் வேலை செய்யலாம்.
தொடர்புகளுக்கு காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை அழைக்கவும். 647-986-7797

**Help Wanted**
Full-time / Part-time sprayer & sander needed for a furniture finishing shop.
Call: (416) 636-3655

**LOYAL PEST CONTROL**
Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.

Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice
RANJAN: (416) 464-2415

**BASEMENT FOR RENT**
FINCH & MORNINGSIDE
2 Bedroom bsmt for rent.
Sep entrance, laundry, kitchen
Close to TTC,
Working couple preferred
Avail: May 01/2021
Tel: (647) 581-2225

**RBS BUSINESS CONSULTANCY**
24 JEFFTON CRES, TORONTO, ON, M1G2R5
SERVICES WE PROVIDE:
BUSINESS CONSULTING
BUSINESS PLAN WRITING
BUSINESS NAME REGISTRATION
OPEN CORPORATION
HST/ BIN/ PAYROLL NUMBER REGISTRATION
MASTER BUSINESS LICENSE
CORPORATE PROFILE REPORT
CORPORATION REVIVAL
CHANGE CORPORATION INFO
IMPORT/EXPORT BUSINESS REGISTRATION
NUANS SEARCH
PERSONAL TAX
FORM FILL-UP OF ANY KIND INCLUDING IMMIGRATION
ORDER CHEQUES

CALL:
RAMNEET SAMDHYAN
(437) 771-5294
FOR ANY QUESTIONS

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை முச்சந்தியில் சுவாமி விபுலாநந்தருக்கு சிலை நிர்மாணம்

தமிழுக்கும், சமூகத்துக்கும் பணியாற்றிய எமது பெரியார்களின் உருவச்சிலைகளை மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான், செங்கலடி, கொக்கட்டிச்சோலை ஆகிய இடங்களில் உள்ள பிரதான சந்திகளில் அமைக்க ஏற்பாடு மேற்கொள்ளப்படுமென்று இராஜாங்க அமைச்சர்எஸ். வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வாழைச்சேனை சுற்று வளைவு சந்தியில் சுவாமி விபுலானந்தரின் உருவச் சிலை இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனால் அண்மையில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. இதன் மூலம் இப்பகுதி மக்களின் நீண்ட கால கோரிக்கையை இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் நிறைவேற்றி வைத்துள்ளார். இந்நிகழ்வில் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அவருக்கான பாமாலையும் இசைக்கப்பட்டது.

"சுவாமி விபுலானந்தர் உலகப் புகழ் பெற்ற ஒரு தமிழ்ப் பெரியார், உலகின் முதலாவது தமிழ்ப் பேராசிரியர், கிழக்கு மண் ஈன்றெடுத்த இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் கைவரப் பெற்ற முத்தமிழ் வித்தகர் ஆவார்" என இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தமது உரையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றும் போது தெரிவித்ததாவது, "அன்னாரின் உருவச் சிலையை இவ்விடத்தில் திறந்து வைப்பதன் மூலம் பெருமையடைகின்றேன். இவ்விடத்தில் இச்சிலையை நிறுவ எமது முற்போக்கு உறவுகள் முன்னெடுத்த போது பல விமர்சனங்களும் சவால்களும் எதிர்நோக்கப்பட்டன. ஒரு சிலர் அவரை மதவாதியாகவும், இனவாதியாகவும் சித்தரித்தனர். அவர்களுக்கு சுவாமி விபுலானந்தர் என்பவர் யார் என்ற தெளிவின்மையே இதற்கான காரணமாகும்.

அவர் இனத்தை, மதத்தை கடந்த தமிழ்ப் பெரியார் ஆவார். எமது முற்போக்கு தமிழர் கழகம் கலை,பண்பாட்டு பாசறையாகும். எமது மாவட்டத்தில் தமிழுக்கும், சமூகத்திற்கும் சேவை செய்த பெரியார்களை நினைவு கூரும் வகையில் திருவுருவச் சிலைகளை நிறுவுகின்ற பணிகளை நாங்கள் மேற்கொண்டுள்ளோம். மிக விரைவில் கிரான், செங்கலடி,மற்றும் கொக்கட்டிச் சோலை ஆகிய இடங்களில் உள்ள முச்சந்திகளில் அவற்றை நிறுவ உள்ளோம்". இவ்வாறு இராஜங்க அமைச்சர் தெரிவித்தார்.



# எந்தவொரு அந்தியசக்திகளின் நடவடிக்கைகளுக்கும் எமது தாயகமக்களின் சம்மதம் பெறப்பட வேண்டும் என்கிறார் வி.உருத்திரகுமாரன்



தமிழர் தேசத்தின் இறைமை என்பது நிலத்தில் மட்டுமல்ல, நிலத்தை அண்டிய கடலிலும் உண்டென்ற நிலையில் எந்தவொரு அந்தியசக்திகளின் நடவடிக்கைகளுக்கும் தாயகமக்களின் சம்மதம் பெறப்பட வேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

கடந்த மே 22,23ம் திகதிகளில் இணையவழி ஊடாக இடம்பெற்றிருந்த நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை அமர்வின் போது, "சுயநிர்ணய உரிமையும், ஈடுசெய்நீதியிலான பிரிந்து செல்லலும்", "இந்தியப் பெருங்கடலும் இலங்கைத்தீவில் பெருகிவரும் சீன ஆதிக்கமும்", "தமிழ்நாட்டு ஆட்சி மாற்றமும் இந்தியாவை நோக்கிய செயற்பாடும்" ஆகிய தொனிப்பொருட்களில் பல்வேறு அறிஞர்பெருமக்கள் பங்கெடுத்திருந்த கருத்தமர்வுகள் இடம்பெற்றிருந்தன.

இதில் ஈழத்தில் சீனாவின் காலப்பதிப்பு பற்றியும், சிறிலங்காவில் சீன துறைமுக பட்டிணம் பற்றியும் அமர்வில், தமிழர் தேசத்தின் இறைமை என்பது நிலத்தில் மட்டுமல்ல நிலத்தை அண்டிய கடலிலும் உண்டென்பது உறுதியாக வலியுறுத்துப்பட்டிருந்தது.

தொடர்ந்து மேற்குறித்த நிலைப்பாட்டினை தனது அமர்வின் நிறைவுரையில் வலியுறுத்திய பிரதமர் வி. உருத்திரகுமாரன், தமிழ்மக்களின் சம்மதத்தினை பெறாது எந்தவொரு அந்நிய சக்திகளின் நடவடிக்கைகளுக்கும் எதிராக தாயக மக்களும், தாயக தமிழ்அரசியல் தலைவர்களும் போராட வேண்டும் என அறைகூவல் விடுத்துள்ளார்.

இதேவேளை இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் குறிப்பாக இலங்கைத்தீவில் அதிகரித்து வரும் சீனாவின் ஆதிக்கத்தை தடுப்பதற்கான மூலோபாயமாக இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்துடன் நமது உறவுகளை சுருக்கிக் கொள்ளாமல், ஆசிய - பசுபிக் பிராந்தியங்களுடன் உறவுகளை வளர்த்துக் கொள்ள கவனம் செலுத்த வேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டது. குறிப்பாக இந்தியாவுடன் மட்டும் ஈழத்தமிழர்களின் செயற்பாடுகளை மட்டுப்படுத்தாமல் ஆசிய-பசுபிக் பிராந்திய பெருங்கடல் நாடுகளுடனும் செயற்பாடுகளை விரிவுபடுத்தப்பட வேண்டும் என்ற அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

கொரோனா வைரஸ் பெருந்தொற்று காரணமாக நேரடி அமர்வினை நடத்த முடியாத நிலையில், இணையவழியே இடம்பெற்றிருந்த இந்த அரசவை அமர்வில், ஈழத்தமிழர்களுக்கான அரசியல் தீர்வுக்கு பொதுவாக்கெடுப்பு பொறிமுறை குறித்த அதிக கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

அமைச்சுக்களின் அறிக்கை, அரசவை உறுப்பினர்களது கருத்துரைகள், மேற்சபை உறுப்பினர்களுடனான கூட்டமர்வு உட்பட பல்வேறு விடயங்களுடன் இடம்பெற்றிருந்த இருநாள் அரசவை அமர்வினை துணை அரசவைத் தலைவர் ரஜனிதேவி செல்லத்துரை அவர்கள் நடாத்தியிருந்தார்.

தமிழர் தேசத்தின் இறைமை என்பது நிலத்தில் மட்டுமல்ல, நிலத்தை அண்டிய கடலிலும் உண்டென்ற நிலையில் எந்தவொரு அந்தியசக்திகளின் நடவடிக்கைகளுக்கும் தாயகமக்களின் சம்மதம் பெறப்பட வேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

கடந்த மே 22, 23ம் நாட்கள் இடம்பெற்றிருந்த நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை அமர்வின் போது, "சுயநிர்ணய உரிமையும், ஈடுசெய்நீதியிலான பிரிந்து செல்லலும்", "இந்தியப் பெருங்கடலும் இலங்கைத்தீவில் பெருகிவரும் சீன ஆதிக்கமும்", "தமிழ்நாட்டு ஆட்சி மாற்றமும் இந்தியாவை நோக்கிய செயற்பாடும்" ஆகிய தொனிப்பொருட்களில் பல்வேறு அறிஞர்பெருமக்கள் பங்கெடுத்திருந்த கருத்தமர்வுகள் இடம்பெற்றிருந்தன.

இதில் ஈழத்தில் சீனாவின் கால்ப்பதிப்பு பற்றியும், இலங்கையில் சீன துறைமுக பட்டிணம் பற்றியும் விவாதிக்கப்பட்ட இந்த அமர்வில், தமிழர் தேசத்தின் இறைமை என்பது நிலத்தில் மட்டுமல்ல நிலத்தை அண்டிய கடலிலும் உண்டென்பது உறுதியாக வலியுறுத்துப்பட்டிருந்தது.

தொடர்ந்து மேற்குறித்த நிலைப்பாட்டினை தனது அமர்வின் நிறைவுரையில் வலியுறுத்திய பிரதமர் வி.உருத்திரகுமாரன், தமிழ்மக்களின் சம்மதத்தினை பெறாது நிலத்தில் மட்டுமல்ல, நிலத்தை அண்டிய கடலிலும் எந்தவொரு அந்நிய சக்திகளின் நடவடிக்கைகளுக்கும் எதிராக தாயக மக்களும், தாயக தமிழ்அரசியல் தலைவர்களும் போராட வேண்டும் என அறைகூவல் விடுத்துள்ளார்.

இதேவேளை இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் குறிப்பாக இலங்கைத்தீவில் அதிகரித்து வரும் சீனாவின் ஆதிக்கத்தை தடுப்பதற்கான மூலோபாயமாக இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்துடன் நமது உறவுகளை சுருக்கிக் கொள்ளாமல், ஆசிய - பசுபிக் பிராந்தியங்களுடன் உறவுகளை வளர்த்துக் கொள்ள கவனம் செலுத்த வேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டது. குறிப்பாக இந்தியாவுடன் மட்டும் ஈழத்தமிழர்களின் செயற்பாடுகளை மட்டுப்படுத்தாமல் ஆசிய-பசுபிக் பிராந்திய பெருங்கடல் நாடுகளுடனும் செயற்பாடுகளை விரிவுபடுத்தப்பட வேண்டும் என்ற அவசியமும் வலியுறுத்தப்பட்டது. கொரோனா வைரஸ் பெருந்தொற்று காரணமாக நேரடி அமர்வினை நடத்த முடியாத நிலையில், இணையவழியே இடம்பெற்றிருந்த இந்த அரசவை அமர்வில், ஈழத்தமிழர்களுக்கான அரசியல் தீர்வுக்கு பொதுவாக்கெடுப்பு பொறிமுறை குறித்த அதிக கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

அமைச்சுக்களின் அறிக்கை, அரசவை உறுப்பினர்களது கருத்துரைகள், மேற்சபை உறுப்பினர்களுடனான கூட்டமர்வு உட்பட பல்வேறு விடயங்களுடன் இடம்பெற்றிருந்த இருநாள் அரசவை அமர்வினை துணை அரசவைத் தலைவர் ரஜனிதேவி செல்லத்துரை அவர்கள் நடாத்தியிருந்தார்.

உலக செய்திகள்
World News

# உலகெங்கும் இதுவரை வைத்தியர்கள் உட்பட சுகாதாரப் பராமரிப்பு ஊழியர்கள் சுமார் 115,000 பேர் கொரோனா தொற்றுக்கு பலி

World Health Organization

உலகெங்கும் இதுவரையில் வைத்தியவர்கள் உட்பட சுகாதாரப் பராமரிப்பு ஊழியர்கள் சுமார் 115,000 பேர் கொரோனாத் தொற்றுக்கு பலயாகியுள்ளதாக அறிவித்துள்ள உலக சுகாதார ஸ்தாபனம் உடனடியாக, அனைத்து நாடுகளும் தடுப்பூசித் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டும் என அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் கெப்ரியேசுஸ் கேட்டுக்கொண்டார்.

உலகெங்கும் உள்ள சுகாதாரப் பராமரிப்பு ஊழியர்கள் வைரஸ் தொற்றுக்கு எதிரான போராட்டத்துக்காகச் செய்த தியாகத்தை அவர் பாராட்டினார். சுமார் 18 மாதங்களாகச் சுகாதாரப் பராமரிப்பு ஊழியர்கள், வாழ்வுக்கும் மரணத்துக்கும் இடையே நின்று போராடிவருவதாக அவர் கூறினார்.

தடுப்புமருந்துகள் சமமாக விநியோகம் செய்யப்பட்டிருந்தால் உலகம் முழுவதும் உள்ள சுகாதார ஊழியர்களுக்கும் முதியோருக்கும் அவற்றைக் கொடுத்திருக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டார். அதிக அளவிலான தடுப்புமருந்துகளை இருப்பில் வைத்துள்ள பணக்கார நாடுகள் அவற்றைப் பகிர்ந்துகொள்வதற்கு, டொக்டர் டெட்ரோஸ் வலியுறுத்தினார்.

கனடிய செய்திகள் Canadian News

# நாங்கள் கவனமாக இல்லாவிட்டால், எமது கனடாவின் கோவிட்–19 தொற்று வரைபு மீண்டும் உயரத்திற்குச் சென்று விழும்!

## எச்சரிக்கின்றார் கனடாவின் பிரதான பொது சுகாதார அதிகாரி டாக்டர் தெரசா டாம்

கனடாவின் கோவிட்-19 தொற்றுநோய் வரைபை நாம் தினமும் கவனித்து வரவேண்டும். அந்த வரைபில் திடீரென ஏற்படும் மாற்றம் வீழ்ச்சியாக இருந்தால் எமது அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் மகிழச்சியாக இருக்கும். ஆனால் அந்த வீழ்ச்சிக்கான மிக முக்கியமான காரணி எதுவென்றால், எமது அரசாங்கமும் மாகாணங்களும் மற்றும் பிரதேசங்களின் நிர்வாகங்களும் அவற்றின் பொது சுகாதார நடவடிக்கைகளும் தான் ஆகும்.

ஆனால் நாம் கவனமாக இல்லாவிட்டால் எமது அழகிய தேசத்தின் கோவிட்-19 வரைபில் திடீரென ஆபத்தான மாற்றம் ஏற்பட்டு அந்த வரைபு உயரத்திற்குச் சென்று விடும். இதனால் நாம் ஆயிரக்கணக்கான உயிர்களை இழக்க நேரிடும்.

இவ்வாறு தெரிவித்தார் கனடாவின் தலைமை பொது சுகாதார அதிகாரி டாக்டர் தெரசா டாம். ஓட்டாவா நகரிலிருந்து அவர் விடுத்த அறிவிப்பில் இந்த தகவல்களைக் குறிப்பிட்டுள்ளார்.

"நாங்கள் அந்த வளைவிற்கேற்ப எவ்வளவு விரைவாகச் செல்கிறோம் என்பது மிகவும் முக்கியமாகும். அந்த வளைவின் அடிப்பகுதிக்கு வந்தால், முன்வரிசைப் பணியாளர்கள் மற்றும் வைத்தியர்கள் ஆகியோர் தங்கள் சமூகங்களுடன் சேர்ந்து செய்கிற வேலையில் தொடர்ந்து மிகவும் கடுமையாக ஈடுபடுகிறார்கள்" என்ற டாக்டர் டாம், தடுப்பூசிகள் அதிகரிக்கும் போது, அந்த கீழ்நோக்கிய பாதை குறித்து நாங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.



எவ்வாறாயினும், தற்போதைய இந்த கோடை காலத்தில் சில கட்டுப்பாடுகளும் தளர்த்தப்படுவதைக் கண்டு உணர்ச்சிவசப்படாமல் தொடர்ந்தும் அவர்கள் தற்போதைய பொது சுகாதார விதிகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் எச்சரித்தார்.

# ஒன்ராறியோவை மீளவும் இயங்கச் செய்யும் வகையில் மாகாணஅரசு மூன்று படிநிலைகளில் திட்டத்தினை வெளியிட்டுள்ளது

ஒன்ராறியோ அரசாங்கம் மாநில முதன்மை சுகாதார அதிகாரியுடன் கலந்தாலோசித்ததன் அடிப்படையில் மாநிலத்தினை பாதுகாப்பான முறையில் மீளியங்கு நிலைக்குக் கொண்டுவருவதற்கான மூன்று படிநிலைகள் அடங்கிய திட்டமொன்றினை வெளியிட்டுள்ளது. இத்திட்டமானது, மாநில அளவிலான தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்களின் விகிதாசாரம் மற்றும் பொது சுகாதார கட்டமைப்பினால் வழங்கப்படும் தரவுகளில் காணப்படும் முன்னேற்றநிலை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும். மேற்படி தரவுகளின் அடிப்படையில், மே 22, 2021 முதல் ஒன்ராறியோ அரசாங்கம் மேலும் பல வெளியரங்க பொழுதுபோக்கு இடங்களை சில கட்டுப்பாடுகளுடன் திறப்பதற்கு அனுமதியளித்துள்ளது.

மாநிலத்தை மீளியங்கு நிலைக்குக் கொண்டுவருவதற்கான இத்திட்டம் பொது சுகாதார விதிமுறைகளின் வழிகாட்டுதலுக்கமைய மூன்று படிநிலைகளைக் கொண்டதாக அமையும். அவையாவன:

முதற் படிநிலை: நோய்ப்பரம்பல் ஆபத்து குறைவாக இருக்கும் கூட்டநெரிசல் அற்ற வெளிப்புற செயற்பாடுகளையும் சில்லறை விற்பனைகளையும் சில கட்டுப்பாடுகளுடன் ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கல். இதில் வெளியரங்குகளில் 10 பேர் வரை ஒன்றுகூட அனுமதித்தல், வெளிப்புற உணவருந்தும் இடங்களில் ஒரு மேசைக்கு 4 பேர் வரை அமர்ந்து உணவருந்த அனுமதித்தல், அத்தியாவசியமற்ற சில்லறை விற்பனை நிலையங்களில் அவற்றின் உள்ளடக்கத் திறனின் 15 வீதம் வரையான நபர்களை அனுமதித்தல் போன்றவை அடங்கும்.

இரண்டாம் படிநிலை: வெளியரங்கில் ஒன்றுகூடும் தொகையினை மேலும் அதிகரிப்பதுடன் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மக்கள் முகக்கவசம் அணிந்தவாறு உள்ளரங்குகளில் ஒன்றுகூடும் நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்குதல். இதன்படி, 25 பேர் வரையான வெளியரங்க ஒன்றுகூடல்களுக்கு அனுமதியளித்தல், விளையாட்டுகள் மற்றும் போட்டி நிகழ்வுகள், இரவு வெளித்தங்கல் முகாங்கள், முகக்கவசம் அணிந்தவாறும் அதன் உள்ளடக்கத்திறன் விதிகளுக்கு அமையுமாறும் அழகு மற்றும் உடல்நலம் பேணும் நிலையங்களைத் திறக்க அனுமதித்தல், கட்டடத்தின் உள்ளடகத்தத் திறனின் 15 வீதம் வரையான மக்கள் ஒன்றுகூடுவதற்கு மத வழிபாடுகள், சடங்குகள், விழாக்களை அனுமதித்தல்.

மூன்றாம் படிநிலை: கட்டுப்பாடுகளுடன்கூடிய அதேவேளையில், தொடர்ந்து முகக்கவசம் அணிந்திருக்க முடியாத, அதிகளவில் மக்கள் ஒன்றுகூடும் உள்ளக நிலையங்களை திறப்பதற்கு அனுமதித்தல். இதில் உள்ளரங்க விளையாட்டு, பொழுதுபோக்கு, உடற்பயிற்சி நிலையங்கள் அடங்கும். அத்துடன் உள்ளரங்க உணவகங்கள், அருங்காட்சியகங்கள், கலைக்கூடங்கள், நூலகங்கள், கேளிக்கை மற்றும் சூதாட்ட நிலையங்கள் அவற்றின் உள்ளடக்கத்திறனின் வரையறைக்கு ஏற்றவாறு அனுமதி வழங்கப்படும்.



ஒவ்வொரு படிநிலைகளும் 21 நாட்களைக் கொண்டதாகவும் மாநிலத்தினை அடுத்த படிநிலைக்கு நகர்த்துவதற்கான பொது சுகாதார தரவுகளை மதிப்பீடு செய்யும் காலமாகவும் அமையும். 21 நாட்களின் முடிவில் கிடைக்கப்பெறும் தரவுகளின்படி குறிப்பிட்ட சதவீதமான மக்களுக்கு தடுப்பூசிகள் வழங்கப்பட்டு, பொது சுகாதார தரவுகளில் முன்னேற்றம் காணப்படும் பட்சத்தில் மாநிலம் அடுத்த படிநிலைக்கு நகர்த்தப்படும்.

இதன்படி, முதற்படி நிலையில் பெரியவர்களில் 60 சதவீதம் வரையானோருக்கு முதலாவது சொட்டு தடுப்பூசி போடப்பட்டிருத்தல், இரண்டாம் படிநிலையில் பெரியவர்களில் 70 சதவீதம் வரையானவர்களுக்கு முதலாவது சொட்டு தடுப்பூசியும், 20 சதவீதம் வரையானோருக்கு இரண்டாவது சொட்டு தடுப்பூசியும் போடப்பட்டிருத்தல், மூன்றாம் படிநிலையில் 70 முதல் 80 சதவீதம் வரையான பெரியவர்களுக்கு முதலாவது சொட்டு தடுப்பூசியும், 25 சதவீதம் வரையாவனர்களுக்கு இரண்டாவது சொட்டு தடுப்பூசியும் போடப்பட்டிருத்தல்.

முழுமையாக மக்களுக்கு தடுப்பூசிகள் வழங்கப்பட்ட பின்னர் முகக்கவசம் அணிதல், சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றுதல், போன்றவற்றுக்கு ஒன்ராறியோ அரசாங்கம் தொடர்ந்தும் பொது சுகாதார விதிமுறைகள், ஒன்ராறியோ பொது சுகாதார கட்டமைப்பு மற்றும் ஏனைய சுகாதார நிபுணத்துவம் வாய்ந்த வல்லுனர்களின் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் முடிவுகளை மேற்கொள்ளும்.

# கனடா வழங்கிய கோவிட் நிவாரண உதவிகளின் விபரங்களை இந்தியா வெளியிட்டது



கொவிட் தொற்றின் பாதிப்பு பெரும் மடங்கு நாட்டில் உயர்ந்திருப்பதால் கடந்த ஏப்ரல் 27-ஆம் தேதி முதல் பல்வேறு நாடுகளும், அமைப்புகளும் நிவாரண மருத்துவ உபகரணங்கள் மற்றும் கருவிகளை வழங்கி வருகின்றன.

2021 ஏப்ரல் 27 முதல் மே 26 வரை பல்வேறு நாடுகள் மற்றும் அமைப்புகள் அனுப்பிய 18,006 பிராணவாயு செறிவூட்டிகள், 19,085 பிராணவாயு சிலிண்டர்கள், 19 பிராணவாயு உற்பத்திக் கருவிகள், 14,514 செயற்கை சுவாசக் கருவிகள், சுமார் 7 லட்சம் ரெமிடெசிவிர் குப்பிகள், 12 லட்சம் ∴பேவிபிரவிர் மாத்திரைகள் ஆகியவை மாநிலங்களுக்கும், யூனியன் பிரதேசங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

2021 மே 25,26 அன்று சிங்கப்பூர், ப்ரூனை, ஓமன், ஒன்டாரியோ (கனடா), எகிப்து, சிங்கப்பூர் ரெட்கிராஸ் சொசைட்டி, சேவா இண்டர்நே'னல் (ஆஸ்திரேலியா), சுவிஸ் இண்டியா சேம்பர் ஆ∴ப் காமர்ஸ், ∴போரம் ஆ∴ப் இண்டியன் ப்ரொ∴பஷனல் (ஹாங்காங்), வோக்ஸ்வேகன் (ஜெர்மனி) ஆகியவற்றிடமிருந்து பெறப்பட்ட முக்கியப் பொருட்கள்:

- பிராணவாயு செறிவூட்டிகள்: 155
- பிராணவாயு சிலிண்டர்கள்: 900
- செயற்கை சுவாசக் கருவிகள்: 1,045

பல்வேறு நாடுகள் மற்றும் அமைப்புகளிடமிருந்து வழங்கப்படும் பொருட்கள் மாநிலங்களுக்கும், யூனியன் பிரதேசங்களுக்கும் துரிதகதியில் அனுப்பி வைக்கப்படுகின்றன.

இதனை பிரத்தியேக ஒருங்கிணைப்பு மையத்தின் வாயிலாக மத்திய சுகாதார அமைச்சகம் விரிவாகக் கண்காணித்து வருகின்றது.

# கனடா–ரொரன்ரோ பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை அமைவதை கொண்டாடுவதற்கான சிறப்பு இணையவழி வைபவம்

UNIVERSITY OF TORONTO SCARBOROUGH



உலகெங்குமிருந்து தமிழ் அன்பர்கள், நிறுவனங்கள், அமைப்புக்கள், வர்த்தகப் பிரமுகர்கள் அரசு சார்ந்த நிறுவனங்கள் ஆகியவர்களின் ஆதரவோடு 3 மில்லியன் கனடிய டாலர்கள் என்ற இலக்கை எட்டியுள்ள நிலையில் மிக விரைவில் ரொரன்ரோ பல்கலைக் கழகத்தில் அமையவுள்ள தமிழ் இருக்கையை கொண்டாடுவதற்கான இணையவழி வைபவத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி அழைப்பை ரொரன்ரோ பல்கலைக் கழக நிர்வாகிகளும், தமிழ் இருக்கை குழுவினரும், கனடிய தமிழ் காங்கிரஸ் அமைப்பும் இணைந்து இந்த அழைப்பை விடுக்கின்றனர்.

---

Professor Wisdom Tettey
Vice President, University of Toronto
Principal, University of Toronto Scarborough
and
The Tamil Chair Inc., and the Canadian Tamil Congress
cordially invite you to a special event in celebration of having reached our campaign goal to establish a Chair in Tamil Studies at UTSC.

Tamil Chair Campaign Celebration
Date: **Saturday, June 12th, 2021**
Time: **10:30 a.m. - 1:00 p.m.**
Virtual Celebration: Join us below
**YouTube, Facebook**

# துறைமுக நகரம்: இலங்கை சீனாவின் கொலனியா?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



**சீ**னத் துறைமுக நகரத்தை வைத்து அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள் இலங்கை சீனாவின் கொலனியாகிவிட்டது என்று கூறுகிறார்கள். ஆனால் மெய்யான பொருளில் இலங்கை ஏறக்குறைய ஆறு நூற்றாண்டுகளுக்கு முன் சீனாவின் பிடிக்குள் இருந்தது. 1411ஆம் ஆண்டு சீனாவின் மிங் அரச வம்சத்தின் காலத்தில் கோட்டை ராச்சியம் சீனக் கப்பல் படையால் கைப்பற்றப்பட்டது. அப்போது கோட்டை இராச்சியத்தின் மன்னனாக இருந்தவர் ஒரு தமிழன். அழகேஸ்வரர். அவர் யாழ்ப்பாணத்து இராச்சியத்தை வெற்றி கொண்டார். அதனால் கிடைத்த பலம் காரணமாக கோட்டை ராச்சியத்துக்கும் அரசனாகினார். அக்காலகட்டத்தில் சீனாவின் புதையல் கப்பல் என்றழைக்கப்படும் ஒரு கப்பல் படை அணி இலங்கை தீவை ஆக்கிரமித்தது. புதையல் கப்பல் என்பதன் பொருள் கைப்பற்றிய நாடுகளிலிருந்து அபகரிக்கப்பட்ட விலைமதிப்பற்ற திரவியங்களை காவிச் செல்லும் கப்பல் என்பதாகும்.

புதையல் கப்பல் படைப் பிரிவு அழகேஸ்வரனை வெற்றிகொண்டது. சுமார் 3000 துருப்புக்கள் கோட்டை ராஜ்ஜியத்தை வெற்றி கொண்டன. அழகேஸ்வரனும் அவருடைய குடும்பமும் கைது செய்யப்பட்டு சீனாவுக்கு கொண்டு செல்லப்பட்டார்கள். எனினும் சீனத்துப் பேரரசன் அழகேஸ்வரனை விடுதலை செய்ததோடு அவருடைய இடத்துக்கு ஆறாவது பராக்கிரமபாகுவை அரசனாக நியமித்தார். அல்லது ஆறாவது பராக்கிரமபாகு சீனப் பேரரசின் ஆளுகையை ஏற்றுக் கொண்டதனால் அரசனாக இருக்க அனுமதிக்கப்பட்டார் என்றும் எடுத்துக்கொள்ளலாம்.

இப்படித்தான் சீனா ஆறு நூற்றாண்டுகளுக்கு முன் இலங்கை தீவின் கோட்டை ராச்சியத்தை ஆட்சி செய்தது. ஆனால் அது ஒரு ஆக்கிரமிப்பு. இப்பொழுது நடப்பது அப்படியல்ல. இது ஒரு வர்த்தக விரிவாக்கம். சீனப் படர்ச்சி எனப்படுவது அப்படி ஒரு வடிவத்தில்தான் முன்னெடுக்கப்படுகிறது. இலங்கைத் தீவு மட்டுமல்ல ஏற்கெனவே மாலைதீவுகள் மியான்மர் உட்பட ஆபிரிக்காவின் ஒரு பகுதி சீனாவின் கடன் பொறிக்குள் விழுந்துவிட்டது. இலங்கையிலும் சீனத்துப்பட்டினம் அப்படித்தான் பார்க்கப்படுகிறது. இந்தியாவின் தெற்கு வாசலில் சீனா நிரந்தரமாக குடியேறி விடும் என்ற அச்சத்தை அது அதிகப்படுத்தியிருக்கிறது. ஆறு நூற்றாண்டுகளின் முன் நிகழ்ந்தது ஒருவித ஆக்கிரமிப்பு. ஆனால் இப்பொழுது நடப்பது இலங்கைத்தீவின் ஆட்சியாளர்களின் ஒப்புதலோடு நிகழும் ஒரு சீன விரிவாக்கம். சீனாவை உள்ளே வரவிட்டு நாட்டின் வரைபடத்தை மாற்றும் விதத்தில் தீவுக்குள் ஒரு தீவை உருவாக்க அனுமதித்தது தனியாக ராஜபக்சக்கள் மட்டுமல்ல ரணில் விக்ரமசிங்கவும் சேர்ந்துதான். தமிழ் மக்களை வெற்றிகொள்ள எந்த ஒரு வெளிப் பிசாசோடும் கூட்டுச்சேர தயாராக காணப்பட்ட எல்லா சிங்கள ஆட்சியாளர்களும் அதற்கு பொறுப்பு.

சீன விரிவாக்கம் எனப்படுவது திறந்த சந்தை பொருளாதாரம் திறந்துவிட்ட வழிகளின் ஊடாக சீனா பெற்ற அபரிதமான ஒரு வளர்ச்சியின் விளைவுதான். கெடுபிடிப் போரின் முடிவுக்குப் பின் குறிப்பாக கம்யூனிச பொருளாதாரக் கட்டமைப்பின் தோல்விக்கு பின் உலகம் முழுவதும் பொருளாதார அர்த்தத்தில் ஓரலகு ஆகிவிட்டது. இன்டர்நெட் நாடுகளின் எல்லைகளை திறந்தது. நிதி மூலதனம் சந்தைகளின் எல்லைகளை திறந்தது. இவ்வாறாக திறந்துவிடப்பட்ட சந்தைப்பரப்பில் சீனா வெற்றிகரமாக தன்னை பலப்படுத்திக் கொண்டு விட்டது.

யுகோஸ்லாவியாவைச் சேர்ந்த தத்துவவியலாளர் ஸ்லோவாக் சிசிக் பல ஆண்டுகளுக்கு முன் பின்வருமாறு சொன்னார் "முதலாளித்துவத்துக்கும் ஜனநாயகத்துக்கும் இடையிலான திருமணம் முடிவுக்கு வந்துவிட்டது" என்று. அதன் பொருள் என்னவென்றால் திறந்த சந்தை பொருளாதாரத்துக்கும் சீனாவின் ஜனநாயகம் இல்லாத மையப்படுத்தப்பட்ட அதிகாரக் கட்டமைப்புக்கும் இடையே திருமணம் நிகழ்ந்து விட்டது என்பதுதான். இவ்வாறு ஜனநாயகமற்ற ஓர் ஆட்சி கட்டமைப்புக்கும் திறந்த சந்தைப் பொருளாதாரத்துக்கும் இடையில் நிகழ்ந்த திருமணத்தின் விளைவுதான் இப்பொழுது உலகம் எதிர் கொள்ளும் சீன விரிவாக்கம் ஆகும். சில சமயங்களில் வுகானில் தோன்றிய வைரஸும் அப்படி ஒன்றாக இருக்கலாம்.

இவ்வாறு திறந்த சந்தை பொருளாதாரத்தின் அனுகூலங்களை பயன்படுத்தி சீனப் பொருளாதாரம் உலகின் ஏனைய ஜனநாயக பொருளாதாரங்களை விடவும் சக்தி மிக்கதாக மேலெழுந்தது. அது வறிய சிறிய நாடுகளை மிக இலகுவாக தனது கடன் பொறிக்குள் வீழ்த்தி விட்டது. மேற்கத்திய ஜனநாயக அரசுகள் வறிய நாடுகளுக்கு உதவி செய்யும் பொழுது மனித உரிமைகளை ஒரு முன் நிபந்தனையாக வைக்கின்றன. ஆனால் சீனாவுக்கு மனித உரிமைகள் ஒரு பொருட்டே அல்ல. எனவே எந்தவிதமான முன் நிபந்தனையும் இன்றி உதவி செய்யத் தயாரான சீனாவை நோக்கி வறிய சிறிய நாடுகள் போவதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

இலங்கைத் தீவுக்கும் அதுதான் நடந்தது. உள்நாட்டுப் போரினால் இலங்கைத் தீவின் பொருளாதாரம் மோசமாக வீழ்ச்சி கண்டிருந்த ஒரு பின்னணியில் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த கையோடு சீனாவின் உதவியோடு இலங்கை அரசாங்கம் தன்னை நிமிர்த்திக் கொள்ள முயற்சித்தது. இலங்கைத் தீவு போர் காரணமாக ஏற்கனவே கடனாளியாக இருந்தது. இந்நிலையில் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்ததும் இலங்கை அரசாங்கத்திற்கு நிபந்தனையற்ற உதவிகளை வழங்க சீனா தயாராக இருந்தது. ஏனெனில் சீனாவின் முத்துமாலை திட்டத்தில் இலங்கை ஒரு முக்கியமான முத்து என்று சீனா கருதியது. அதேசமயம் அப்பொழுது இலங்கை தீவை ஆட்சி செய்த ராஜபக்ஷக்களுக்கு மேற்கை நோக்கியோ அல்லது இந்தியாவை நோக்கியோ செல்வதில் சில வரையறைகள் இருந்தன.

மேற்கில் மிகப் பலமான ஒரு தமிழ் டயஸ்போரா இருந்தது. அது போரின் தோல்வியை ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கவில்லை. அதோடு ஐநாவில் இலங்கை தீவை ஒரு குற்றவாளியாக கொண்டு வந்து நிறுத்த வேண்டும் என்று அந்த டயஸ்போரா கடுமையாக உழைத்தது உழைத்துக் கொண்டிருக்கிறது. எனவே மேற்கு நாடுகளை நோக்கி செல்லும் பொழுது அங்குள்ள பலமான தமிழ் டயஸ்போரா ஒரு தடை. மேற்கு நாடுகளும் மனித உரிமைகளை ஒரு முன்நிபந்தனையாக வைத்தே உதவிகளைச் செய்கின்றன. அதுபோலவே இந்தியாவைப் பொறுத்தவரை அங்குள்ள 8 கோடி தமிழர்கள் ஈழத்தமிழர்களுக்காக எப்பொழுதும் நொதிக்ககூடிய நிலைமைகள் காணப்படுகின்றன. அந்த நிலைமைகளை முன்வைத்து இந்தியா இலங்கைத் தீவில் தனது பேரத்தை அதிகப்படுத்தக்கூடிய வாய்ப்புகள் இருப்பதால் இந்தியாவையும் முழுமையாக நம்ப இலங்கையில் உள்ள அரசாங்கங்கள் தயாராக இல்லை. அதேசமயம் சீனாவில் ஒரு பலமான தமிழ்ச்சமூகம் இல்லை. தவிர சீனாவுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய பண்பாட்டுப் பிணைப்புக்களும் இல்லை.

இவை எல்லாவற்றையும் விட ஒரு முக்கியமான நடைமுறைக் காரணம் உண்டு. அது என்னவெனில் ராஜபக்சக்கள் யுத்த வெற்றியை ஒரு முதலீடாக வைத்து தமது வம்ச ஆட்சியை ஸ்தாபிக்கும் நோக்கத்தோடு யுத்த வெற்றியை ஒரு கட்சிக்கும் ஒரு வம்சத்துக்கும் உரியதாகவும் நிறுவனமயப்படுத்தினார்கள். அதாவது யுத்த வெற்றியை அவர்கள் ஒரு அரசியல் வெற்றியாக மாற்ற தயாராக இருக்கவில்லை. இவ்வாறு யுத்த வெற்றிக்கு தலைமை தாங்கி யுத்த வெற்றி வாதத்தை முன்னெடுக்கும் ஒரு அரசாங்கமானது மேற்கை நோக்கியோ இந்தியாவை நோக்கியோ போவதில் அடிப்படையான வரையறைகள் உண்டு.மாறாக சீனாவை நோக்கி போவதை தவிர அவர்களுக்கு வேறு எந்த தெரிவும் இல்லை. இப்படித்தான் ராஜபக்சக்கள் சீனாவை நெருங்கினார்கள். சீனாவுக்கும் தேவை இருந்தது. எனவே படிப்படியாக சீன விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக மாறிய ஸ்ரீலங்கா இப்பொழுது ஏறக்குறைய அதன் பங்காளியாகவே மாறியிருக்கிறதா என்ற கேள்வியை துறைமுக நகரம் எழுப்பியிருக்கிறது.

திறந்த சந்தைப் பொருளாதாரக் கட்டமைப்புக்குள் ஒரு நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கத்தோடு உருவாக்கப்படும் சுதந்திர வர்த்தக வலையங்கள் மற்றும் முதலீட்டு வலையங்கள் போன்றன விசேட சலுகைகளை பெற்ற கட்டமைப்புக்களாகவே உருவாக்கப்படுகின்றன. அவை உள்நாட்டுச் சட்டங்கள் பலவற்றிலிருந்து சிறப்பு விடுப்பு உரிமையை கொண்டிருப்பதை காணலாம். பூனை கறுப்பா வெள்ளையா என்பதல்ல பிரச்சினை அது எலி பிடித்தால் சரி என்று கூறிக்கொண்டு சீனா தனது பிராந்தியங்களை திறந்த சந்தை பொருளாதாரத்தை நோக்கி திறந்த பொழுதும் இவ்வாறு விசேஷ சலுகைகள் பிராந்தியங்களுக்கு வழங்கப்பட்டன. எனவே திறந்த சந்தைப் பொருளாதாரத்தின் கீழ் இவ்வாறான பொருளாதார வலயங்கள் உருவாக்கப்படும் பொழுது அவற்றுக்கு விசேட அந்தஸ்து வழங்கப்படுவது உண்டு. ஆனால் இங்கு பிரச்சினை சீன பட்டினத்துக்கு வழங்கப்பட்ட அவ்வாறான விடுப்புரிமைகள் அப்பட்டினத்தை இலங்கைத்தீவின் ஆட்சி அதிகாரத்துக்கு அப்பாற்பட்டவையாக இலங்கைத் தீவின் நாடாளுமன்றத்துக்கு பதில்கூற தேவையில்லாத ஒரு கட்டமைப்பாக உருவாக்கக் கூடியவையா என்பதுதான்.

மாலைதீவுகளைப் போன்று சீனாவின் அயல் நாடாகிய லாவோசை போன்று சில ஆபிரிக்க நாடுகளை போன்று மியான்மரை போன்று இலங்கைத் தீவும் அதன் கடன் பொறியில் இருந்து மீள்வதற்கு எதிர்காலத்தில் எதையெதை நீண்டகால அடிப்படையில் விற்க வேண்டிவரும் என்பதே இங்கு உள்ள மிக முக்கியமான கேள்வியாகும்.

மாலை தீவுகளை சீனக்கடன் பொறிக்குள் இருந்து முழுமையாக விடுவிப்பதென்றால் அங்குள்ள ஆளில்லாத் தீவுகளில் ஒன்றை விற்க வேண்டி இருக்கும். என்று ஒரு இந்திய பாதுகாப்புத் துறை ஆய்வாளர் கூறுகிறார். அவ்வாறு விற்றால் சீனா இந்துமா கடலில் இந்தியாக்கு முன் நிரந்தரமாக வந்து குந்திவிடும். அப்படித்தான் மியான்மரிலும். அங்கே சீன சார்பு ராணுவ ஆட்சி அகற்றப்பட்டு மேற்கத்திய சார்பு ஆங் சாங் சூகி பதவிக்கு வந்தார். ஆனால் அவராலும் சீனாவின் செல்வாக்குக்குக்கு வெளியே சிந்திக்க முடியவில்லை. சீனாவுக்கு வங்காள விரிகுடாவில் எல்லைகள் இல்லை. எனவே மியான்மரின் கியாப்கியூ துறைமுகத்தை அது தனக்கான வங்காள விரிகுடா வாசலாக பயன்படுத்தி வருகிறது. கியாப்கியு துறைமுகம் எனப்படுவது பர்மிய வரைபடத்தில் வங்காள விரிகுடாவில் காணப்படும் பர்மாவை நோக்கி வாயை திறந்து கொண்டிருக்கும் ஒரு மாட்டுக் கன்றின் வடிவிலான ஒரு நிலத் துண்டு ஆகும்.

அந்நிலத் துண்டில் சீனாவின் மிகப்பெரிய எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று 2013ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. இந்த சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து எண்ணெய் விநியோக் எரிவாயு விநியோக குழாய்கள் மியான்மரை குறுக்கறுத்து சீனாவை நோக்கி செல்கின்றன. இந்த நிலத் துண்டு ரோஹியங்யா முஸ்லிம்களின் சனத்தொகை செறிவாக உள்ள பகுதிகளுக்குள் வருகிறது. இது காரணமாகவே ரோகியங்கா இனப்படுகொலை எனப்படுவது பிராந்திய பரிமாணம் மிக்கதாக மாறியது. ரோஹிங்கியா முஸ்லிம்களின் விவகாரத்தை மேற்கு நாடுகள் சீனாவுக்கு எதிராக கையாளக்கூடிய நிலைமைகளுக்கு பின்னால் இருக்கும் புவிசார் அரசியல் காரணம் அதுதான்.

உலகப் புகழ் பெற்ற ஆங் சாங் சூகி தலைவியாக வந்த பின்னரும் கூட அவரால் சீனாவை மீறிச் செயற்பட முடியவில்லை. முடிவில் இந்த ஆண்டு சீனச்சார்பு ராணுவம் அவரை கவிழ்த்துவிட்டு மறுபடியும் ஆட்சியை கைப்பற்றியிருக்கிறது. இது சீன விரிவாக்கத்தின் மற்றொரு முனை. ஸ்ரீலங்காவிலும் அப்படித்தான். பட்ட கடனை மீறிச்சிந்திக்க மேற்கின் செல்லப் பிள்ளையான ரணில் விக்ரமசிங்கவாலும் முடியவில்லை. அதனால்தான் அவர் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு நீண்டகால குத்தகைக்கு எழுதிக்கொடுத்தார். சீன நிதி நகரத்துக்கான திருத்தப்பட்ட உடன்படிக்கையை அவர்தானே தயாரித்தார்?

எனவே இங்கு ஒரு விடயத்தை நாங்கள் தொகுத்து பார்க்கலாம். மேற்கு நாடுகள் சீன விரிவாக்கத்திற்கு எதிராக ஆசிய ஆபிரிக்க பிராந்தியங்களில் ஆட்சி மாற்றங்களை ஒரு உபாயமாக கைக்கொண்டு வருகின்றன. ஆனால் ஆட்சிகள் மாறினாலும் சீனாவின் கடன் பிடிக்குள் இருந்து அந்த அரசுகளை விடுவிப்பது கடினமானது என்பதற்கு மலேசியா மியான்மர் மற்றும் சிறிலங்கா போன்றவை நல்ல உதாரணங்களாகும். இந்த அடிப்படையில் கூறின், இலங்கைத் தீவிலிருந்து சீனாவை அகற்ற எந்த ஒரு உள்நாட்டுச் சக்தியாலும் இப்போதைக்கு முடியாது என்பதே மெய்நிலை.

# இரசாயன கசிவு காரண கடல் பயணத்தில் தீப்பிடித்த சிங்கப்பூர் நிறுவனத்திற்குச் சொந்தமான கப்பலின் தீ அணைக்கப்பட்டுவிட்டது



## ஆனால் இரசாயன பதார்த்தங்கள் இலங்கைக் கரைகளை சென்றடைவதால் பாரிய ஆபத்துக்கள் ஏற்படலாம் என அச்சம்

## இந்தியத் துறைமுகங்களில் தரிப்பதற்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டதால் கொழும்பை நோக்கிச் சென்ற **X-Press Pearl**

இரசாயன கசிவு காரணமாக கடல் பயணத்தில் தீப்பிடித்த சிங்கப்பூர் நிறுவனத்திற்க சொந்தமான X-Press Pearl கப்பல்தீ அணைக்கப்பட்டுவிட்டது எனவும் இரசாயன பதார்த்தங்களின் எச்சங்களும் எரிந்த கொள்கலன்களும் கொழும்பை அண்டிய கரைகளை சென்றடைவதால் பாரிய ஆபத்துக்கள் ஏற்படலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரத்தில் சனிக்கிழமையன்று கொழும்பிலிருந்து 18 கிலோ மீற்றர் தூரத்தில் கடலில் கொழும்பு நோக்கி வந்து கொண்டிருந்த மேற்படி X-Press Pearl கப்பலிலிருந்து ஏற்கெனவே 1000 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பாலிருந்தே இந்த இராசயனக் கசிவு ஏற்படத் தொடங்கியிருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாவும் இவ்வாறு வருகின்ற வழியில் இந்தியத் துறைமுகம் ஒன்றில் தரிப்பதற்கு அனுமதி கேட்ட இந்த கப்பலின் தொடர்புப் பகுதிக்கு அனுமதி மறுக்கப்பட்டதால் கப்பலானது கொழும்பை நோக்கி தனது பயணத்தை தொடர்ந்ததாகவும், ஆனால் ஏற்கெனவே இந்த கசிவு இருந்ததை கப்பல் பணியாளர்கள் அறிந்திருந்தார்களா என்ற விபரங்கள் வெளியிடப்படவில்லை.

மேற்படி கப்பலில் பல்வேறு தரங்களில் 25 பணியாற்றிக் கொண்டிருந்ததாகவும், அவர்கள் அனைவரும் பிலிப்பைன், இந்தியா, சீனா மற்றும் ரஸ்யா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்றும் மேலும் கப்பலில் 1486 கொள்கலன்கள் ஏற்றப்பட்டிருந்தாகவும் அதில் 25 தொன் நிறையுள்ள நைத்திரிக் அமிலம் உட்பட பல இரசாயன பதார்த்தங்கள் இருந்ததாவும் கப்பல் நிறுவனத்தின் அதிகாரிகள் கொழும்புக்கு அனுப்பிவைத்துள்ள தகவல்களில் குறிப்பிடப்பட்டுள்ள்ன. இந்த தீ கொழும்புத் துறைமுகத்திற்க மிக அருகில் ஏற்பட்டிருந்தால் கொழும்பிற்கும் துறைமுகத்திற்கும் ஏன், சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள "துறைமுக நகரத்திற்கும்" பாரிய சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்றும் செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

கப்பலின் தீ அணைக்கப்பெற்றாலும், வெள்ளவத்தை, பம்பலப்பிட்டிய மற்றும் தெஹிவளை ஆகிய இடங்களில் இந்த இரசாயனப் பதார்த்தங்கள் அதிகளவில் கரை ஒதுங்கியுள்ளன என்றும் தற்போது தெரிய வருகின்றது.



சிங்கப்பூர் நிறுவனத்துக்குச் சொந்தமான குறித்த கப்பல் கொழும்பு துறைமுகத்துக்கு நுழைவதற்கு முன்னதாக இந்தியா மற்றும் கட்டார் துறைமுகங்களுக்குள் நுழைய முயன்றதாகக் கூறப்படுகிறது. கப்பலின் உரிமையைக் கொண்ட சிங்கப்பூர் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் டிம் ஹார்ட்னோல், கப்பல் தீப்பிடித்தமைக்குக் காரணம் அது கொண்டு செல்லும் இரசாயனங்கள் கசிந்ததுதான் என இலங்கை அரசிற்குத் தெரிவித்துள்ளார்.

தற்போத இந்தக் கப்பலின் தீ அணைக்கப்பட்டாலும், கோடிக்கணக்கான டாலர்கள் பெறுமதியான நஸ்டம் ஏற்பட்டுள்ளதாகவும், இதேவேளை கப்பல் முழுவதுமாக சேதமடைந்துள்ளதை கப்பல் நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த கப்பல் தீப்பிடித்த சம்பவம் தொடர்பாக ஆரம்பத்தில் கிடைத்த விபரங்கள் பின்வருமாறு உள்ளன.

கொழும்பு துறைமுகத்தில் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த மேற்படி கப்பலான எக்ஸ்பிரஸ் பர்ல் கப்பல் முழுமையாக அழிந்தால் இலங்கையில் அமில மழை பெய்யும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. மழையுடன் அமில மழை பெய்யும் ஆபத்துக்கள் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. இதனால் இலங்கையின் கடல் கட்டமைப்பு உட்பட முழு சுற்றுச்சூழலும் கடுமையாக பாதிக்கப்படக்கூடும் என்று மத்திய சுற்றுச்சூழல் ஆணையம் தெரிவித்திருந்தது.

மேலும் கப்பலில் உள்ள இரசாயணங்கள் காரணமாக நீண்டகால பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என ஆணையத்தின் தலைவர் எஸ். அமரசிங்க தெரிவித்திருந்தார். அத்துடன் கப்ப்ல் தீப்பற்றிக் கொண்டிருந்தபோது கடலில் விழுந்த பொருட்களை மக்கள் தொடுவதனை தவிர்க்குமாறு அவ்வேளை பொலிசார் கேட்டிருந்தும் அதை மக்கள் செவிமடுக்கவில்லை என்றும் கூறப்பட்டது.

கடந்த 20ம் திகதி கொழும்பு துறைமுகத்துக்கு வட மேல் திசையில், 9.5 கடல் மைல் தூரத்தில், கொழும்பு துறைமுகத்துக்குள் நுழையும் நோக்குடன் நங்கூரமிடப்பட்டிருந்த சரக்குக் கப்பலில் பரவிய திடீர் தீ மிக மோசமான நிலையில் அக்கப்பலை ஆட்கொண்டுள்ள நிலையில், அடுத்த நாள் குறித்த தீயானது கப்பல் முழுதும் பரவியது.

கப்பலின் பின் பகுதியில் பரவ ஆரம்பித்து தீ பின்னர் கப்பலின் முன் பகுதி வரை அனைத்து பகுதிகளையும் ஆட்கொண்டதாகவும் தொடர்ந்து புதன்கிழமையன்று காலை விமானப்படையின் பெல் 212 ரக ஹெலிகொப்டர் ஊடாக முன்னெடுத்த மேற்பார்வையில் உறுதி செய்யப்பட்டது.



எவ்வாறாயினும் புதன்கிழமை மாலையாகும் போது கப்பலின் நடுப் பகுதியில் தீ பரவல் சற்று தணிந்திருந்ததாகவும், முன், பின் பகுதிகளில் தொடர்ந்தும் பாரிய தீ பரவலை அவதானிக்க முடிந்ததாகவும் கடற்படை ஊடகப் பேச்சாளர் கெப்டன் இந்திக டி சில்வா அப்போது தெரிவித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கதாகும் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் தொடர்ந்து புதன்கிழமை முழுநாளும் குறித்த கப்பலை நெருங்க முடியாத நிலை காணப்படுவதாகவும், இதனிடையே, குறித்த கப்பல் முழுதும் தீ பரவியுள்ள நிலையில், கப்பலின் எண்ணெய் தாங்கிக்கு தீ பரவும் அபாயம் ஏற்பட்டிருந்தது என்றும் கூறப்பட்டது.

அவ்வாறு கப்பல் எண்ணெய் தாங்கிக்கு தீ பரவினால் கப்பல் வெடித்து சிதறும் அபாயம் காணப்படுவதாக சமுத்திரவியல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி லஹந்தபுர நேற்று முன்தினம் குறிப்பிட்டார். இது தொடர்பில் சர்வதேச நிபுணத்துவம் மிக்க நிறுவனம் ஒன்றுடன் நாம் இணைய வழியே தொடர்பு பட்டுள்ளோம். எண்ணெய் தாங்கி வெடித்தால், பெரும்பாலும் தற்போதைய காலநிலை, காற்றின் திசைக்கு அமைய அது நீர் கொழும்பு மற்றும் அதனை அண்மித்த கடற் பகுதியை வெகுவாக பாதிக்கும் என அனுமானித்துள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.



இவ்வாறான நிலையில், அண்மையில் கிழக்கு கடலில் தீ விபத்துக்கு உள்ளான நியூ டயமண்ட் கப்பலின் எண்ணெய் கசிவினை கட்டுப்படுத்த உதவிய இந்திய கடலோர காவற்படை கப்பல்கள் அழைக்கப்பெற்று கொழும்பு கடலில் நிலை கொள்ளச் செய்யப்பட்டிருந்தன. எக்ஸ்பிரஸ் பேர்ள் சரக்குக் கப்பலின் தீ ஆபத்தான கட்டதை அடைந்த நிலையிலேயே, கடல் சூழல் சார் பாதுகாப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் மிக நிபுணத்துவம் பெற்ற தொழில் நுட்பத்துடன் கூடிய கப்பல்களே இவ்வாறு கொழும்பை வந்தடைந்து உரிய இடங்களில் நிலைகொள்ளச் செய்யப்பட்டன.

கடற்படை தளபதி வைஸ் அத்மிரால் நிசாந்த உலுகேதென்னவின் கோரிக்கை பிரகாரம், இந்திய கடலோர காவற்படைக்கு சொந்தமான "வைபாவ், வஜ்ரா மற்றும் சமுத்ரா பிரகாரி ஆகிய கப்பல்கள் கொழும்பை சென்றடைந்தன. இக்கப்பல்களுக்கு மேலதிகமாக இந்திய கடலோர காவல் படையின் லிலி ட்ரோலர் படகும் தீப் பரவலை கட்டுப்படுத்தும் பணிகளுக்காக கொழும்பு கடலை அடைந்தன.

"கப்பலின் தீ மிக ஆபத்தாக பரவி வரும் நிலையில், கப்பலை நெருங்க முடியாத சூழல் உள்ளது. இந்தியாவின் உதவியும் தீயணைப்பு நடவடிக்கைகளுக்காக பெறப்பட்டுள்ளது. அதில் இந்தியா, கடல் சார் சூழல் பாதுகாப்பு தொடர்பில் நிபுணத்துவம் மிக்க கப்பல்களையும் அனுப்பியுள்ளது. குறிப்பாக இந்திய அதிகாரிகள் தீ பற்றி எரியும் கப்பலை சூழ உள்ள பிரதேசத்தின் வெப்பத் தன்மையை குறைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்." என இந்தியாவின் ஒத்துழைப்பு குறித்து கேட்ட போது கடற்படை ஊடகப் பேச்சளர் கெப்டன் இந்திக டி சில்வா அப்போது செய்தி நிறுவனங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

இதேவாளை இந்திய கடலோர காவற்படையின் டோனியர் ரக விமானம் தீயணைப்பு மற்றும் சமுத்திரவியல் சூழல் பாதுகாப்பு பணிகளுக்கு தயாராக இருந்தது. சிங்கப்பூர் கொடியுடன் கூடிய எக்ஸ்பிரஸ் பேர்ள் எனும் குறித்த இந்த வி கப்பலில் கடந்த 19 ஆம் திகதி பிற்பகல் இந்த திடீர் தீ பரவல் ஆரம்பித்துள்ளதாக, தமக்கு அப்போது அறிவிக்கப்பட்டதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கெப்டன் இந்திக டி சில்வா தெரிவிருந்தார்.



தீ பரவல் குறித்த தகவல் கடற்படையினருக்கு கிடைக்கப் பெற்றதும், கடற்படையின் ஶ்ரீலங்கா சாகர, சிதுரல ஆகிய ஆழ் கடல் கண்கானிப்பு கப்பல்கள், அதி வேக தாக்குதல் படகொன்றும் தீயணைப்பு பணிகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டன. இதனைவிட துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான 3 டக் படகுகளும் தீயணைப்பு பணிகலில் ஈடுபட்டு வந்தன.

இந்நிலையிலேயே பல மணி நேர போராட்டத்தின் பின்னர் கடந்த 21 ஆம் திகதி தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருந்தது.

எனினும் இவ்வாறான பின்னணியில் தொடர்ந்து தீயணைப்பு நடவடிக்கைகளுக்காக விமானப்படையின் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. விமானப்படையின் பெல் 212 ரக ஹெலிகொப்டர் ஒன்று தீயணைப்பு நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்ப்ட்டதாக விமானப்படை பேச்சாளர் குறூப் கெப்டன் தெரிவித்திருந்தார கூறினார். இதன்போது 425 கிலோ தீயணைப்பு இரசாயனம் கப்பல் மீது தூவப்பட்டதுடன், கப்பலின் நிலை தொடர்பில் துல்லியமான புகைப்படங்களை எடுத்து, கப்பல் மீட்புக் குழுவினருக்கு வழங்கியகவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான நிலையில், குறித்த சரக்குக் கப்பலின் தீயை அணைக்க, கப்பல் மீட்புக் குழுவும், கடற்படை, விமானப்படை ஆகியன இணைந்து செயற்பட்ட நிலையில், கப்பல் வெடித்து எண்ணெய் கசிவு ஏற்பட்டால் அதனை கையாளத் தக்கவிதமான தயார்படுத்தல்களும் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

ஆனால் தற்போது, கப்பலின் எண்ணைத் தாங்கி வெடித்து பாரிய தீ ஏற்படவிருந்த ஆபத்து நீங்கி கொழும்புத் துறைமுகத்திற்கு அண்மையில் அமைதி நிலவினாலும், கப்பலிலிருந்து கசிந்த இரசாயப் பதார்த்தங்களால் தொடர்ந்து கொழும்பை அண்டிய கரைரோரப் பகுதிகளில் வழைமைக்கு மாறான நிலை தோன்றி, மீனவர்கள் தங்கள் தொழிலுக்கு செல்ல முடியாத நிலையில் மீன்களும் ஏனைய கடற் பிராணிகளும் உயிரிழந்த நிலையில் கரை வந்து சேர்வதாகவும் செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

# என்றோ ஒரு நாள் இஸ்ரேலுக்கு 'இருக்க' இடம் கொடுத்த பாலஸ்த்தீன மக்கள் அவர்களால் அழிவை சந்தித்த வண்ணமே உள்ளனர்

- கனடா செந்தூரன்



காசா பகுதியில் இஸ்ரேலுக்கும் பலஸ்தீன ஆயுதப் போராட்டக் குழுவான ஹமாஸுக்கும் இடையே தொடர்ச்சியாக 11 போர் வன்முறைகள் நடைபெற்று தற்போது போர்நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. இதனையிட்டு பலஸ்தீன மக்கள் நிம்மதி அடைந்திருந்தாலும் இனிவரும் நாட்கள் எவ்வாறு இருக்கப்போகின்றன என்பதும், உலக நாடுகளில் பல நாடுகள் இஸ்ரவேலின் கொரூரமான தாக்குதல்களை தட்டிக் கேட்காததோடு இஸ்ரேலின் பக்கமே தங்கள் ஆதரவைக் காட்டிவருகின்றன என்பதை பாலஸ்த்தீனிய மக்கள் அறிந்துள்ளன என்ற வகையிலும், அவர்களது மன அமைதி நிரந்தரமானது அல்ல என்பது அவர்களுக்கு நன்கு தெரிந்த ஒன்றாகவே உள்ளது.

இந்த நிலையில் ஹமாஸ் அமைப்பு இஸ்ரேலை நோக்கி 4,000 ரொக்கெட்டுகளை ஏவ, பதிலுக்குக் காசாவில் 1,500 இலக்குகளை இஸ்ரேலிய இராணுவம் தாக்கியுள்ளது. இத்தாக்குதலினால் காசாவில் 100க்கும் மேற்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட குறைந்தது 243 பேர் கொல்லப்பட்டதாக அதன் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மறுபுறத்தில் குறைந்தது 225 தீவிரவாதிகளைக் கொன்றதாக இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது. இம்மோதலில் இஸ்ரேலில் இரண்டு குழந்தைகள் உட்பட 12 பேர் கொல்லப்பட்டதாக அதன் மருத்துவத்துறை தெரிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான கடந்த கால மோதல்கள் பலவாகும். இத்தகைய போர்நிறுத்தங்களுடன் மோதல் முடிவடைந்ததையும், அதன் பிறகு நடந்தவைகளையும் கருத்தில் கொண்டால், போர் மீண்டும் தொடங்க அதிக வாய்ப்புகள் இருக்கின்றது என்பது குறிப்பிடதக்கது.

உள்ளூர் நேரப்படி வெள்ளிக்கிழமை 02:00 மணிக்கு வியாழக்கிழமை 11:00 சண்டையை நிறுத்த இரு தரப்பினரும் ஒப்புக் கொண்டனர். இக்காலத்திற்கு முன்னதாக, காசா மீது இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல்கள் மற்றும் இஸ்ரேல் மீதான ரொக்கெட் தாக்குதல்கள் நடந்ததாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

போர் நிறுத்தத்திற்கான பேச்சுவார்த்தைகள் குறித்த அதிக தகவல்கள் திரைக்குப் பின்னால் நடைபெற்று வருவதனால் இதன் அதிகமான விபரங்கள் வெளியிடப்படவில்லை.

இஸ்ரேல் "பரஸ்பர மற்றும் நிபந்தனையற்ற" போர் நிறுத்தத்திற்கு ஒப்புக் கொண்டதாக இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் ஓர் அறிக்கையை வெளியிட்டு இருந்தது என்பது குறிப்பிட்டதக்கது.

ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு ஜெருசலேமில் (இஸ்லாத்தின் புனிதமான தலங்களில் ஒன்று) மற்றும் அருகிலுள்ள மாவட்டமான ஷேக் ஜாராவில் உள்ள அல்-அக்சா மசூதியை விடுவிப்பதாக இஸ்ரேல் ஒப்புக் கொண்டதாக காசாவில் ஹமாஸ் இயக்கத்தின் தலைவர் ஒருவர் கூறியதாய பி.பி.சி செய்தியில் குறிப்பிடப்பட்டு இருந்தது. பலஸ்தீன குடும்பங்களை வெளியேற்றி யூதக் குடும்பங்கள் குடியேறிய பகுதி அது. இருப்பினும், இதை இஸ்ரேல் மறுத்தது என்பதும் முக்கிய விடயமாகும்.

தற்போது நடைபெற்ற பிரச்சினைக்கு இரு தரப்பினருக்கும் இடையிலான மோதலுக்குக் காரணமாயிருந்தவை இவ்வாறான இரு விவகாரங்கள்தான். காசா மீதான இஸ்ரேலிய வான் தாக்குதல்கள் ஹமாஸ் உடனான சமன்பாட்டையே மாற்றிய ஒரு சிறப்பான வெற்றி என்று பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியுள்ளார்.

காசா பகுதிக்குள் ஒரு சந்திப்பை மனித நேய உதவிகளுக்காகத் திறந்து விட இஸ்ரேல் தயாராக இருப்பதாகக் கூறப்படுகிறது. இஸ்ரேல் முழுவதும் நடப்பில் இருக்கும் பெரும்பாலான அவசரகாலக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு, சில நாட்களில் வழக்கமான விமானப் போக்குவரத்து மீண்டும் தொடங்கவுள்ளதாகவும் தெரிகிறது.

இந்தப் போர் நிறுத்தத்திற்குக் காலவரையறை எதுவும் குறிப்பிடப்படவில்லை. உலகத் தலைவர்கள் காலவரையின்றி இது நீடிக்கும் என்ற தமது நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளனர். போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க, டெல் அவிவுக்கு ஒன்றும் காசாவுக்கு ஒன்றுமாக இரண்டு பிரதிநிதிக் குழுக்களை அனுப்புவதாக எகிப்து தெரிவித்துள்ளது. இதை நிரந்தரமாகப் நீடிக்க வைப்பதற்கான வழிகளை அவை கவனிக்கும் என்று அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இந்த நடவடிக்கை முன்னேற்றத்திற்கு "உண்மையான வாய்ப்பை" அளித்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

"எகிப்து, ஐ.நா, அமெரிக்கா மற்றும் இதைச் சாத்தியப்படுத்துவதில் பங்கு வகித்த மற்றவர்களையும் நாங்கள் பாராட்டுகிறோம்" என்று ஐரோப்பியன் ஒன்றியத்தின் அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

இரு தரப்பும் போர் நிறுத்தத்தை உறுதியுடன் செயல்படுத்தும் என்று தான் நம்புவதாக சீனா தெரிவித்துள்ளது.

பிரிட்டிஷ் பிரதமர் போரிஸ் ஜோன்சனும் போர்நிறுத்தத்தை வரவேற்றுள்ளார். ஆனால் இரு தரப்பினரும் இப்போது மோதலுக்கு நீடித்த தீர்வை காண வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இருப்பினும், இந்தப் போர் நிறுத்தம் இஸ்ரேலுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையிலான அடிப்படை பிரச்சினைகளைப் பற்றிக் குறிப்பிடவில்லை.

பல ஆண்டுகளாக இந்த சிக்கல்களைத் தீர்க்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன, ஆனால் வெற்றி மட்டும் கிட்டவில்லை. ஜெருசலேமின் எதிர்கால நிலை, ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் யூதக் குடியேற்றங்களின் நிலை, பலஸ்தீன அகதிகளின் பிரச்சினை மற்றும் ஒரு பலஸ்தீன அரசு உருவாக்கப்பட வேண்டுமா இல்லையா ஆகியவை அவற்றில் அடங்கும்.

முந்திய போர் நிறுத்தங்களின் நிலை என்ன?

2014 மோதலில், இஸ்ரேலியத் தரைப் படைகள் காசாவுக்குள் சென்ற போது, போர் நிறுத்தப்படுவதற்கு முன்னர் போர்நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

2008 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் எகிப்து பேச்சுவார்த்தை நடத்திய போர்நிறுத்தம் நவம்பர் மாதத்திற்குள் முறிந்தது, அடுத்த மாதம் இஸ்ரேல் காசாவில் ஒரு பெரிய தரைவழித் தாக்குதலைத் தொடங்கியது.

இந்த முறை, இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் பென்னி கான்ஸ் இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையில் அடுத்து என்ன நடக்கிறது என்பதை கள நிலவரங்களே தீர்மானிக்கும் என்று எச்சரித்துள்ளார். இஸ்ரேலிய குடிமக்களைப் பாதுகாக்க இஸ்ரேலிய இராணுவம் எப்போதும் தயார் நிலையில் இருக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

எத்தனையோ ஆண்டு கால பிரச்சனையாக விளங்கும் இந்த பாலஸ்த்தீனப் பிரச்சனையில் இஸ்ரேல் நாடுதான் பின்வாங்கவேண்டும் என்ற உண்மை உலக நாடுகளுக்கு தெரிந்தாலும், அந்த நாடுகள் அனைத்தும் மௌனமாகவே உள்ளது என்பது பாலஸ்த்தீன மக்களுக்கு பாரிய துன்பமாகவே உள்ளது என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

# கொரோனா தடுப்பூசி சான்றிதழில் பிரதமர் மோடி படம் நீக்கம் பஞ்சாப், சத்தீஸ்கர், ஜார்கண்ட் அரசுகள் அதிரடி

கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்பவர்களுக்கு அளிக்கப்படும் சான்றிதழில் இடம் பெற்றிருந்த பிரதமர் மோடியின் படத்தை சத்தீஸ்கர், ஜார்கண்ட், பஞ்சாப் மாநில அரசுகள் நீக்கியுள்ளன.


இந்தியாவில் கொரோனா தடுப்பூசி எடுத்துக் கொள்பவர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடியின் படம் அச்சிடப்பட்ட தடுப்பூசி சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது. இந்தச் சான்றிதழில் பிரதமர் படம் இடம் பெற்றுள்ளதற்கு காங்கிரஸ் உள்பட பல்வேறு எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில், தடுப்பூசி சான்றிதழில் இடம் பெற்றுள்ள பிரதமர் நரேந்திர மோடியின் படத்தை பஞ்சாப் மாநில காங்கிரஸ் அரசு நீக்கியுள்ளது.

இது தொடர்பாக பஞ்சாப் மாநில அரசு அளித்துள்ள விளக்கத்தில், "கோவின் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கப்படும் தடுப்பூசி சான்றிதழில்தான் பிரதமர் படம் இடம் பெற்றுள்ளது. நாங்கள் அந்த இணையதள சான்றிதழை வழங்காமல், பஞ்சாப் மாநிலத்துக்காக தனியாக உருவாக்கப்பட்ட இணையதளத்தில் இருந்து தடுப்பூசி செலுத்துவோருக்கு சான்றிதழ் வழங்குகிறோம். அதில் யாருடைய படமும் இடம் பெறவில்லை" என்று கூறப்பட்டுள்ளது.

இந்தியாவில், ஜார்க்கண்ட், சத்தீஸ்கர் மாநில அரசுகளும் ஏற்கெனவே இந்த நடவடிக்கையை எடுத்துள்ளன. இந்த வரிசையில் பஞ்சாபும் இப்போது சேர்ந்துள்ளது.

மேலும், ஐக்கிய ஜனதா தளம் - பாஜக கூட்டணி ஆட்சி நடைபெறும் பீகார் மாநிலத்திலும் தடுப்பூசி சான்றிதழில் பிரதமர் படம் இடம் பெறுவதற்கு எதிர்ப்பு எழுந்துள்ளது குறிப்பிடத்தக்கது. - மணிராஜ், திருநெல்வேலி.



கனடிய செய்திகள்
Canadian News

# கனடா வாழ் எழுத்தாளர் குரு அரவிந்தன் வாசகர் வட்டம் நடத்திய திறனாய்வுப் போட்டி 2021 முடிவுகள்

உலகளவில் நடத்தப்பெற்ற மேற்படி போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

1வது பரிசு: 25,000 இலங்கை ரூபாய்கள்
நரேஸ் நியூட்டன். த. கழுபோவிலை, கொழும்பு, இலங்கை

2வது பரிசு: 20,000 இலங்கை ரூபாய்கள்
சிவனேஸ் ரஞ்சிதா. கெக்கிராவ, இலங்கை

3வது பரிசு: 15,000 இலங்கை ரூபாய்கள்
முருகேஷ். மு. வந்தவாசி, தமிழ்நாடு


4வது பரிசு: 10,000 இலங்கை ரூபாய்கள்
ஸ்ரீகந்தநேஷன்.ஆ.பெ. யாழ்ப்பாணம், இலங்கை

5வது பரிசு: 7,500 இலங்கை ரூபாய்கள்
சுப்ரபாரதிமணியன்.ப. திருப்பூர், தமிழ்நாடு

15 பாராட்டுப் பரிசுகள் தலா 5,000 இலங்கை ரூபாய்கள்.
பெயர்கள் அகர வரிசையில் இருக்கின்றன.

அனுராதா பாக்கியராஜா. வெள்ளவத்தை, இலங்கை.
முனைவர் சகோ. ஜா. அருள் சுனிலா. பெரியகுளம், தேனி, தமிழ்நாடு.
மு. இப்றாகீம் பாத்திமா றுஸ்தா. காத்தான்குடி, இலங்கை.
கிறகறி பஞ்சரத்தினம் வேதநாயகம். வார்விக்ஷயர், றக்பி, ஐக்கியஇராச்சியம்.
மணி. க. மேற்கு மாம்பலம், சென்னை - 600 033. தமிழ்நாடு.
மேகநாதன். பெ. போடி நாயக்கனூர், தேனி மாவட்டம், தமிழ்நாடு.
முஹம்மது ஹனிபா முஹம்மது ஷர்பான். ஓட்டமாவடி, இலங்கை.
நளாயினி நந்தகுமார். மெல்பேர்ன், அவுஸ்ரேலியா.
பூமணி. க. செஞ்சி தாலுகா, விழுப்புரம், தமிழ்நாடு.
பூர்ணிமா. ச. நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு.
பர்வின் பானு. எஸ். தேனாம்பேட்டை, சென்னை, தமிழ்நாடு.
துடுப்பதி ரகுநாதன் டி. எஸ். கோயமுத்தூர்-36 தமிழ்நாடு.
சக்திதாசன் கனகசபாபதி. 4390 VIPPEROD. டென்மார்க்.
சரளா முருகையன். பென்சினர் காலனி, திருச்சி-23 தமிழ்நாடு.
தங்கராசா செல்வகுமார். குப்பிழான் தெற்கு, யாழ்ப்பாணம், இலங்கை.

இளையதலைமுறை மாணவ, மாணவிகளுக்கான
10 பாராட்டுப் பரிசுகள் தலா 5000 இலங்கை ரூபாய்கள்.
பெயர்கள் அகரவரிசையில் இருக்கின்றன.
அருச்சனா சித்திவினாயகம். ரொறன்ரோ கனடா.
தேவரூபா நாகராஜ். வடுகப்பட்டி, தமிழ்நாடு.
கிருத்திக்கா. எஸ். முனிச்சாலை, மதுரை தமிழ்நாடு.
மோனிஷா நாகராஜ். வடுகப்பட்டி, தமிழ்நாடு.
நிறோஜினி வரதராஜன். வரணி வடக்கு, இலங்கை.
றுவிங்கா ஸ்ரீ. மிசசாகா, கனடா.
சக்தயா சாம்பவி முகுந்தன். ஸ்காபரோ, கனடா.
ஸ்ரீசங்கர் அருநோதன். மட்டக்களப்பு, இலங்கை.
திவாணி கந்தசாமி. தவசிக்குளம். வவுனியா, இலங்கை.
றிசா ஜேசுதாசன் ரொறன்ரோ, கனடா.



சர்வதேச ரீதியாகக் கனடாவில் இருந்து நடந்த முதலாவது திறனாய்வுப் போட்டி - 2021 இல் பங்கு பற்றிய அனைவருக்கும் நன்றி. 14 நாடுகளில் இருந்து தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட திறனாய்வுக் கட்டுரைகள் வந்திருந்தன. இறுதிச் சுற்றில் சிந்தனைப்பூக்கள் எஸ். பத்மநாதன், எழுத்தாளர் கே. எஸ். சுதாகர், கவிஞர் சரேஸ் அகணி ஆகியோர் நடுவர்களாகக் கடமையாற்றினார்கள். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

பரிசு பெற்றவர்களுக்குக் காலக்கிரமத்தில் பரிசுத்தொகை அனுப்பி வைக்கப்படும். இந்தப் போட்டியை நடத்த அனுமதி தந்த எழுத்தாளர் குரு அரவிந்தன் அண்ணாவிற்கும், நடுவர்களுக்கும், மிகவும் ஆர்வத்தோடு போட்டியில் பங்கு பற்றியவர்களுக்கும் வாசகர்வட்டத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அடுத்த வருடம் இதே போன்ற ஒரு போட்டியில் மீண்டும் சந்திப்போம். தயாராக இருங்கள், நன்றி.

மேலதிக விபரங்களுக்கு:

https://kurunovelstory.blogspot.com/
https://canadiantamilsliterature.blogspot.com/
http://tamilaram.blogspot.com/

சுலோச்சனா அருண்
செயலாளர், குரு அரவிந்தன் வாசகர் வட்டம்.
Kuru Aravinthan Fanclub



# "முள்ளிவாய்க்கால் ஒரு இடத்தின் பெயரல்ல; அது ஒரு குற்றத்தின் பெயர்"

**- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)**

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்கள், உலகத்தின் பார்வையில் இனப்படுகொலை எனும் போர்வையில் சில அனுகூலங்கள் மற்றும் சுகங்களை அனுபவித்து வருகின்றனர் என்று இலங்கை அரசும் அதை ஆதரிப்பவர்களும் கூறுவதை சமூக செயல்பாட்டாளர்கள் மிகவும் வன்மையான கண்டித்துள்ளனர்.

ஜே டீ எஸ் என்றழைக்கப்படும் இலங்கையில் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் அமைப்பைச் சேர்ந்த பாஷன அபேவர்த்தன, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இணைய வழியாக "முள்ளிவாய்க்காலை நினைவுகூருவோம்" எனும் கலந்துரையாடலில் பங்குபெற்று உரையாற்றும் போதே இலங்கை அரசையும் அதை ஆதரிப்போரையும் கண்டித்தார்.

அனைத்து அளவுகோலின்படி இனப்படுகொலை எனும் படுபாதகச் செயல் இலங்கையில் உண்மையாகவே இடம்பெற்ற நிலையில் அதை மறுக்கும் அரசோ அதன் காரணமாக தமிழர்கள் மேற்குல நாடுகளில் அகதி தஞ்சம் பெறுகின்றனர் என்ற விமர்சனத்தைக் கடுமையாகச் சாடியுள்ளார்.

"இனப்படுகொலை ஒரு அனுகூலமா - அதிலிருந்து தப்பி பிழைத்தவர்கள் அதன் மூலம் கிடைக்கும் சலுகைகளுக்காகவே போராடினார்கள்?" என்று கேள்வி எழுப்பியுள்ளார் பாஷன.




கடந்த 2009 முதல் ஆண்டுதோறும் கொழும்பின் வீதிகளில் இலங்கை அரசி தனது வெற்றி குறித்து கொக்கரிக்கிறது, ஆனாலும் இன்று வரை போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் தொடர்ந்தும் நாளாந்தம் இன்னலுறுகிற்கள் என்று வேதனையுடன் கூடிய தனது உரையில் அவர் கூறினார்.

"இலங்கை அரசு "பெருமிதம் கொள்ள முடியாத வகையில்" நிலம், நீர் மற்றும் வான் வழியே, உணவு உறக்கம் மற்றும் மருந்துகள் இன்றி சுருங்கிக் கொண்டு வந்த ஒரு சிறிய நிலப்பரப்புக்குள் சுமார் நான்கு லட்சம் மனவுளைச்சல் மற்றும் பட்டினியில் தள்ளியது - அதுவே அரசின் வெற்றி".

"சிங்கள தேசத்தின் உறுப்பினர் எனும் வகையில் அந்த நிகழ்வு குறித்து தான் வெட்கப்பட்டு குற்ற உணர்வுடன் இருந்தாலும் அதே நேரம் பெருமையும் கொள்வதாகவும் கூறுகிறார் பாஷன அபேவர்தன. தனிப்பட்ட முறையில் முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற மிக மோசமான வன்செயல்களைத் தடுக்கவோ அல்லது மக்களுக்கு உதவவோ தனிப்பட்ட முறையில் என்னால் எதுவும் செய்ய முடியவில்லையே என்கிற குற்ற உணர்வு என் மனதை அரிக்கிறது. அதேவேளை தமிழ் தேசத்தில் தப்பி பிழைத்தவர்கள் என் மீது நம்பிக்கை கொண்டு முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து அது குறித்து பேசுவதற்கு என்னை அழைத்ததற்காகப் பெருமை படுகிறேன்" என்று தனது உரையில் பனித்த கண்களுடன் அவர் தெரிவித்தார்.

போரின் இறுதிக் கட்டத்தில் தப்பித்தவர்கள் சட்டவிரோதமாகக் கொல்லப்பட்டனர், பெண்கள் பாலியல் பலாத்காரங்களுக்கு ஆளாக்கப்பட்டனர் மற்றும் ஆயிரக்கணக்கானவர்கள் இல்லையென்றாலும் நூற்றுக் கணக்கானவர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர். இதில் சிறார்களும் அடங்குவர் என்று நினைவு கூர்ந்தார்.

மறுவாழ்வு முகாம்கள் என்று அமைக்கப்பட்டதையும் அவர் கடுமையாக விமர்சித்தார். "மறுவாழ்வு முகாம்கள் என்று அமைக்கப்பட்டவை அடிப்படையில் "ஒரே நாடு-ஒரே தேசம்" என்ற கோட்பாட்டை மூளைச் சலவை மூலம் கட்டியெழுப்புவதே நோக்கமாக இருந்தது. ஆனால் உண்மையில் இந்த "ஒரே நாடு - ஒரே தேசம்" என்பது நீறு பூத்த நெருப்பைப் போன்றது. உண்மையில் பல தலைமுறையினரின் எலும்புக்கூடுகள் மீதே அது கட்டியெழுப்பப்பட்டுள்ளது. சுதந்திரம், சமத்துவம் ஆகியவை இராணுவ வல்லாதிக்கத்தின் கீழ் இனவாத அரசால் அழித்தொழிக்கப்பட்டன".

முள்ளிவாய்க்காலில் நடைபெற்றது "இனப்படுகொலையே என்பதை வலியுறுத்திய ரோஹித பாஷன அபேவர்தன அங்கு இடம்பெற்றவை இனச்சுத்திகரிப்பு, போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் ஆகியவற்றையெல்லாம் கடந்த ஒன்றாகும்" என்று அந்த கலந்துரையாடலில் கூறி வருந்தினார்.

தமிழர் தரப்பில் சிலர் இடம்பெற்ற குற்றங்களை இனப்படுகொலை என்ற பெயரில் அழைக்கக் கூடாது என்று கூறுவதை சாடிய அவர், நடைபெற்ற சம்பவம் இனப்படுகொலையா இல்லையா என்பதை அதிகாரத்திலுள்ளவர்கள் முடிவு செய்ய முடியாது என்கிறார்.




"இனப்படுகொலை என்ற குற்றச்சாட்டு ஒரு பிரேரணை அல்ல் அதை ஆட்சியில் இருப்பவர்கள் ஒருதலைபட்சமாக வாக்கெடுப்புக்கு விட்டு முடிவு செய்யப்பட வேண்டியதல்ல. பல தசாப்தங்களாக தமிழ் தேசத்தின் மீது நடத்தப்பட்ட அட்டூழியங்களை மற்றும் குற்றங்களுக்கு என்ன பெயர் வைக்க வேண்டும் என்பதை அதிகாரத்தில் இருப்பவர்கள் ஒருமனதாக முடிவு செய்து ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை".

தமிழ்த் தேசத்தின் அடிப்படை கட்டமைப்புகளை திட்டமிட்ட வகையில் சிதைப்பதற்கு ஒருங்கிணைந்த திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன என்பது மிகவும் வெளிப்படையானது என்கிறார் அவர்.

"இனப்படுகொலை என்ற குற்றம் இடம்பெற்றதா என்பது விசாரணைகள், பரிசோதனைகள், பகுப்பாய்வுகள் மூலமும் சரித்திரத்தின் பின்னணியிலான வழிமுறைகள் மூலமும் கண்டறியப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டும். ஆனால் அதைவிடுத்து தமிழ்த் தேசத்தை அழித்து அதன் மீது (இலங்கை) சிங்கள பௌத்த தேசம் எனும் அடையாளத்தைத் திணிக்க அடக்குமுறையை முன்னெடுத்தவர்கள் முயல்கிறார்கள்".

முள்ளிவாய்க்கால் படுகொலைகள் தீவிரமாக முழுமையாக விசாரிக்கப்பட்டு, குற்றவாளிகள் நீதியின் முன்னர் நிறுத்தப்பட வேண்டும் என்றும் ஜே டீ எஸ் அமைப்பின் பா'ன வலியுறுத்தினார்.




வல்லாதிக்க சக்திகளிடமிருந்து வரும் அழுத்தங்களை எதிர்கொண்டு, நடைபெற்ற குற்றத்தை அச்சமின்றி இனப்படுகொலை என்று ஒப்புக் கொள்வதே நீதிக்கான முதல் படியாக இருக்க முடியும் என்று அழுத்தம் திருத்தமாக "முள்ளிவாய்க்காலை நினைவுகூருவோம்" எனும் கலந்துரையாடலில் பங்குபெற்ற உரையாற்றிய ரோஹித பாஷன அபேவர்த்தன கூறினார்.


அமெரிக்க பல்கலைக் கழகத்தின் சிறந்த நூலுக்கான விருதையும்
இந்தியா 'கவிதைஉறவு' மனிதநேய இலக்கியத்திங்கள் இதழின்
சிறுவர் இலக்கியத்திற்கான பரிசையும் பெற்ற

## "பாடி ஆடு பாப்பா வெளியீட்டுவிழா"

(மணிமேகலைப் பிரசுரம்)

காலம்: (06-06-2021) யூன் 6ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை
நேரம்: கனடா - காலை 10:00 மணி இலங்கை – இரவு 7:30
அனைவரையும் இந்த மெய்நிகர் நிகழ்விற்கு அன்புடன் அழைக்கிறோம்
Zoom ID: 6477066123

### வாழ்த்துரை வழங்குவோர்

- பேராசிரியர் சந்திரகாந்தன் அடிகளார்
- வைத்தியக்கலாநிதி இலம்போதரன்
- சு. இராசரத்தினம் - கனடா (தமிழ்ச் சங்கம் தமிழ்ப் பள்ளி)
- விஜயகுமாரக் குருக்கள் (வரசித்தி விநாயகர் த. ப.)
- பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம்
- தா. பிரமேந்திரன் - அவுஸ்திரேலியா (தமிழ்க் களஞ்சிய வலையொளித்தளம்)
- ஆர்.என். லோகேந்திரலிங்கம் (கனடா உதயன் பத்திரிகை)
- வி. சிற்றம்பலம் (முன்னாட் கல்வியதிகாரி)
- ரவி. தமிழ்வாணன் - இந்தியா (மணிமேகலை பிரசுரம்)
- இலங்கையர்கோன் (பிரான்ஸ்)

### ஆய்வுரை வழங்குவோர்



# தடுப்பூசி கிடைக்காமல் தத்தளிக்கும் இலங்கை

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)



இலங்கையில் கொரோனா தொற்றின் தாக்கம் குறையாத நிலையில் நாளுக்கு நாள் கூடுதலான மக்கள் இதனால் பாதிக்கப்பட்டு அல்லாடுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

அதிலும் குறிப்பாக தமிழர்களின் தாயகமாக வடக்கு - கிழக்குப் பகுதியில் இந்த நோய்த்தொற்றின் பரவல் தீவிரமாக இருப்பதால் சிறுபான்மை மக்கள் கடும் அச்சத்திலுள்ளனர். வடமாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டமும் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டமும் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்திலும் மூன்று பொலிஸ் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, முள்ளியவளை ஆகிய பகுதிகளிலும் இராணுவத்தினர் பொதுமக்களுக்கு கூடுதல் நெருக்கடிகளைக் கொடுத்து அவர்கள் தமது வாழ்வாதாரங்களுக்காகச் செல்வதை அனுமதிக்க மறுக்கின்றனர்.

நாட்டில் தடுப்பூசிக்கும் தட்டுப்படு நிலவுவதால் மக்கள் இந்தக் கொடிய நோயிலிருந்து தம்மைப் பாதுகாத்து கொள்ள மிகவும் போராடி வருகின்றனர்.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் இந்தியா இலங்கைக்கு ஐந்து லட்சம் டோஸ் மருந்துகளை அன்பளிப்பாக வழங்கியது. ஆக்ஸ்போர்ட்-அஸ்ட்ராசெனகாவான் உருவாக்கப்பட்ட இந்தத் தடுப்பூசி இந்தியாவின் சீரம் இன்ஸ்டிடியூட்டால் இவை தயாரிக்கப்பட்டன.

அதன் மூலம் 150,000 முன்கள சுகாதார பணியாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட 115,000 இராணுவ மற்றும் பொலிசாருக்கு கொழும்பு மற்றும் அதன் சுற்றாடலிலுள்ள ஆறு மருத்துவமனைகளில் அளிக்கப்படும் என்று அரசு அப்போது அறிவித்தது


இதையடுத்து தொடர்ந்து தடுப்பூசியை நன்கொடையாகப் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது சந்தையில் வாங்குவதற்கோ அரசு பெரியளவில் முயற்சிகளை எடுக்கவில்லை எனும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

"சீனா இருக்கும்வரை பயமேன்" என்கிற எண்ணமே அரசில் நிலைப்பாடாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. அதற்கேற்ப கடந்த புதன்கிழமை மேலும் ஒரு தொகுதி சைனோபார்ம் தடுப்பூசி சீனாவிலிருந்து நன்கொடையாக வந்து சேர்ந்துள்ளது.

எனினும் நாட்டின் தேவைகளுக்கு ஏற்ப தடுப்பூசி கிடைப்பதிலுள்ள சிரமங்கள் காரணமாக தனியார் துறையினர் அதை இறக்குமதி செய்யும் கோரிக்கையை முன்வைத்தனர். அப்படியான கோரிக்கையை அஸ்ட்ராசெனகா மறுத்துவிட்டது.

கொடிய கொரோனா தொற்றுநோயைக் கட்டுப்படுத்த தடுப்பூசிகளை இறக்குமதி செய்வது தொடர்பில் தனியார் துறையின் கோரிக்கையை நிறைவேற்ற முடியாது என உலகின் முன்னணி தடுப்பூசி உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றான அஸ்ட்ரசெனகா இலங்கை அரசாங்கத்திற்கு திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

அஸ்ட்ராசெனகாவின், ஆசியாவிற்கான பொது விவகார உதவி பணிப்பாளர் ஜோஸ்பர் மெயின்ஸ், இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பிரசன்ன குணசேனவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.




அஸ்ட்ராசெனகா தயாரித்த கொரோனா தடுப்பூசியை சந்தைப்படுத்த பல தனியார் வர்த்தகர்கள் மற்றும் நிறுவனங்கள் இலங்கை அரசுக்கு முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளதை தாங்கள் அறிந்துகொண்டுள்ளதால் தான் இந்த கடிதத்தை அனுப்புவதாக ஜோஸ்பர் மெயின்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

"இந்த தொற்றுநோயை விரைவில் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கங்களுக்கும் சர்வதேச சுகாதார நிறுவனங்களுக்கும் தடுப்பூசியை வழங்குவதே தற்போது எங்கள் நோக்கமான காணப்படுகின்றது என்பதை நாங்கள் உங்களுக்கு உறுதிப்படுத்த விரும்புகிறோம்." என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, இந்த தடுப்பூசியை தற்போது தனியார் துறைக்கு வழங்கவோ, விநியோகிக்கவோ நடவடிக்கை எடுக்கப்போவதில்லையென, அஸ்ட்ராசெனகாவின் ஆசியாவிற்கான பொது விவகார உதவி பணிப்பாளர் ஜோஸ்பர் மெயின்ஸ், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பிரசன்ன குணசேனவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தனியார் துறை குறித்த தடுப்பூசியை விநியோகிப்பதாக வெளியாகும் விளம்பரத்தையும் அந்த நிறுவனம் கடுமையாக எச்சரித்துள்ளது.

அவர் தனது கடிதத்தில் "அஸ்ட்ராசெனகாவைத் தவிர வேறு எந்தவொரு வர்த்தக நிறுவனமும், தனியார் தடுப்பூசி வழங்கும் செயற்பாட்டை மேற்கொண்டால், அது போலியான தடுப்பூசியாக இருக்க வாய்ப்புள்ளது, இதுபோன்ற சந்தர்ப்பத்தில் குறித்த தடுப்பூசியை நிராகரிக்க வேண்டுமென்பதோடு, அது தொடர்பில் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட வேண்டும்" என அவர் தெரிவித்துள்ளார்.



AstraZeneca

AstraZeneca Singapore Pte Ltd
10 Kallang Avenue #12-10
Aperia Tower 2
Singapore 339510
T: +65 6812 4700
F: +65 6385 3050
astrazeneca.com

18th May 2021

Respectfully to:
**Dr. Prasanna Gunasena**
**Chairman**
**State Pharmaceuticals Corporation of Sri Lanka**
**No: 75, Sir Baron Jayathilake Mawatha,**
**Colombo 01, Sri Lanka**

RE: Authorized regional representatives for AstraZeneca

AstraZeneca has learned that numerous private traders and companies have been approaching the governments in Sri Lanka to sell COVID-19 Vaccine from AstraZeneca.

We wish to confirm that AstraZeneca's current focus is delivering on our substantial global commitments to governments and international health organisations as quickly as possible to help end the pandemic; as such, there is currently no private sector supply, sale or distribution of the vaccine. If a trader or company other than AstraZeneca offers private vaccines, it is likely counterfeit, so should be refused and reported to the relevant authorities.

AstraZeneca would like to clarify that currently only COVAX, UNICEF and Serum Institute of India (SII) are our designated partners to make the vaccine available in Sri Lanka.

Yours sincerely,

Jasper Meyns
Associate Director Government Affairs, Asia Area
AstraZeneca

கோவாக்ஸ் திட்டம், யுனிசெப் மற்றும் சீரம் இன்ஸ்டிடியூட் ஒப் இந்தியா ஆகியவை மாத்திரமே இலங்கைக்கு அஸ்ட்ராசெனகா தடுப்பூசியை வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் என அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வருடம் மார்ச் மாதம், இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம், நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு கொரோனா தடுப்பூசிகளை இறக்குமதி செய்ய தனியார் துறையையும் அனுமதிக்க வேண்டும் என குறிப்பிட்டிருந்தது.

தொழிற்சாலைகள் மற்றும் பிற பணியிடங்களிலிருந்து கொரோனா தொற்று அதிகமாக பதிவாகி வருவதால், உழைக்கும் மக்களுக்கு தடுப்பூசிகளை வழங்குவதே அடுத்த முன்னுரிமை நடவடிக்கையாக இருக்க வேண்டும் என சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹானா சுட்டிக்காட்டியிருந்தார்.

"இலங்கையில் பெரும்பாலான கொரோனா தொற்றாளர்கள் தொழிற்சாலைகள் மற்றும் பிற பணியிடங்களில், குறிப்பாக ஆடைத் தொழிற்சாலையில் பதிவாகின்றன. எங்கள் அடுத்த முன்னுரிமை உழைக்கும் மக்களுக்கு தடுப்பூசிகளை வழங்குவதாக இருக்க வேண்டும். தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் ஒப்புதலுக்கு உட்பட்டு தனியார் துறை தடுப்பூசிகளை இறக்குமதி செய்ய அனுமதிப்பதில் எந்த பிரச்சினையும் இல்லை." என அவர் தெரிவித்திருந்தார்.

சுகாதாரத்துறை அதிகாரிகள் வைத்திய நிபுணர்கள் ஆகியோரை புறந்தள்ளி இராணுவத்திடம் கோவிட்-19 தொற்று பரவலைத் தடுக்கும் பணி கொடுக்கப்பட்டுள்ளது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கடும் விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது.

தடுப்பூசியைச் செலுத்துவதிலும் அரசு பாரபட்சம் காட்டுகிறது என உள்ளூர் ஆர்வலர்கள் ஆதாரபூர்வ தகவல்களுடன் சமூக ஊடகங்களில் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

# வெளிப்படைத் தன்மை இல்லாததால் சித்த மருத்துவம் மங்கிப்போய்விட்டது

## அமைச்சர் துரைமுருகன் குற்றச்சாட்டு

சித்த மருத்துவ சிகிச்சையில் வெளிப்படைத் தன்மை இல்லாததால் சித்த மருத்துவம் மங்கிப்போய் விட்டது என நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் குற்றம்சாட்டினார். தமிழகத்தில் கரோனா முதல் அலை பரவியபோது அதற்கான மருந்தாகக் கபசுரக் குடிநீரை பயன்படுத்தலாம் என முதன்முதலாகத் திருப்பத்தூர் மாவட்டம், ஆண்டியப்பனூர் அரசு சித்த மருத்துவப் பிரிவு தெரிவித்தது.

அதன்படி கரோனா நோயாளிகளுக்குக் கபசுர குடிநீர் வழங்கியபோது அவர்கள் விரைவாக நோய்த் தொற்றில் இருந்து மீண்டனர். இதைத் தொடர்ந்து, நோயாளிகளுக்கு மட்டும் இன்றி பொதுமக்கள் எல்லோரும் கபசுரக் குடிநீர், நிலவேம்புக் குடிநீரைப் பருகத் தொடங்கினர். அதன்பிறகு, சித்த மருத்துவத்தைப் பெரும்பாலான மக்கள் பின்பற்றி வருகின்றனர். தற்போது கரோனா 2வது அலை பெருகி வரும் நிலையிலும் சித்த மருத்துவம் மூலம் சிகிச்சை பெற்று வருவோர்களே அதிகளவில் குணமடைந்து வீடு திரும்புவதாகக் கூறப்படுகிறது.

இதனால், தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் கரோனாவுக்கு சித்த மருத்துவ முறையில் சிகிச்சை அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன்ன. இந்நிலையில், திருப்பத்தூர் மாவட்டத்தில் 4 இடங்களில் கரோனா சித்த மருத்துவ சிகிச்சை மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.ஆம்பூர் அடுத்த கன்னிகாபுரம் பகுதியில் 100 படுக்கை வசதிகளுடன் கூடிய கரோனா சித்த மருத்துவ சிகிச்சை மையத்தின் திறப்பு விழா இன்று (மே.27) நடைபெற்றது. நிகழ்ச்சிக்குச் சித்த மருத்துவ ஒருங்கிணைப்பாளர் மருத்துவர்.வி.விக்ரம்குமார் வரவேற்றார். வேலூர் புற்றுமகரிஷி மருத்துவமனையின் சித்த மருத்துவர்



டி.பாஸ்கரன் முன்னிலை வகித்தார். மாவட்ட ஆட்சியர் சிவன் அருள் தலைமை வகித்தார்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அமைச்சர் துரைமுருகனுக்கு கிராம்பு குடிநீர் வழங்கப்பட்டது. தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் சித்த மருத்துவ சிகிச்சை மையத்தைத் திறந்து வைத்தார். அதைத் தொடர்ந்து அவர் பேசியதாவது:''திருப்பத்தூர் மாவட்டத்தில் சித்த மருத்துவ சிகிச்சையால் ஆயிரக்கணக்கான கரோனா நோயாளிகள் குணமடைந்துள்ளனர். சித்த மருத்துவத்தில் உயிரிழப்பு இல்லை என்பது பெருமைக்குரியதாகும். திமுக எதிர்க் கட்சியாக இருந்தபோதே கரோனா நோயை விரட்ட சித்த மருத்துவ முறையை அதிகரிக்க வேண்டும் எனக் குரல் கொடுத்தது.அதன்படி தற்போது திமுக ஆட்சிக்கு வந்த உடன் தமிழகத்தில் நிறைய இடங்களில் சித்த மருத்துவ முறை பின்பற்றப்பட்டு வருகிறது.

திருப்பத்தூர் மாவட்டத்தில் மட்டும் 4 இடங்களில் சித்த மருத்துவ சிகிச்சை மையம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு, கரோனா நோயாளிகளுக்குப் பிராணவாயு சீராக இருக்க கிராம்பு குடிநீர், நுரையீரல் பாதிப்பைத் தடுக்க கண்டங்கத்திரி மூலிகை சூப் உள்ளிட்டவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதுமட்டுமின்றி யோக ஆசிரியர்கள் மூலம் தினமும் யோகா பயிற்சியும் நோயாளிகளுக்கு அளிக்கப்பட உள்ளன. தமிழகம் முழுவதும் சித்த மருத்துவ முறையை விரிவுபடுத்த வேண்டும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

முன்னாள் முதல்வர்அண்ணா, திமுக முன்னாள் பொதுச்செயலாளர் பேராசிரியர் க.அன்பழகன் ஆகியோர் சித்த மருத்துவத்தைப் பெரிய அளவில் பின்பற்றியவர்கள்.நானும் கூட சித்த மருத்துவ சிகிச்சையை எடுத்துள்ளேன். மஞ்சள் காமாலை சிகிச்சைக்காக வேலூரில் உள்ள சித்த மருத்துவரிடம் சிகிச்சை பெற்றபோது அவர் சில மருந்துகளை எனக்குக் கொடுத்தார். அதுபற்றி விளக்கம் கேட்டபோது அவர் பதில் கூற மறுத்தது மட்டும் அல்லாமல் அது ரகசியம் எனக் கூறிவிட்டார்.சித்த மருத்துவ முறையில் வெளிப்படைத் தன்மை இல்லாததால் சித்த மருத்துவம் மங்கிப் போய்விட்டது. வேலூரில் நேற்று நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட எனக்கு சித்த மருத்துவம் குறித்த புத்தகம் ஒன்றைப் பரிசாகக் கொடுத்தார்கள். அதை நான் வீட்டுக்குச் சென்ற உடன் முழுவதுமாகப் படித்தேன்.

அதில் எந்தத் தகவலும் புரியும்படி கிடைக்கவில்லை. சித்த மருத்துவம் குறித்து தெளிவான வழிகாட்டுதல் இல்லாததால் தமிழகத்தில் சித்த மருத்துவம் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. இதைப் போக்க சித்த மருத்துவர்கள் முயற்சி எடுக்க வேண்டும். நம் பாரம்பரியமிக்க சித்த மருத்துவம் உலகளவில் பரவ வேண்டும் என்பதே நம் எல்லோரின் விருப்பமாக உள்ளது''.இவ்வாறு துரைமுருகன் பேசினார்.

# ஊரடங்கு நீட்டிப்பு? உயர் அலுவலர்களுடன் முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை



தமிழகத்தில் தேவைப்பட்டால் ஊரடங்கை நீட்டிக்க அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் முடிவு செய்துள்ளதாக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்திருந்தார் இந்த நிலையில் இன்று காலை தலைமைச் செயலகத்தில் முதல்வர் உயர் அதிகாரி களுடன் ஆலோசனை நடத்தினார். தமிழகத்தில் பெருகி வந்த கரோனா பெருந்தொற்று கட்டுக்கடங்காமல் போனது. இதையது ஊரடங்கில் தளர்வுகள் ரத்து செய்யப்பட்டது, இரவு நேர ஊரடங்கு, ஞாயிறு முழு ஊரடங்கு கொண்டு வரப்பட்டது. ஆனாலும் தொற்று எண்ணிக்கை அதிகரித்து நாளொன்றுக்கு 35000 ஐ தொற்று எண்ணிக்கை கடந்தது. சென்னையில் 6000 க்குமேல் தொற்று எண்ணிக்கை தினசரி பதிவானது.

இதையடுத்து முழு ஊரடங்கு அமலானது, அதிலும் பொதுமக்கள் அலட்சியம் காட்டியதால் மே 24 முதல் முழு தளர்வுகளற்ற ஊரடங்கு அமலானது, இதனால் தொற்று எண்ணிக்கை தற்போது வேகமாக குறைந்து வருகிறது. ஆனால் பல மாவட்டங்களில் அது குறையவில்லை. ஊரடங்கை மேலும் நீட்டிக்க வேண்டும் என மருத்துவ நிபுணர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் ஊரடங்கு மேலும் நீட்டிக்கப்படுமா? என்கிற கேள்விக்கு பதிலளித்த முதல்வர் ஸ்டாலின், “இந்த ஒரு வாரத்திற்கு எந்தத் தளர்வும் இல்லாமல் ஊரடங்கு போடப்பட்டு இருக்கிறது. ஏற்கெனவே அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்து ஆலோசனை செய்தபோது, முதலில் ஒருவார காலம் ஊரடங்கைப் போடுவோம்.தேவைப்பட்டால் இரண்டாவது வாரமும் அதை நீட்டிப்பது குறித்து ஆலோசனை செய்து முடிவெடுக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. இப்போதுள்ள நிலை ஓரளவுக்கு திருப்தியாக இருக்கிறது. இன்னும் முழு திருப்தி வரவில்லை. வந்த பிறகு அதை குறித்து யோசித்து முடிவு எடுப்போம்''.எனத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இன்று காலை தலைமைச் செயலகத்தில் முதல்வர் திடீர் ஆலோசனையில் ஈடுபட்டார். இந்த ஆய்வுக்கூட்டத்தில் தலைமைச் செயலர் இறையன்பு, சுகாதாரத்துறைச் செயலர் ராதாகிருஷ்ணன், டிஜிபி திரிபாதி உள்ளிட்ட துறை சார்ந்த உயர் அதிகாரிகள் கலந்துக்கொண்டனர்.இந்தக்கூட்டத்தில் ஊரடங்கின் நிலை, மாவட்டங்களில் ஊரடங்கு அமலவாது, சட்டம் ஒழுங்கு, நோய்த்தொற்றுப்பரவல், தடுப்பூசி, ஊரடங்கை நீட்டிப்பதா? என்பது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக தெரிகிறது.ஊரடங்கு வரும் மே 31 ம் தேதியுடன் முடிவடைகிறது.

சென்னை உள்ளிட்ட சில மாவட்டங்களில் தொற்று பரவல் வேகமாக குறைந்தாலும் கோவை உள்ளிட்ட சில மாவட்டங்களில் பரவல் அதிகமாக இருப்பதைக் கருத்தில் கொண்டு சில ஆலோசனைகள் வைக்கப்பட்டதாகவும், அதனால் மருத்துவ நிபுணர்கள் ஆலோசனைக்குப் பின் ஊரடங்கை நீட்டிப்பதா என்பது குறித்து முதல்வர் முடிவெடுப்பார் என தெரிகிறது.

# இணைய வழி வகுப்புகள் தொடர்பான புகார்கள் மீது உடனடி நடவடிக்கை; புகார் தெரிவிக்க ‘ஹெல்ப்லைன்’: முதல்வர் ஸ்டாலின் உத்தரவு

இணைய வழி வகுப்புகளைப் பதிவு செய்யவும், மாணவ, மாணவிகள் தங்கள் புகார்களைத் தெரிவிக்க உதவி எண் ஒன்றை உருவாக்கவும் முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.இது தொடர்பாக, தமிழக அரசு இன்று (மே 26) வெளியிட்ட செய்திக்குறிப்பு:

“கரோனா பெருந்தொற்று காரணமாக, தமிழ்நாடு மட்டுமின்றி இந்தியா முழுவதும் கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டு வகுப்புகள் இணைய வழியாக கடந்த சுமார் ஓராண்டாக எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த வகுப்புகளின் செயல்பாடுகள் குறித்து, சமீபத்தில் வரப்பெற்ற சில செய்திகளின் தன்மையைக் கருத்தில் கொண்டு இணைய வழி வகுப்புகளை முறைப்படுத்துவது குறித்தும் அதில் தவறுகள் நடக்கும் பட்சத்தில் அதன் மீது உடனடி நடவடிக்கை எடுக்கவும் ஆலோசனை செய்வதற்கு முதல்வர் தலைமையில் இன்று தலைமைச் செயலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. சமீபத்தில் இணைய வகுப்பு ஒன்றில் நடைபெற்ற சில விரும்பத்தகாத நிகழ்வுகள் குறித்தும், அதன் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கை குறித்தும் முதல்வர் ஆய்வு செய்தார்.

இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெறக் கூடாது என்றும், சட்டபூர்வமான நடவடிக்கை சம்பந்தப்பட்டவர்கள் மீது எடுக்கப்படும் என்றும், மற்ற பள்ளி, கல்லூரிகளில் இதுபோன்ற நிகழ்வுகள் நடக்காமல் இருப்பதற்குப் பின்வரும் முடிவுகளையும், உத்தரவுகளையும் முதல்வர் அறிவித்துள்ளார்.* இணைய வழியாக நடத்தப்படும் வகுப்புகள் அந்தந்தப் பள்ளியினால் பதிவு செய்யப்பட வேண்டும். இப்பதிவினைச் சம்பந்தப்பட்ட பள்ளி நிர்வாகம் மற்றும் பெற்றோர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் இருவரைக் கொண்ட குழுவால் அவ்வப்போது ஆய்வு செய்யப்பட வேண்டும்.* இணைய வழி வகுப்புகள் நடத்துவது தொடர்பாக முறையான வழிகாட்டுதல்களை வகுத்து வெளியிட பள்ளிக் கல்வித்துறை ஆணையர், கல்லூரிக் கல்வி இயக்குநர்,

கணினி குற்றத் தடுப்புப் பிரிவு மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான காவல் அலுவலர்கள், கல்வியாளர்கள் மற்றும் உளவியல் நிபுணர்கள் கொண்ட ஒரு குழு அமைக்கப்படும். அக்குழு, மாநிலத்திலுள்ள பள்ளிகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் பாலியல் தொல்லைகள் தரப்படுவதைத் தடுப்பதற்கு உரிய வழிமுறைகளைப் பரிந்துரைக்கவும் இணையவழி வகுப்புகளை நெறிப்படுத்துவது குறித்தும் வழிகாட்டு நெறிமுறையினை ஒரு வார காலத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டுமென்று முதல்வர் அறிவுறுத்தினார்.

* இணைய வகுப்புகளில் முறையற்ற வகையில் நடந்துகொள்வோர் மீது போக்சோ சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மாணவ, மாணவிகள் தங்கள் புகார்களைத் தெரிவிக்க ஒரு ‘ஹெல்ப்லைன்’ எண் உருவாக்கவும் முதல்வர் அறிவுறுத்தினார்.* மேலும், இணைய வகுப்புகள் குறித்து வரும் புகார்களை மாநிலத்தின் கணினி குற்றத் தடுப்புக் காவல் பிரிவில் காவல் கண்காணிப்பாளர் நிலையில் உள்ள அலுவலர் உடனடியாகப் பெற்று சம்பந்தப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் விசாரித்து துரிதமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமெனவும் முதல்வர் உத்தரவிட்டார்''. இவ்வாறு தமிழக அரசு தெரிவித்துள்ளது.



# உங்களுடைய முறை விரைவில் வருகிறது.





ஒன்ராரியோவின் கோவிட்-19 தடுப்பூசி திட்டம் நோய் பரவலைத் தடுத்து உயிர்களைக் காக்க உதவுகிறது.

தினமும் ஆயிரக்கணக்கானோர் ஒன்ராரியோவில் தடுப்பூசி போட்டுக்கொள்கிறார்கள்.

தடுப்பூசி வேலை தொடரும்போது, நாமும் முகக் கவசம் அணிந்து, கைகளைக் கழுவி சமூக இடைவெளியைக் காக்கவேண்டும்.

300 மொழிகளில் உதவிபெற **ontario.ca/covidvaccineplan** க்கு செல்லுங்கள் அல்லது 1-888-999-6488 ஐ அழைத்து மேலும் தெரிந்துகொள்ளுங்கள்.

ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது

Ontario

# தென்னிலங்கை நோயாளர்களுக்கு கண் சத்திர சிகிச்சைகள் செய்து பாராட்டுக்களைப் பெற்ற யாழ் வைத்தியசாலை கண் வைத்திய நிபுணர் மலரவன்





தென்னிலங்கை நோயாளர்கள் பலருக்கு தொடர்ச்சியாக கண் சத்திர சிகிச்சைகள் செய்து அவர்களின் பாராட்டுக்களைப் பெற்றுள்ள யாழ் வைத்தியசாலை கண் வைத்திய நிபுணர் டாக்டர் மலரவன் தொடர்பாக கொழும்பு ஊடகங்கள் அவரைப் புகழ்ந்து செய்திகளை வெளியிட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வெசாக் காலப்பகுதியில், யாழ்ப்பாணம் வைத்தியசாலையின் கண் சிகிச்சைப் பிரிவிற்கு தென்னிலங்கை மக்கள் பலர், குறிப்பாக அநுராதபுரத்திலிருந்து பல கண் நோயாளர்கள் செல்வதாக நாம் முன்னர் ஒரு செய்தி வெளியிட்டிருந்தோம். மேற்படி யாழ்ப்பாண வைத்தியசாலையின் விசேட கண் வைத்தியர் எம். மலரவன் அவர்களின் விசேட நடவடிக்கை ஒன்றின் காரணமாகவே தென்னிலங்கை கண்நோயாளர்கள் பலர் தங்கள் நோய்கள் தீர்ந்து மகிழ்ந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

பல்வேறு கண் நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ள மிகவும் ஏழ்மையான 2000 பேருக்கு கண் சத்திர சிகிச்சை செய்யும் புண்ணியத்தை மேற்படி வைத்திய நிபுணர் ஆரம்பித்துள்ளதை அறிந்த சுகாதார அமைச்சு யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு பல தென்னிலங்கை கண் நோயாளர்களை அனுப்பி வைத்தது.

இந்த கண் வைத்தியர் மலரவன் யாழ்ப்பாணத்தில் நன்கு புகழ்பெற்ற ஒருவர் என்பதும் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்திலும் விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் , தென்னிலங்கை மக்களுக்கு பல சத்திரசிகிச்சைகளை ஆற்றினார் என்றவகையில் அவர்களுக்கு மிகவும் பிடித்துப் போன தமிழ் வைத்தியராக மலரவன் தற்போது தென்னிலங்கையில் பேசப்படுவதாக கொழும்பு சிங்கள செய்தி வெளியிட்டுள்ளது.

இம்முறை வெசாக் கொண்டாட்டத்தை முன்னிட்டு தனது முழுமையான நேரத்தையும் பல்வேறு கண் நோயினால் பாதிக்கப்பட்டுள்ள 2000 நோயாளிகளுக்கு இலவசமாக சத்திரசிக்சை செய்யப்படவுள்ளது. மலரவனினால் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டவர்களில் அதிகமானோர் தென்னிலங்கையில் விவசாயம் போன்ற வருமானம் குறைந்த தொழில்களைச் செய்து சீவிக்கும் சிங்கள விவசாயிகள் என்பது இங்கு குறிப்பிட்த்தக்கது.





மீண்டும் ஒன்றிணையத் தயாராகுங்கள்

எமது இடை நிறுத்தமில்லாத டொரன்டோவிலிருந்து டோஹா வரையிலான விமானப் பயணத்தின் மூலமும், தொடர்ந்து, கொழும்பு மற்றும் ஏனைய இடங்களுக்கு †சிக்கலற்ற மாற்றுப் பயணங்கள் மூலமும், உங்கள் குடும்பம் மற்றும் நண்பர்களுடன் மீண்டும் ஒன்றிணைந்திடும் பயணத் திட்டங்களை தயாரிப்பது தற்போது மிகவும் சுலபமாகிவிட்டது

உங்கள் டோஹா பயணத்தின் போது மூன்று வகையான இருக்கை வகுப்புக்களான, சாய்ந்து உட்காரும் வசதியுள்ள Air Canada Signature Class, விசாலமான Premium Economy Class மற்றும் வசதியான Economy Class ஆகியவற்றில், எமது விருதுகள் பெற்ற சேவை மற்றும் போயிங்-787 ட்ரீம்லைனர் விமானத்தின் சிறந்த வசதி ஆகியவற்றை அனுபவித்து மகிழுங்கள்.

*உங்கள் பயணமானது ஆரம்பம் தொடக்கம் இறுதி வரை எங்கள் துறையில் முன்னணியில் உள்ள Air Canada Clean Care+ program மூலம் பாதுகாப்புடனும் கவலைகள் அற்ற வகையிலும் அமையவும், பயண திட்டத்தை மாற்றுவதாக இருந்தாலும், மாற்றுவதற்கான கட்டணம் எதுவும் இல்லாத எங்கள் இலகுவான ஆசனப் பதிவுத் திட்டங்களுக்கு நன்றி கூறி, மன அமைதியுடன் பதிவு செய்யுங்கள்.

இப்பொழுதே aircanada.com என்னும் தளத்தில் பதிவு செய்யுங்கள் அல்லது உங்கள் பிரயான முகவருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

AIR CANADA CLEANCARE+

FLEXIBLE BOOKING OPTIONS

Voted Best Airline in North America

A STAR ALLIANCE MEMBER

AIR CANADA

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

ஸ்காபுறோ

# சங்கர் அன் கோ

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.

*SUMMER SPECIAL* கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...



உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.

இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.







காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

## SHANKAR & CO

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# காப்புறுதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் காப்புறுதி ஆலோசகர்களாவதற்கும் ஒரு நம்பிக்கையான நிறுவனம்

## FREE CLASSES

To Become RESP & INSURANCE ADVISORS

MEDICAL INSURANCE FOR SUPER VISA 100% REFUND IF VISA DENIED

LIFE • CRITICAL ILLNESS • HEALTH & DENTAL • MORTGAGE INSURANCE
• GROUP BENEFITS • RRSP • RESP
• DISABILITY INSURANCE • LONG TERM CARE



**Sritharan Thurairajah**

Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist

Direct: 416.918.9771

Business: 416.321.2500

MDRT Member of Million Dollar Round Table

Life 100 INSURANCE & INVESTMENTS INC.

- digi Media -

10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6

Web: www.life100.ca, E-mail: info@life100.ca

La Capitale | IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. | Assumption Life | BMO Insurance

Are you getting Million Dollar advice?



# MONEY PROBLEMS?

## பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

**0%வட்டி**

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

### நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

### நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




**தமிழில் தொடர்புகளுக்கு:**

**வசந்தி சிவராஜா - 416-616-3077**

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

### எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

**416-671-0577**

**4 இடங்களில் சேவை**

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# ஈழத்துத் திருக்கோவில்கள்

948



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## ஆரையம்பதி கந்தசுவாமி கோயில்

### மட்டக்களப்பு

**“குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங்கு அமரர்இடர் தீர்த்ததுவும் - இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும் கற்பொதும்பில் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்”**

இந்து சமயத்தின் அறுவகைச் சமயப் பிரிவுகளில் ஒன்றாக, கௌமாரம் காணப்படுகின்றது. கௌமாரத்தின் முழுமுதற் கடவுளாக முருகப்பெருமான் போற்றப்படுகின்றார். அண்டசராசரமெங்கும் வியாபித்து அருள்புரியும் பரம்பொருளை, அம்மை அப்பனாக மட்டுமன்றி, இளவலாகவும், குமரனாகவும் பண்டைய இந்துக்கள் கண்டு களித்தனர். குமரன், கார்த்திகேயன், சுப்ரமணியன், ஞானபண்டிதன், கந்தன், சேந்தன், சேயோன், கவின் எனப் பல பெயர்களிட்டு, முருகப்பெருமானைப் போற்றி வழிபட்டார்கள்.

முருகு, இளமை, அழகு, தெய்வத்தன்மை, மணம் என்பன ஒரு கருத்துடைய சொற்களாகக் காணப்படுகின்றன. இளமை என்பது எப்பொழுதும் மாறுபடாத சிறு-பருவம். என்றென்றும் உண்மைப்பொருளாகிய சத் ஆகும். அழகு என்பது ஞானப் பிரகாச விளக்கமாகிய சித் ஆகும். தேன் என்பது, தானும் கெடாமல், தன்னோடு சேர்ந்தவைகளையும் கெட விடாமைபோல, என்றும் இன்பத்தை அளிக்கும் ஆனந்த சொரூபம்.

இத்தகைய சத், சித், ஆனந்த வடிவமாகிய பிரம்மமே முருகப்பெருமான். சோதிப் பொறியாகத் தோன்றிய முருகன், முதலில் ஆகாயம் முழுவதும் பரந்து, பின் வாயுவால் கொண்டு போகப்பட்டு, அதன்பின்னர் அக்னி என்னும் தேயுவால் தாங்கப்பெற்று, பின் கங்கையும், சரவணப்பொய்கையுமாகிய அப்புவில் மிதந்து, ஆறு தலைகளையும், பன்னிரு கைகளையுமுடைய திருவுருவமாகி, பூமியாகிய பிருதிவியில் பலவித ஆடல்களைப் புரிந்தாரென்பது புராண வரலாறு. முருகப் பெருமான், ஆகாயம் முதல் பஞ்சபூதங்களாக முறையே தோன்றினார் என்பதே இதன் பொருளாகும்.

முருகப்பெருமான் சர்வ வல்லமையுடையவர். அம்மையப்பனின் செல்லப் பிள்ளையான முருகன், மாங்கனியைப் பெற, மூத்தபிள்ளையான கணபதி அம்மையப்பரை வலம் வந்து, உலகத்துக்குள்ளே தானும் அடக்கம் என்ற தத்துவத்தை உணர்த்த, உலகையே சுற்றிவந்து தனக்குள்ளே உலகம் ஒடுங்கும் என்பதை விளக்கி அருளியவர் முருகன். “தன்னுள் எல்லாம், எல்லாவற்றுள்ளும் தான்” என்னும் தத்துவமே கடவுட் கொள்கையாகக் காணப்படுகின்றது.

முருகனே தமிழ். “தமிழே முருகன். முருகன் என்றும் மாறாத இளமை கொண்டவன். அவ்வாறே தமிழும் என்றும் இளமையுடையது. முருகவேளின் முகங்கள் ஆறு. தமிழில் இன எழுத்து ஆறு. வல்லினம் ஆறு. மெல்லினம் ஆறு. இடையினம் ஆறு. முருகன் என்ற எழுத்துக்களில், ஒவ்வொன்றும் மெய்யெழுத்தில் ஒவ்வோர் இனத்தைச் சார்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்மொழியில் உயிர் எழுத்தக்கள் பன்னிரண்டு. அவ்வாறே முருகப்பெருமானின் தோள்கள் பன்னிரண்டு. தமிழில் மெய்யெழுத்துக்கள் பதினெட்டு. ஆறுமுகப்பெருமானின் திருக்கண்கள் பதினெட்டு. வேறு எந்த மொழியிலும் காணப்படாத ஆயுதஎழுத்து, தமிழுக்கே உரிய சிறப்பெழுத்து. இச்சை, கிரியை, ஞானம் என்னும் மூன்றும் மூன்று புள்ளிகளாகச் சேர்ந்து, ஆயுதமாக விளங்குகின்றது. இக்கருத்தினை,

**“கண்ணிகர் மெய்யும் சென்னிக் கணநிக ரினத்தின் கூறும்
திண்ணமை தோள்க ளேபோல் திகழ்தரு முயிரும் வேறொன்
றெண்ணுதற் கரியதான எ.்.கமும் இயலிற் காட்டும்
புண்ணிய மனிக்கோன் செவ்வேள் பொற்பதத் தடிமையாகும்”**

எனமுருகப்பெருமானின் சிறப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

முருகன் கலியுகவரதன். கலியுகம் தீமைகளுக்கு ஆக்கம் அளிக்கும் யுகம். உறுதியைக் குலைத்து உண்மையை மறைக்கும் யுகம். இத்தகைய காலத்தில் இறையுணர்வை மனிதகுலத்திடம் பாதுகாப்பவன் முருகன். இத்தகை சிறப்புமிக்க முருகக் கடவுளுக்கு இந்தியாவிலும், இலங்கையிலும், வெளி-நாடுகளிலும் கோயில்கள் அமைத்து வழிபாடு நடைபெறுகின்றது. இலங்கையில் குறிப்பாக மட்டக்களப்புத் தமிழகத்தில், மிகப் பழமையான வழிபாடாக முருக வழிபாடு காணப்படுகின்றது. பழமையும், பிரசித்தமுமடைய முருகவழிபாட்டுத் தலங்களை, திருப்படைக் கோயில்கள் என மட்டக்களப்பிலே கூறுவது வழக்கம். பண்டைய அரசின் மதிப்பும், மானியமும், சீர்வரிசைகளும் இக்கோயில்களுக்குக் கிடைத்துள்ளன.

திருப்படைக்கோயில்களோடு மேலும் பல முருகன் கோயில்கள், மட்டக்களப்பிலே பெரிதும் போற்றப்படுகின்றன. அனேகமான கோயில்களின் ஆரம்பம், வேடர்களோடு தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது. இவ்வாறான கோயில்களுள், மட்டக்களப்பிலுள்ள ஆரையம்பதி கந்தசுவாமி கோயிலும் ஒன்றாகும். ஆரையம்பதி, மட்டக்களப்பு பிரதேசத்திலுள்ள ஒரு பிரபலமான கிராம-மாக, வளம் பொருந்தியதாக விளங்குகின்றது.

இக்கிராமம் மட்டக்களப்பு நகரின் தெற்கே, சுமார் நாலுமைல் தூரத்தில் அமைந்துள்ளது. ஆரையம்பதி என்ற பெயர் ஏற்பட்டமைக்கு பல காரணங்கள் கூறப்பட்டுள்ளன. இவ்வூரில் ஆரைப்பற்றைகள் அல்லது நீரோடைகள் வளைந்து வளைந்து சென்று, வாவியுட் கலப்பதால் இக்கிராமத்திற்கு, ஆரைப்பற்றை என்ற பெயர் எற்பட்டதென்பர். இவற்றொடு ஓடைகளில் ஆரல் மீன்கள் நிறைய வாழ்ந்த காரணத்தால், இவ்வாறான ஊர்ப் பெயர் ஏற்பட்டதெனவும் கூறுவர். வல்லாரையை ஆரல் எனவும் அழைப்பர். இக்கீரைவகை வளைந்து வளைந்து ஓடும் நீரோடைக-ளின் ஓரங்களில், முளைத்திருந்தமையால், இவ்வூருக்கு ஆரைப்பற்றை என்ற பெயருண்டாயிற்றென்பர். எதுவிதத்திலோ காரணப்பெயராக விளங்கிய ஆரைப்பற்றை என்ற பெயர் மருவி, நாளடைவில் ஆரையம்பதி ஆயிற்று. இவ்வாறான பதியிலே, ஆரையம்பதி கந்தசுவாமி கோயில் காணப்படுகின்றது.

*வளரும்...*



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

மலேசிய மடல்
கோலாலம்பூரிலிருந்து நக்கீரன்


# நேருவும் மலாயாத் தமிழர்களும்!


நக்கீரன்

கோலாலம்பூர், மே 27:

இரண்டாம் உலகப் போருக்குப்பின் உலக நாடுகளில் பெரும்பாலானவை அமெரிக்காவையும் ரஷ்யாவையும் மையமிட்டு இரு அணிகளாகப் பிரிந்திருந்தன. ஆனால், இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேருவோ இந்த இரு அணிகளையும் சாராமல், பஞ்சசீல கொள்கையையும் அணிசேரா கொள்கையையும் முன்வைத்து, மூன்றாம் உலக நாடுகள் என்ற தனி அமைப்பை அணிசேரா நாடுகள் என்ற பெயரில் ஏற்படுத்தினார்.

இதனால் உலக அரங்கில் நேருவின் புகழ் பரவியது. பன்னாட்டு அரங்கில் இந்தியாவின் பெருமையும் நேருவின் ஆளுமையும் பேசுபொருளானதைக் கண்டு அண்டை நாடான சீனாவிற்கு மனம் பொறுமியது. இந்த நிலையில், திபெத் விவகாரத்திலும் தலாய் லாமாவிற்கு அடைக்கலம் கொடுத்த வகையிலும் நேருவின்மீது தீராத வஞ்சத்தை வளர்த்தது சீனா.



எப்படியாவது நேருவிற்கு கலங்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற பரபரப்பால் உந்தப்பட்ட சீனா, மிகவும் வஞ்சகமாக திட்டமிட்டு இந்தியாமீது திடீரென்று போர் தொடுத்தது. அதற்குப் பின் நேருவின் அரசியல் வாழ்வில் இறங்குமுகம் ஆரம்பமானது.

நேரு பிரதமர் ஆனதில் இருந்தே மலாயா - சிங்கப்பூர் அரசியல் நிலை குறித்து கவனம் செலுத்தி வந்தார். அதற்குக் காரணம் நேதாஜி. மலேசிய அரசாங்கத்தில் தொடர்ந்து இந்திய சமுதாயத்தை அரசாங்கத்தில் பிரதிநிதிக்கும் மலேசிய இந்தியர் காங்கிரஸ் (ம.இ.கா.) என்னும் அரசியல் இயக்கத்திற்கும் நேருவிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தகவல் தொழில்நுட்ப வசதியெல்லாம் அந்த அளவிற்கு வளர்ச்சி கண்டிராதபோதும், அன்றைய மலேசியாவின் அரசியல், சமூக சூழலெல்லாம் உடனுக்குடன் இந்தியாவில் பிரதிபலித்தன.

குறிப்பாக, இளம் வயதிலேயே தொழிற்சங்கத் தலைவர்களாக உருவாகி மலாயாவாழ் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைக்காக குரல் கொடுத்த எஸ்.ஏ.கணபதி தூக்கில் இடப்பட்டது, வீரசேனன் படுகொலை செய்யப்பட்டதெல்லாம் அன்றைய இந்தியாவில், குறிப்பாக தமிழகத்தில் வலுவாக பிரதிபலித்தன.



கணபதிக்காக தமிழக ஏடுகளில் தலையங்கம் தீட்டப்பட்டது சிறப்புச் செய்திகளும் வெளியிடப்பட்டன. 1947 இல் இந்தியா விடுதலை அடைந்தபின் மலாயாவில் வாழ்ந்த இந்தியர்களுக்கு சுதந்திர வேட்கை பெருக்கெடுத்தது. கூடவே, அரசியல் மறுமலர்ச்சியும் மெல்ல முகிழ்ந்தது.

அதனடிப்படையில்தான் மலேசிய இந்தியர் காங்கிரஸ் கட்சியும் உதயமானது. இதன் ஆதாரமாகவும் ஆணி வேராகவும் இருந்தவர் பண்டித ஜவஹர்லால் நேருதான். பேராக் மாநிலத்தில் உள்ள அரச நகரான கோல கங்சாரில் தோன்றிய ஜான் திவி, கல்விமானாகவும் சமூகப் பற்றாளராகவும் விளங்கினார். அதேவேளை, மலாயாவின் சுதந்திரத்திலும் அதீத அக்கறைக் கொண்டிருந்ததால் நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் விடுதலை இயக்கத்தில் தீவிர ஈடுபாடு காட்டினார். அத்துடன் நேருவுடனும் தொடர்பு ஏற்பட்டது.

அதன் அடைப்படையில்தான் இந்திய தேசிய காங்கிரஸின் சாயலில், அதன் ஒரு கிளையாகவே அன்றைய மலாயா இந்தியர் காங்கிரஸ் (மஇகா) தோற்றுவிக்கப்பட்டது. மஇகா-வின் முதல் தலைவராக ஜான் திவிக்கு அதிகாரப்பூர்வ கடிதம் வழங்கியவரே நேருதான். அப்பொழுது, இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராக நேருதான் விளங்கினார்.

அப்படிப்பட்ட மஇகா, தற்பொழுது 70 ஆண்டுகளைக் கடந்து விட்ட நிலையில், இன்றைய தலைவர்கள் அதன் தொடக்ககால வரலாற்றை எண்ணிப் பார்க்கின்றனரா என்பது தெரியவில்லை. மஇகா-வின் பத்தாவது தலைவராக இருக்கும் டான்ஸ்ரீ எஸ்.ஏ. விக்னேஸ்வரன், 2024 ஆம் ஆண்டு வரைக்குமான அடுத்த தவணைக்கும் இன்று ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.



அனைவரையும் அடுத்து வரும் 15-ஆவது பொதுத் தேர்தல் குறித்த பதற்றமும் அச்சமும் தொற்றிக் கொண்டுள்ள நிலையில், மஇகா என்னும் ஆலமரத்திற்கு விதைபோட்ட நேருவை இன்றைய காலக்கட்டத்தில் எண்ணிப் பார்ப்பார்களா என்பது ஐயமே!

பத்திரிகையாளர், எழுத்தாளர், அரசியல் தலைவர், பிரதமர், பகுத்தறிவாளர், சமதரும (சோசலிச) வாதி என்றெல்லாம் பல்வகையாலும் சிறந்து விளங்கிய நேரு, அரசியல் அடிப்படையில் ஏராளமான தவறையும் குளறுபடிகளையும் செய்தார்.

காஷ்மீரில் பிரிவினைவாதம் இன்றளவும் தொடர்வதற்கு அவர்தான் காரணம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில ஆட்சியை முதன்முதலாக அரசியல் சாசனத்தின் 356-ஆவது பிரிவைப் பயன்படுத்தி கேரளத்தில் களைத்தவரும் இவர்தான்.

தமிழக அரசியலைப் பொருத்தமட்டில், காமராசரைக் கொண்டாடிய நேரு, அண்ணாவை மிகவும் வெறுத்தார். அறிஞர் அண்ணாவைப் பற்றி இளப்பமாக எண்ணி இருந்த நேரு, அண்ணா இந்திய நாடாளுமன்ற மேலவையில் கன்னி உரை நிகழ்த்தியபோது, அவருக்கான நேரம் முடிந்ததும் அன்றைய மேலவைத் தலைவர், பேச்சை நிறுத்திக் கொள்ளும்படி மணி ஒலித்தபோது அதைத் தடுத்த நேரு, அண்ணா பேசி முடிக்கும்வரை இடையூறு செய்ய வேண்டாம் என்று தகவல் தெரிவித்துவிட்டு, உடனே தன்னுடைய அறைக்குச் சென்று அண்ணாவின் கருத்தாழமிக்க ஆங்கில சொற்பொழிவை இமைகொட்டாமல் கேட்டாராம் நேரு.



அண்ணா பேசி முடித்ததும், தான் அவரைச் சந்திக்க வேண்டும் என்று தன்னுடைய உதவியாளரிடம் உடனே சொல்லி அனுப்பினார் நேரு. அண்ணாவைத் தேடி வந்த அவரின் உதவியாளருக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது. பேசி முடித்ததும் சென்னைக்குத் திரும்ப புதுடில்லி விமான நிலையத்திற்கு விரைந்துவிட்டார் அண்ணா என்பதை அறிந்த நேரு, நேரத்தை அண்ணா எப்படி அளந்து பயன்படுத்துகிறார் என்பதை அறிந்து மேலும் வியப்பில் ஆழ்ந்தாராம்.

ஆசிய சோதி என்றும் சாமாதான புறா என்றும் அழைக்கப்பட்ட நேருவின் பிறந்த நாளைப் போலவே அவரின் நினைவு நாளும் வரலாற்றில் நிலைபெற்றிருக்கும்.

1889 நவம்பர் 14 ஆம் நாளில் பிறந்த நேரு, 1964 மேத் திங்கள் 27 ஆம் நாளில் இந்த உலக வாழ்வைத் துறந்தார்.

**நக்கீரன்** - Nakkeeran: **013-244 36 24**





"நண்பன்" இணையத்தளத்தின் புதிய அறிமுகம்

இன்றைய நண்பி..

இந்த இடத்தில் உங்கள் புகைப்படமும்.
உங்களைப் பற்றிய சுருக்கமான
குறிப்புக்களும் வரவேண்டுமா?
உடனே அனுப்பி வையுங்கள்?

nanbanworldwide@gmail.com


# TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

| | |
|---|---|
| எல்லாவிதமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி, | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி, | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடாய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

**Tel: (416) 754-4024**

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

## Flex Institute நிறுவனத்துடன் சேர்ந்து உங்கள் கனடா செல்லும் கனவினை நனவாக்குங்கள்!

நீங்கள் கனடாவுக்குச் செல்வதைப் பற்றிய கவலையா? உங்கள் கனவை நாம் நனவாக்குகின்றோம். இலங்கையின் முன்னணி கனேடிய விசா ஆலோசனை நிறுவனங்களில் ஒன்றான நற்பெயரை Flex Institute நிறுவனம் கொண்டுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் கனடா செல்லும் விண்ணப்பதாரிகளுக்கு எமது சிறந்த சேவையினை வழங்கி அதன் மூலம் அவர்களின் விசா விண்ணப்பங்களின் வெற்றியை உறுதிப்படுத்துகிறோம். நாம் முக்கியமாக எமது கனடிய விண்ணப்ப நிலையத்தின் மூலம் **Student Visa, a Student- Dependent, Open Work Permit, Visitor Visa, Visa Refusals, Family Visit Visa, Business Visit, and Super Visa Facilities**. வழங்குகிறோம். இதற்கென்றே எமது அனுபவமிக்க தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்கள் உங்களுக்கான உதவிகளை செய்வதற்கு காத்திருக்கிறார்கள். எந்த விதமான தங்குதடையோ, தாமதமோ இன்றி உங்களுக்கான விசாவினை கூடிய விரைவில் பெற்றுத் தருவதில் உத்தரவாதமளிக்கின்றோம். இதற்கென்றே அமைந்ததுதான் எமது On The Spot Consultation சேவை. எமது வாடிக்கயாளர்களில் பலர் மாணவர் முதல் பிற பிரிவுகள் வரை அவர்களது விசா விண்ணப்பங்களை வெற்றிகரமாகப் பெற்றுள்ளனர். **University of Canada, West Algoma University, Fanshawege College, Centennial College, Seneca College, Georgian College, Cambrian College, ST. Laurence College, University of Saskatchewan, Lakehead University.** போன்ற கனடாவிலுள்ள முன்னணி பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் கல்வி கற்பதற்காக விசாவினைப் பெற்றுக் கொள்வதற்கான ஆலோசனைகளை நேருக்கு நேராக வழங்குவதுடன் விசாவினை பெற்றுத்தர உதவுவதுடன் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் கல்வி மற்றும் நிதி பின்னணி குறித்து கவனமாக அவதானித்து அவர்களின் விருப்பத்திற்கேற்ப கல்லூரிகளையும், பல்கலைக் கழகங்களையும் தேர்வு செய்ய நாம் உதவத் தயாராக உள்ளோம். எமது Flex Institute வாடிக்கையாளர், மாணவர்களின் மறுக்கப்பட்ட விசாக்களை பெற்றுத் தந்து அதன் மூலம் பலரது நன்மதிப்பையும் பெற்றுள்ளோம்.



ஆலோசனைகளை தவிர IELTS பயிற்சி நிலையம் ஒன்றினை அமைத்து ஆங்கில மொழியில் பரீட்சை **IELTS, Duolingo English Test, TOFEL and PTE (Academic)** பயிற்சி மற்றும் உதவிகளை செய்து தருகிறோம். ஒரு அனுபவமிக்க விசா நிறுவனமாக எம்மை நாம் உத்தரவாதம் அளிப்பதுடன் உங்கள் விசாவிற்கும் உத்தரவாதம் அளித்து உங்கள் கனடிய கனவு நனவாகும். என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

- **இலவச ஆலோசனை**
- **புலமைப்பரிசில்கள்**
- **1000க்கும் மேற்பட்ட கல்வித்திட்டங்கள்**

Student Visa, Student Dependent, Business Visa, Family Visit Visa, Super Visa requirements சம்பந்தமான ஆலோசனைகள் வழங்கப்படும்.

Are You Looking For
**Canada**


- Student Visa
- Visit Visa
- Rejected visa
- Business visa
- Super Visa
- Tourist Visa

**Call us on: 0777 761 346**

flex Institute Step Towards a Bright Future
6A, Parakumba Place, Colombo 06.
Hotline: 0777 761346
E-mail: flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk YouTube
*10 வருட கால நம்பிக்கையான சேவை*



# Amma Pawn Broker



# அம்மா தங்கநகை அடைவு மாடம்

கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்

Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்

**1.0% முதல் 1.5% வரை**



## அதிரடி சிறப்பு வட்டி வீதம்



உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்



- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களில் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்



**அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!**

105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com
**416-757-0034**
**416-994-3861**


# கல்கியின் பொன்னியின் செல்வன்

*(சென்ற வார தொடர்ச்சி...)* *(அத்தியாயம் #13)*

## வந்தியத்தேவனின் தஞ்சைப் பயணம்

வந்தியத்தேவன் சக்கரவர்த்தியின் இருப்பிடம் சென்று, அவரை அடிபணிந்து, பயபக்தியுடன் தன் ஓலையைக் கொடுத்தான். 'நான் காஞ்சியிலிருந்து வருகிறேன் இது உங்கள் மகன் ஆதித்தகரிகாலன் கொடுத்தனுப்பிய ஓலை' என்று அடக்கமாக கூறினான். சக்கரவர்த்தியின் முகம் மலர்ந்தது. தன் அருகில் இருந்த திருக்கோவலூார் மலையமான் புதல்வியான சக்கரவர்த்தினி வானமாதேவியைப பார்த்தார். 'உன் புதல்வனிடமிருந்து ஓலை வந்திருக்கிறது' என்று கூறி படித்தார். படித்து முடிந்ததும் அவர் முகம் கறுத்தது. 'என் பாட்டனார் பராந்தக சக்கரவர்த்தி, தான் சேர்த்த தங்கங்களை எல்லாம் கொடுத்து தில்லை அம்பலத்திற்கு பொன் கூரை வேய்ந்து, ஆலயப்பணி செய்தார். என் புதல்வன் தான் இருப்பதற்கு பொன் மாளிகை கட்டி எம்மை அங்கு வருமாறு அழைக்கிறான். இவன் தெய்வ நிந்தனைக்கு நாம் என்ன பரிகாரம் செய்வது' என்று அலுத்துக் கொண்டார். அப்பொழுது வந்தியத்தேவன் தைரியம் பெற்றுக் கொண்டு, 'உங்கள் புதல்வர் சரியாகத்தான் செய்து இருக்கிறார். தாயும் தந்தையும் தான் பிள்ளைகளின் தெய்வம். தன் தெய்வங்களுக்கு பொன் மாளிகை கட்டியதில் என்ன தவறு? எல்லோரும் வணங்கும் தெய்வத்திற்கு தான் கோயில் கட்ட வேண்டும். மக்களுக்கு தெய்வம் அரசன்! நீங்கள் தனக்கு மட்டுமன்றி மக்களுக்கும் தெய்வம். அதனால்தான் அவர் பொன் மாளிகை உங்களுக்கு கட்டியது நியாமானது' என்றான். தம் பெற்றோருக்கு பொன் மாளிகை கட்டிய சமுதாயம் எங்கே? இன்றைய சமுதாயம் எங்கே? சக்கரவர்த்தி வந்தியத்தேவனின் புத்திசாலித் தனத்தையும், சாமர்தியத்தையும் பாராட்டி 'ஆதித்த கரிகாலன் இங்கு வந்து எம்மைப் பார்க்க வேண்டும். எம்மால் எங்கும் வரமுடியாது. நாளை வா மறு ஓலை தருகிறேன்' என்றார்.

அப்போது புலவர்களும், சின்ன பழுவேட்டரையரும் அங்கு வருவதைக் கண்ட வந்தியத்தேவன், 'சக்கரவர்த்திக்கு, தயவு செய்யுங்கள் கருணை கூர்ந்து என் விண்ணப்பத்தைக் கேளுங்கள். தாங்கள் அவசியம் இந்த தஞ்சையில் இருந்து கிளம்பியாக வேண்டும். இங்கே தங்களை அபாயம் சூழ்ந்துள்ளது. அபாயம்! அபாயம்!' என்றான். இவ்வாறு கூறிக் கொண்டிருக்கும் போதே யாவரும் மண்டபத்துள் பிரவேசித்தனர். அபாயம் அபாயம் என்ற வார்த்தைகள் சின்ன பழுவேட்டரையர் காதில் விழ அவர் முகத்தில் கோபக் கனல் பறந்தது. புலவர்கள் அனைவரும் சுந்தர சோழ சக்கரவர்த்தியின் சந்நிதானம் வந்து சேர்ந்து, 'வாழ்க! வாழ்க! ஏழுலகமும் ஒரு குடையின் கீழ் ஆளும் சுந்தர சோழ மகா சக்கரவர்த்தி வாழ்க! பாண்டியனைச் சிரம் இறக்கிய பெருமான் வாழ்க! புலவர்களைப் புரக்கும் பெருமான் வாழ்க! கவிஞர்களின் கதியான கருணை வள்ளல் வாழ்க! பண்டித --- பராந்தக சக்கரவர்தியின் திருப் பேரர் நீடூழி வாழ்க!' என்று வாழ்த்தி, எல்லோரும் அமர்ந்தனர். புலவர் கூட்டத்தோடு வந்தியத்தேவனும் அமர்ந்தான். புலவர்கள் தமிழ்ப் பாடல்கள், சங்கப்பாடல்கள் எனப் பல பாடல்கள் பாடி அரசனை மகிழ்வித்து பரிசில்கள் பெற்றுச் சென்றனர். வந்தியத்தேவனும் புலவர்களோடு சென்றுவிட எண்ணினான். அவ்வேளை அவன் குந்தவைக்கு என்று கொண்டு வந்த ஓலை தொலைந்து போனதைக் கண்டு கொண்டான். அதைக் கண்டு பிடித்தே தீரவேண்டும் என்ற சஞ்சலம் அவனுக்கு. ஆனால் சின்ன பழுவேட்டரையர் அவன் கைகளை இரும்புப் பிடிபோல் பிடித்து வந்து அரசர் முன் நிறுத்தி, 'இவன் ஏதோ ஆபத்து ஆபத்து என்று கூறினானே அது என்ன? ஏன் என்று கேட்போமா?' என்றான். அதற்கு சக்கரவர்த்தியும் 'ஆம் ஆம்' என்றார். வந்தியத்தேவன் தான் எப்படி இந்த ஆபத்திலிருந்து தப்பலாம் என்று உபாயம் தேடினான். 'சக்கரவர்த்திப் பெருமானே! நம் வீர தளபதி சின்ன பழுவேட்டரையரும், அரண்மனை வைத்தியரும், அம்மனை ஒத்த மகாராணியும் உங்களோடு இருக்கும் போது என்ன அபாயம் வந்துவிடப் போகிறது. நான் எனக்கு அபாயம் அபாயம் என்று முறையிட்டேன்' என்றான் மேலும், 'பழைய வாணர் குலத்தில் நான் ஒருவன் பிரதிநிதியாக மிஞ்சியிருக்கிறேன். தம் திருப்புதல்வன் மனம் மகிழும்படி சோழ பேரரசிற்கு தொண்டு புரிந்து வருகிறேன். எங்கள் பழைய பூர்வீக ராஜ்ஜியத்தில் ஒரு சிறு பகுதியையாவது திருப்பிக் கொடுக்க அருள்புரிய வேண்டும்' இதை கேட்ட சின்ன பழுவேட்டரையர் முகம் கறுக்க, சுந்தர சோழர் முகம் மலர, மகாராணியின் முகத்தில் கருணை ததும்பியது. வந்தியத்தேவன், 'நான் தாய் தந்தையில்லாத அனாதை மகாராணியாரே எனக்கு பரிந்து பேச வேண்டும்' என்று கேட்க சுந்தர சோழர், 'எனக்கு இந்த இளைஞனை மிகவும் பிடித்திருக்கிறது. இவனின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும்' என்று சின்ன பழுவேட்டரையரிடம் யோசனை கேட்க, அவரும் 'கரிகாலரிடம் ஆலோசிப்போம்' என்றார். 'இவன் இங்கு தங்கி இளைப்பாறிவிட்டு போகட்டும்' என்று சுந்தர சோழர் கூறினார். சின்னபழுவேட்டரையர் வந்தியத்தேவன் தங்குவதற்கு வசதி செய்து கொடுக்க ஒரு ஏவலாளை பணித்தார். அதன் படி வந்தியத்தேவன் குளித்து, புதிய உடைகளை அணிந்து கொண்டு சின்ன பழுவேட்டரையரின் மாளிகையில் சித்திர மண்டபத்திற்கு வந்தான். அந்த சித்திர மண்டபம் மிகப் பிரசித்தி பெற்றது. ஏனெனில் நூறு வருடத்து சோழர்கால சரித்திரம் அங்கு தீட்டப்பட்டிருப்பது அவனைக் கவர்ந்திழுத்தது. சோழ மன்னர்கள் பரகேசரி, இராஜகேசரி என்னும் பட்டங்களை மாறி மாறி புனைந்து கொள்வது வழக்கமாக இருந்தது. 96 போர்க்காயங்களை தன் திருமேனியில் கொண்ட பராந்தக விஜயாலய சோழன், அவரின் புதல்வன் ராஜகேசரி ஆதித்த சோழன் பட்டத்திற்கு வந்தான். இவன் முதலில் பல்லவர் கட்சியில் நின்று பாண்டியரைத் தோற்கடித்து, சோழ ராஜ்ஜியத்தை நிலைப்படுத்தினான். அத்துடன் பல்லவன் அபராஜிதவர்மனோடு போர் தொடுத்து, யானை மீது இருந்த பல்லவ அரசன் மீது தாவிப்பாய்ந்து அவனைக் கொன்று தொண்டை மண்டலத்தை வசப்படுத்தினான். கொங்கு மண்டலமும் இவன் ஆட்சிக்கு வந்தது. ஆதித்தன் சிறந்த சிவ பக்தன். அதனால் காவேரி நதி உற்பத்தியாகும் இடத்தில் இருந்து அது கலக்கும் இடம் வரை பல சிவாலயங்களைக் கட்டினான். இவனைத் தொடர்ந்து பரகேசரி பராந்தகன் பட்டத்திற்கு வந்தான். நாற்பத்தாறு ஆண்டுகள் ஆட்சி செய்தான். சோழ வம்சத்தின் பெரும் மன்னன் வீர நாராயணன் பண்டிதவத்சலன், குஞ்சரமல்லன், சூரசிகாமணி என்ற பல பட்டம் கொண்டவன். சோழ சாம்ராஜ்யம் கன்னியாக்குமரியில் இருந்து கிருஷ்ண நதிவரை பரவியது. ஈழ நாட்டிலும் புலிக்கொடி பறக்கவிட்டான். தில்லைச் சிற்றம்பலத்திற்கு பொன் கூரை வேய்ந்தவன் இவனே.



இராஜாதித்தன்: பராந்தக சக்கரவர்த்தியின் மூத்த புதல்வன் வீரதீரன் வட நாட்டு படையெடுப்பை எதிர்த்து திருமுனைப்பாடி நாட்டில் பெரும் படையுடன் பல காலம் தங்கியிருந்தான். வீரநாராயண ஏரி எடுத்தான் தக் கோலம் என்னும் இடத்தில் வீரப் புகழை நிலை நாட்டி, யானை மீதே வீர மரணம் அடைந்தான் இவரை 'யானை மேல் துஞ்சிய தேவன்' என்றும் அழைப்பர்.

கண்டராதித்தர்: இராஜாதித்தனின் இளைய சகோதரன். இராஜகேசரி கண்டராதித்தர் என்னும் பட்டத்துடன் சிங்காசனம் ஏறினான். கண்டராதித்தன் சிம்மாசனத்திலிருந்து பெயரளவிற்கு ஆட்சி புரிய, இவருடைய இளைய சகோதரன் அரிஞ்சயன் தான் இராஜ விவகாரங்களைக் கவனித்து வந்தான். கண்டராதித்தர் சிவ பக்தன் அதனால் ராஜ்ஜியம் ஆளும் சிரத்தையில்லை. ஆலய வழிபாட்டில் ஈடுபட்டிருக்க இவர் இளைய சகோதரர் அரிஞ்சயர் திருநாவலூர் ஆகிய இடங்களில் படையுடன் தங்கியிருந்து போர் செய்தான். கண்டராதித்தரின் முதல் மனைவி இறந்ததால் இவருக்கு புதல்வர்கள் இல்லை. வெகு காலத்தின் பின் மணம் முடித்து ஒரு ஆண் மகனைப் பெற்றார். அவனுக்கு மதுராந்தகன் எனப் பெயர் சூட்டினார். கண்டராதித்த சோழர் தன் தம்பி அரிஞ்சயனுக்கு யுவராஜா பட்டம் சூட்டி தனக்குப் பின் சோழ சிங்காசனத்திற்கு உரியவன் என்று நாடறியத் தெரிவித்தான். கண்டராதித்தர் மரணம் எய்யவே அரிஞ்சயன் முடிசூட்டி ஒரு வருடம் அரசாண்டான். அவ்வேளை கண்டராதித்தரின் மகன் மதுராந்தகன் சிறு குழந்தையாக இருந்தபடியால் அரிஞ்சயனின் மகன் சுந்தர சோழன் ஆட்சிக்கு வரும் வாய்ப்புக் கிடைத்தது. சுந்தர சோழருக்கு நாட்டை ஆளும் வாய்ப்பு வந்தது. பாண்டிய நாட்டையும், தொண்டை மண்டலத்தையும் மீண்டும் வென்றார். இவர் புதல்வர்கள் ஆதித்தகரிகாலர், அருள்மொழிவர்மர் தந்தைக்கு சிறுவயதிலேயே போரக்களம் சென்று துணை செய்தார்கள். இதனால் எதிரிப் படைகளைத் தென்பண்ணைக் கரையிலிருந்து விரட்டி அடித்தனர்.

| | | |
|---|---|---|
| விஜயாலயன் | ஆதித்தன் | பராந்தகன் |
| 846-871 | 871-907 | 907-957 |
| இராஜாதித்தன் | கண்டராதித்தர் | அரிஞ்சயன் |
| 949 | 949-959 | 956-957 |

*(தொடரும்...)*

Jenita.Jaffna@gmail.com
**தொகுப்பு, எழுத்தாக்கம்:**
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை**
**மாதினி நிமலன**

BEST INDIAN ASTROLOGER & PSYCHIC
Pandit: VEERANANDA
காசியில் இருந்து வருகை தந்துள்ளார்
31 வருடங்கள் அனுபவமுள்ள மற்றும் 11 தலைமுறைகளாக ஜோதிடம் பார்பவர்
உலகத்தில் சூரிய சந்திர நவக்கிரக மகிமையினாலே
இன்ப துன்பங்கள், நன்மை தீமை பற்றி விபரம் குறுவார்
ALL RELIGIONS WELCOMED
MOST POWERFUL SPIRITUALIST
Family, Money, Childless, Health, Depression, Negativity, Husband Wife, Relationship, Marriage, Enemy, Court, Jealousy, Business, Work,Curses



- கை பார்த்து, முகம் பார்த்து அருள்வாக்கு சொல்லப்படும். புகைப்படம் பார்த்து
- ஜாதகம் பார்த்து, குறிப்புப் பார்த்து ஆரோக்கியம், மனநிம்மதி, லக்சுமி கடாட்சம் கிடைக்கவும்,
- இராசி, நட்சத்திரம் பார்த்து நடந்தது, நடப்பது, நடக்கப்போவது பற்றிச் சொல்லப்படும்.
- செய்வினை கோளாறு, பேய்பிசாசு தொந்தரவா, எதிரிகள் தொந்தரவா, கண் திருஸ்டி,
- நாகதோசம், காதல் விவகாரங்கள், தொழில், மனை அபிவிருத்தி, வாகனப் பொருத்தம்,
- காதலர் ஒற்றுமை போன்றவற்றிற்கும், வேறு பிரச்சனைகளுக்கும் உடனடியாக தீர்வு சொல்லப்படும்
- ஏந்தப் பிரச்னையாக இருந்தாலும் 5 நாட்களில் தீர்வு காண்பார

Removes Black Magic, Jadoo, Vodoo, Obeya, Witchcft, Jinn Curses, & Gives 100% Protection

- சர்க்கரை வியாதி
- ஆஸ்துமா
- தீராத கை-கால் வலி
- அல்சர்
- தோல் வியாதி
- அலர்ஜி
- மூட்டு வலி
- உடல் பருமான்
- அதிகரிக்க – குறைக்க
- காக்கா வலிப்பு
- ஆண்மை குறைவு
- ஞாபக சக்தி குறைவு
- மூலம்
- சிறுநீர்க் கோளாறு
- பெண்களுக்கான
- மாதவிடாய் பிரச்சனைகள்
- நரம்புத் தளர்ச்சி
- சரவாங்கி
- வாயுக்கோளாறு
- தலைவலி
- கழுத்து வலி
- முகப்பரு, தேமல்
- வெண்குட்டம்
- வாதம்
- மஞ்சல் காமாலை
- முடி உதிர்வு, உட்டணம்
- பக்கவாதம்
- நரம்பு வாதம்

ஏந்தவித பக்கவிளைவுகளும் கிடையாது நம்பி வாரீர் நலமுடன் வாழ்வீர
ஆயுர்வேத சிகிச்சை
Call For Appoinment: 647-858-3355
1101 Victoria Pank Ave, # 3 , Scarborough ON M4B 2K2
Opp. NO FRILLS, ( VICTORIA PARK & ST CLAIR AVE )

# அடுத்த சில மாதங்களில் இந்தியாவில் மனித உயிர்கள் பலியாகவிருப்பதால் மக்கள் தங்கள் உயிர் பாதுகாப்பினைத் தேடிக்கொள்ள வேண்டுகிறார் ஸ்ரீலஸ்ரீ பகவான் நித்தியானந்த பரமசிவம்



அடுத்த சில மாதங்களில் ஆயிரம் அல்ல, லட்சம் அல்ல, கோடிக்கணக்கான எண்ணிக்கையில் இந்திய நாட்டில் மனித உயிர்கள் பலியாகவிருக்கின்றன எனவும், மக்களின் நன்மையைக் கருதி சொல்வதாகவும், மக்களை உயிர் பாதுகாப்பினைத் தேடிக்கொள்ளும்படியும் ஸ்ரீலஸ்ரீ பகவான் நித்தியானந்த பரமசிவம் அவர்கள் தெரிவித்திருக்கின்றார். அதுமட்டுமல்ல, இந்திய மக்கள் பாதுகாப்பதற்காக தமது ஆசிரமங்களில் அவர்களை வந்து தங்கும்படியும் கேட்டுள்ளார்.

"மக்களே அஞ்சாதீர்கள்! கொரோனா கொடுத்தொற்றிலிருந்தும் அதன் நேர்மறை, மறைமுக,வந்து, வராது இருக்கும் பெரும்துக்ககங்கள் எல்லாவற்றிலிருந்தும் உங்களைக் காக்கின்றேன். கவலை வேண்டாம்" என மக்களைத் துக்கத்தில் இருந்து காப்பாற்றுவதற்காக தமது ஆசிரமங்களில் ஒழுங்குகள் செய்திருக்கின்றார்.

தற்போது பல நாட்களாக ஸ்ரீலஸ்ரீ பகவான் நித்தியானந்த பரமசிவம் அவர்கள் பராசக்தியைத் தனது உடலில் தாங்கி ஆகாயப் பதிவுகளை மனத இனத்தின் நன்மை கருதி வெளிப்படுத்தி வருகின்றார். மக்களது கேள்விகளுக்குப் பதிலளிப்பதுடன் மனித இனம் இன்று எதிர்நோக்கியிருக்கின்ற கண்ணுக்குப் புலப்படாத கோவிட் பரம்பல் பற்றிய ஆகாயப் பதிவுகளை மக்களுக்குப் புரியவைக்கின்றார்.

தற்போது அவர் இந்திய நாட்டின் நிலையைத் தெரிவிக்கையில் "தாம் உங்களுக்கெல்லாம் நம்மை செய்யவே, இங்கு நித்தியானந்தன் வடிவு கொண்டு நிஜ அவதாரமாய் இறங்கி வந்ததாகவும், காலம் காலமாக அவதாரபுருஸர்கள் பலர் வந்து, மலர்ந்து உலகிற்கு நன்மை செய்யும் மிகப் பெரும் ஞான பூமி பாரதம் எனவும், குறிப்பாக. இருக்கின்ற ஒரு பாரதத்தை இழக்க இயலாது" எனவும் தெரிவித்திருக்கின்றார். அத்துடன் "வாழையடி வாழை என ஞானிகளும், அவதார புருஸர்களும் வந்தே தீர வேண்டும், வாழ்ந்தே தீர வேண்டும், அதுவே உலகிற்கு உத்தம நம்மை" எனவும் தெரிவித்திருக்கின்றார்.

மிக அண்மையில் பகவான் அவர்கள் "உயிரை உயிர்ப்பி, உடலையும் உயிரையும் உயிர்ப்பி" என திருவாய் மலர்ந்தளியிருக்கின்றார். மாயையில் மனதைச் சிக்கி தேவையில்லாத பல சிந்தனைகள் உங்களை ஆட்டிப்படைக்க முயலுகின்ற இந்த நேரத்தில் உடலையும் உயிரையும் பாதுகாப்பதே இந்த வருடத்தில் நீங்கள் ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய முக்கிய பணி.

ஏற்கனவே சில சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அதன்மூலமாகத்தான் இப்போது கூட்டு எதிர்மறை சக்தியினது தாக்கம் பல மடங்காகவும், விரைவாகவும் மனித உடலைத் தாக்குகின்றது என்பதை அறிந்து கொண்டதாகவும் கூறியிருக்கின்றார். ஆன்மீக சுகப்படுத்தலுக்குத் தயார்படுவதற்குள் இந்தக் கூட்டு எதரிமறை சக்கியானது மிக மிக விரைவாக மனித உடலிற்குள் புகுந்து உடலை அழித்துவிடுகின்றது. நித்திய ஞானாத்மா என்றழைக்கப்படும் ஒரு சந்நியாசியினது தந்தையார் மிக அண்மையில் கொரணாவினால் தாக்கப்பட்டு உயிர் விட்டிருக்கின்றார். அவரை பகவான் அவர்கள் காப்பாற்றுவதற்காக முயற்சி செய்தபோதும் அவரது உடலானது பல மடங்கு தாக்கத்திற்குள்ளானதால் அந்த நபர் உயிர் துறந்திருக்கின்றார் எனவும். வரப்போகினீற புரட்டாதி மாதத்தில் பரவயிருக்கின்ற கொரனாவினது மூன்றாவது அலை மிகக் கொடுரமானதானவும், வேகமானதாகவும் உள்ளது எனவும் எச்சரிக்கின்றார். அதற்கு முன்பாகவே மக்களைக் காப்பாற்றுவதற்குப் பகவான் அவர்கள் முயற்சி செய்கின்றார்.

இந்தக் கூட்டு எதிர்மறை சக்தியைக் குறைப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு என்ன செய்ய வேண்டும் எனவும் பல பக்தர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர். அவற்றிற்கு விடையளிக்கும்போது, தற்போதைய நிலையில் அதற்கு இடமில்லையெனவும், உயிரைப் பாதுகாப்பதே சிறந்த வழி எனவும் தெரிவித்திருக்கின்றார். இந்திய மக்களைப் பாதுகாப்பதற்காக பல ஆச்சிரமங்களில் சென்று வாழ்ந்து உயிரைக் காப்பாற்றும்படி வேண்டுகோள் விடுத்திருக்கின்றார். ஆசிரமம் சென்று வாழ்பவர்களை www.kailasa.org என்ற இணையத்தளத்தில் விண்ணப்பங்களை அனுப்பும்படியும் தெரிவித்திருக்கிருக்கின்றார்.

அத்துடன் ஆசிரமத்திற்கு வருகின்ற மக்கள் உயிர் பாதுகாப்பிற்காகத்தான் என்பதை தெளிவாக விளக்கியிருக்கின்றார். அங்கு பல அடுக்குப் பாதுகாப்பு வழங்கப்டும் எனவும், வெளியே எங்கும் செல்லத் தேவையில்லை எனவும், அவர்களுக்காக இயற்கை உணவு வழங்கப்படும் எனவும் தெரிவித்திருக்கின்றார். அத்துடன் அவர்கள் யோகா, செய்யலாம், அதிகமான நிலப்பரப்புகள் இருப்பதால் நடக்கலாம், நடனமாடலாம் எனவும், மிகவும் மகிழ்ச்சியாக அங்குவந்து உயிரைக் காத்துக் கொள்ளும்படி கேட்டுள்ளார். மேலும் எல்லா ஆச்சிரமங்களுமே வீதிகளைவிட்டு அதிகளவு தூரத்தில் அமைந்திருக்கின்றன எனவும் தெரிவித்ததுடன், வீதிகளுக்கு அண்மையில் குடியிருக்க வேண்டாம் எனவும் தெரிவித்திருக்கின்றார். அத்துடன் வீடுகளில் தனிமைப்படுத்தலுக்கு இடமில்லையெனவும், இலகுவில் கொரனா பரவுவதற்கு அதிகளவு வாய்ப்பிருக்கின்றது எனவும் பகவான் அவர்கள் பலமுறை தெரிவித்திருக்கின்றார். இதனால்தான் ஆசிரமங்களில் multi layer தனிமைப்படுத்தலினால் பாதுகாப்பளிக்க முடியும் எனத் தெரிவித்திருக்கின்றார்.

அத்துடன் தற்போதும் தேவியினது அருள் வாக்கு நிகழ்வானது நடைபெறுகின்றது. www.youtube.com/LifeBlissFoundation, Facebook.kailasa's sph Nithyananda paramashivam ஆகிய இணையவழி நிகழ்வுகளின் மூலமாக அதிகமான மக்கள் கலந்து கொள்கின்றனர்.

இவ்வாறிருக்க, தற்போது 500ற்கும் அதிகமான மக்கள் நித்தியானந்த ஆச்சிரமங்களில் தங்குவற்கு விண்ணப்பங்களை அனுப்பியுள்ளார்கள் என்பது தெரியவந்துள்ளது. அத்துடன் அங்கு தங்கச் செல்பவர்களுக்கு அவர்களது தேவைகள் யாவும் இலவசமாக வழங்கப்படும் என்பதை பகவான் ஏற்கனவே தெரிவித்திருக்கின்றார். இருப்பிடம், உணவு, உடை, மற்றும் அடிப்படை மருத்துவம் என்பன வழங்கப்படும் எனவும் கொரோனா நோய் பரிசோதனை செய்யப்பட்டு எதரிமறை என அத்தாட்சிப் பத்திரத்தோடுதான் வரவேண்டும் எனவும் தெரிவித்திருக்கின்றார்.



### ஜீவன் முக்தி (பகுதி) 114

## கேள்வி - பதில்

*(சென்ற வார தொடர்ச்சி...)*

இப்படி ஒவ்வொரு இந்திரியத்தோடும். அந்தந்த இந்திரிய சுகத்தைச் சூக்சுமமாக வைத்துத் தியானம் செய்தல். நன்றாக ஆழ்ந்து புரிந்து கொள்ளுங்கள்.

இதுதான் உதாரணம். இதற்கு யோகத்தில் பிரத்யாகாரம்' என்று பெயர். உணர்வை உள்வாங்குதல்.

இதுபோல், ஒவ்வொரு இந்திரியத்தோடும் செய்து பார்த்து உங்களால் உங்களுடைய உணர்வை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர முடியும் என்று ஈஸ்வரன் சொல்கிறார்.

முதலில் ஒரு நுட்பத்தைக் கொடுத்தோம். அது என்னவென்றால், உடல் ரீதியாக, ஸ்தூலரீதியாக எந்த விதமான இன்னொரு உடலைத் தேடும் செயலிலும் இறங்காமல் இருப்பது. அது சூக்சும நிலையில் கனவில் கூட இறங்காமல் இருப்பது... பரநிலையில் 'தான் ஆண், தான் பெண்' என்பதையே மறந்துவிடுவது இந்த விளக்கம். இந்த சத்தியம் சன்யாசிகள் கடைப்பிடிக்க வேண்டியது.

அடுத்ததாக விளக்கினேன் அல்லவா....
இனிப்பை வைத்துப்பார்த்துச் சுவையை நாக்கில் உணர்வது.

இரண்டாவது, இனிப்பை வைக்காமல், வைத்தது போன்று பாவனைசெய்து, அந்தச் சுவையை உணர்வது மூன்றாவது. இனிப்பையே நினைக்காமல் நேரடியாகச் சுவை உணர்வை உருவாக்குவது இந்தத் தியானமுறை கிரஹஸ்தர்கள் செய்ய வேண்டியது.

படிப்படியாக அவர்கள், தங்களை சூக்சும நிலைக்குள் எடுத்து வருவது.

இவர்கள் நேரடியாக உணர்வையே மாற்றுவது.

ஒரே நுட்பத்தை இருவருக்கும், இரு வேறுவிதமாக ஈசன் வகுத்து அளித்து இருக்கின்றார்.

முதல் முறையில் சன்யாசிகள் முயற்சி செய்து பார்ப்பதற்கு பூர்ணாபிஷேகம், இந்த இரண்டாவது முறையில் முயற்சி செய்து பார்ப்பது கிரஹஸ்தம் என்று பெயர். இரண்டிலுமே இவர்கள் ஒரே உச்ச நிலையைத்தான் இறுதியில் அடைகிறார்கள்.

பூர்ணாபிஷேகம் வழியாக போகிறவர்கள், ஒன்பது மாதத்தில் சீக்கிரமாக அடைந்து முடித்துவிடுகிறார்கள். நேரத்தை வீணடிப்பதில்லை.

கிரஹஸ்தர்கள் அனுபவித்து, அனுபவித்து சூக்சுமமாக மாற்றிக்கொள்கிறார்கள். கொஞ்சம் நேரம் எடுத்துச் சுற்றி வருகிறார்கள். ஆனால் அவர்களும் அனுபூதிக்காகத்தான் வந்து சேருகிறார்கள். சிலபேர் நடந்து போகிறார்கள். சிலபேர் பறந்து போகிறார்கள்.

ஆனால், பறந்து போகத் தெரியாவர்கள், பறந்து போக முயற்சி செய்யக்கூடாது.

அது இருப்பதை விட்டு விட்டுப் பறப்பதைப் பிடிப்பதற்குச் சமம். கீழேதான் விழுவார்கள்.

நாம் நடந்து போகப் பிறந்தவர்களா?

இல்லை பறந்து போகப் பிறந்தவர்களா? என்பது, ஒன்பது மாத சுய ஆராய்ச்சி மூலமாக யார் வேண்டுமானாலும் கண்டுபிடித்துவிட முடியும்.

இந்த உடம்பை நடந்து போவதற்காக உருவாக்கினோமா அல்லது பறந்து போவதற்காக உருவாக்கினோமா என்று முதலில் கண்டுபிடித்துவிட வேண்டும்.

கண்டுபிடித்துவிட்டு, நடந்து போக உருவாக்கியவர்கள் என்றால், நடந்து போகவேண்டும். பறந்து போக உருவாக்கியவர்கள் என்றால், பறந்து போக வேண்டும். முதலில் குறிக்கோளைத் தெளிவாக்க வேண்டும்.

குறிக்கோளைத் தெளிவாக்கினாலே எதற்காக இந்த உடலை எடுத்தோம், என்பது புரிந்து விடும். நாம் இந்த உடலை எதற்கு உருவாக்கினோம் என்று கண்டுபிடித்து விட்டு, அதன்படி செய்வதுதான், வாழ்க்கையில் முழுமை அடைவதற்கான ஒரே வழி. பறக்க வேண்டியவர்கள் நடக்கவும் கூடாது. நடக்க வேண்டியவர்கள் பறக்கவும் கூடாது.

பறக்க வேண்டியவர்களுக்கான முறை இங்கு தெளிவாக விளக்கப்பட்டுவிட்டது. நடக்க வேண்டியவர்களுக்கான முறையும் தெளிவாக விளக்கப்பட்டுவிட்டது.

யாருக்குக் கிரஹஸ்தம், யாருக்கு சன்யாஸம் என்று இதுவரைக்கும், இந்த அளவிற்குத் தெளிவாக பிரபஞ்சத்திலே, ஆன்ம உலகிலே விளக்கப்படவே இல்லை. இது விளக்கப்படாததனால்தான் இவ்வளவு குழப்பங்கள். முதல் முறையாக மிகத் தெளிவாக ஈசனால் விளக்கப்பட்டு இருக்கிறது.

இந்த விளக்கத்தை உள்வாங்கி, யாருக்கு எந்த வாழ்க்கையோ, அவர்கள் பிராரப்தத்தைக் கடந்து சத்தியத்திற்குள், இங்கு விளக்குகின்ற சிவத்தன்மைக்குள் நுழைவீர்களாக! என்றும் உங்களின் விதியை வெல்லும் வீரியம் விழிப்படைவதாக! என்றும் ஆசீர்வதிக்கும் ஈசனின் ஆசிர்வாதம் எல்லோருக்கும் மலரட்டும்.

விதியை வெல்லும் ஜீவன் முக்தவாழ்விற்குள், சுய பரிசோதனைக்குள் நுளையுங்கள்.

----

அன்று பெங்களூரில் தியான சத்சங்கம். நாங்கள் சென்ற வாகனம் கோளாறாகிவிட்டதால் ஆஸ்ரமத்திற்கு திரும்பி வர, பக்தர் ஒருவர் தன்னுடைய காண்டஸா காரில் வரும்படி கேட்டுக் கொண்டார்.

எனவே கண்டஸாகாரில் ஏறி உட்கார்ந்தபடி அங்கிருந்த பக்தர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டிருந்தோம். காரின் பக்கவாட்டில் இருந்து கையை எடுப்பதற்குள் காரின் கதவு சாத்தப்பட்டது. கதவிடுக்கில் சிக்கிய கட்டைவிரல் 'சதக்' என நசுங்க, வலியும், எரிச்சலும் அந்த இடத்தில் அதிகரித்துக் கோண்டே போனது. கொஞ்ச நேரத்திலேயே அந்த எரிச்சலும், வலியும் மறைந்து போனது. அடுத்தடுத்த வேலைகளைப் பாரக்க ஆரம்பித்து விட்டோம். என்று ஆஸ்ரம பிரம்மச்சாரிகளிடம் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னோம். வலியை கூட பரவசமாக்கும் சக்தி விழிப்புணர்விற்கு உண்டு.

***பரமஹம்ஸ நித்தியானந்தர் சுவாமிகள் வழங்கிய அமுத மொழிகள்***

மேலதிக தொடர்புகளுக்கு: (416) 439-2080

# இவ்வார ராசிபலன்

**28-05-2021 வெள்ளி தொடக்கம் 03-06-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** நினைத்ததெல்லாம் நடக்கக்கூடிய நேர்த்தியான வாரம். எதிலும் வெற்றி கிட்டும். ஏற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பாலிய நண்பர் சந்திப்பு கிட்டும். பொருளாதாரம் மேம்படும். பேச்சில் கவனம் தேவை. கடன் பாக்கிகள் வசூலாகும். வாகன யோகமுண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகாரம் குவியும். சகோதர வழியில் கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: கருமாரி அம்மன், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**ரிஷபம்:** உள்ளத்தில் மகிழ்ச்சியும், இல்லத்தில் வளர்சியும் கிடைக்ககூடிய வாரம். கடன் சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பணநடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். அணிமணிகள் சேரும். பெண்களுக்கு யோகம் கூடும். பணப்புழக்கம் சரளமாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: விஷ்ணு பகவான், அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**மிதுனம்:** மகிழ்ச்சியான நிகழ்ச்சியும், மனம் எதிர்பார்த்த வளர்ச்சியும் கிடைக்கக்கூடிய வாரம். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். தென்றல் வீசும். எதிர்ப்புகள் விலகும். நோய் அகலும். பெயர், புகழ், கௌரவம், செல்வாக்கு உயரும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டமாகும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பாதவிநாயகர், அதிர்ஷ்ட எண்: 5,1,5,0
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**கடகம்:** பெத்தவங்களோட வாழ்த்தும், மத்தவங்களோட மரியாதையும் கிடைக்கக்கூடிய வாரம். பழைய பகை மாறும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பிள்ளைகளால் பெருமை கூடும். புது முயற்சிகள் தள்ளி வைக்கவும். தனவரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். உற்சாகம் அதிகரிக்கும். திடீர் செலவு ஏற்படும். மங்கல செய்தியால் மனம் மகிழும்.
வழிபடவேண்டிய தெய்வம்: யோக நரசிம்மர், அதிர்ஷ்ட எண்: 9,3,2,7
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,R




**சிம்மம்:** நண்பர்களால் பணவரவும், சொந்தங்களால் மனநிறைவும் கிடைக்கக்கூடிய வாரம். ஆடம்பர செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வயிற்று உபாதை வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். ஆனந்தம் குடிக்கொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பேச்சில் கனிவு தேவை. களவுப் போன பொருள் திரும்ப கிடைக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: உச்சிபிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V




**கன்னி:** இனிய நட்புக்களால் பெரிய வெற்றி கிடைக்கக் கூடிய அற்புதமான வாரம். இடமாற்றம் நன்மைத் தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். உத்தியோக உயர்வு கிட்டும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உடன் பிறப்புகளால் உதவி கிட்டும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். மேன்மையான நாள். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஆதிவிநாயகர், அதிர்ஷ்ட எண்: 7,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,F




**துலாம்:** மருந்து சாப்பிட்டவங்க விருந்து சாப்பிடக் கூடிய வித்தியாசமான வாரம். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் கலை கட்டும். உறவினர் வருகை உண்டு. ஆறுதலான சூழ்நிலை அமையும். பணியில் உயர்வு கிட்டும். கஷ்டகாலம் மறையும். பணிவும், துணிவும் கூடும். விவேகமான நாள். வெளியூர் பயணம் வெற்றி தரும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஹரிஹராசுதன், அதிர்ஷ்ட எண்: 9,7,1,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**விருச்சிகம்:** பருப்பு விற்பனை முதல் செருப்பு விற்பனை வரை சிறப்பு சேரக்கூடிய வாரம். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். தொட்டது துலங்கும் நாள். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சக்திபாலகன், அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M




**தனுசு:** ஆசிரியர் முதல் ஆடிட்டர் வரை ஆதாயம் சேரக்கூடிய அற்புதமான வாரம். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவுப் போகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சந்தானலட்சுமிகணபதி, அதிர்ஷ்ட எண்: 4,1,7,8
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**மகரம்:** சிறப்பும், பொறுப்பும் சீராகக் கிடைக்கக் கூடிய பொறுப்பான வாரம். எலக்ட்ரிக்கல் தொழில் லாபம் தரும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பெயர், புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். பொதுப் பணிகளில் ஆர்வம் ஏற்படும். திருமணத் தடைகள் நீங்கும். புதுத் தொழிலை துவங்கும் வாய்ப்பு உள்ளது. வெளியூர் பயணம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். எண்ணிய காரியம் கை கூடும். புண்ணியஸ்தலம் செல்வீர்கள்.
வழிபடவேண்டிய தெய்வம்: மணக்குழபகவதி அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,4,0,7
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,R




**கும்பம்:** சிந்தனையால் சிறப்புக்கள் கிடைக்கக்கூடிய பொறுப்பான வாரம். இனிப்பான செய்திகள் வரும். பழிச் சொல்லிலிருந்து விடுபடுவீர்கள். சொத்துப் பிரச்சனைகள் தீரும். பணியாட்களால் தொல்லை மாறும். கல்வியில் மந்த நிலை மாறும். ஜவுளித் தொழில் உயர்வு தரும். கலைத் தொழில் திருப்பம் வரும். அலுவலகங்களில் பாராட்டு குவியும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவரின் தொல்லைக் குறையும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: தாய்முகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 1,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U




**மீனம்:** வாய்ப்பேச்சு மூலமாகவே வருமானம் சேரக்கூடிய வகையான வாரம். மனம் மகிழும் நாள். உழைப்பிற்கான பலனை பெறுவீர்கள். திறமைகள் அதிகமாகும். இன்னல்கள் அகலும். கடன் தீரும். ஆக்கம் அதிகரிக்கும். பழைய பாக்கி வசூலாகும். வியாபாரத்தில் கவனம் தேவை. தன வரவில் தடங்கல் உண்டு. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். பழைய நட்பு பலன் தரும். உறவினரால் பாதகம் உண்டு. உடல் நலனில் அக்கறை தேவை. உலோகத் தொழில் உயர்வு தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சிங்கப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K


SCARBOROUGH COVID-19
VACCINE CLINIC

Pop-up COVID-19
Vaccine Clinic in
Scarborough

18 வயதுக்கு மேற்பட்டவர்கள்
ஸ்கார்பாரோவில் வசிப்பது (அல்லது வேலை செய்வது)
(முகவரி அல்லது வேலைவாய்ப்பு சான்று தேவை)
தடுப்பூசி: மாடர்னா (முதல் டோஸ் மட்டும்)

Toronto Public Library –
Goldhawk Park Branch
295 Alton Towers Circle

மே 29 சனி 9 a.m. - 5 p.m.

முதலில் வந்தவர்களுக்கு முதலில் வழங்கப்பட்ட அடிப்படையில் பாப்-அப் நாளில் தொடங்கி ஒரே நாள் சந்திப்புகளுக்கு டிக்கெட் வழங்கப்படும்

என்ன கொண்டு வர வேண்டும்
- ஸ்கார்பாரோ முகவரியில் வசிப்பது அல்லது வேலைவாய்ப்பினை கொண்ட ஆதாரத்தை வழங்க வேண்டும் (எ.கா. ஓட்டுநர் உரிமம் அல்லது பயன்பாட்டு பில்)
- சுகாதார அட்டை அல்லது அரசு வழங்கிய ஐடி, உங்களிடம் ஒன்று இருந்தால் கொண்டு வரவும்

Carefirst
tpl toronto public library



Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற
கனகாம்பிகை
தங்கநகை அடகுமாடம்
KANAGAAMBIKAI
PAWN BROKERS
25
வருடங்கள்
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை
பவுண் வங்கி
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...
2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2
416 269 7198

- மொன்ரியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்



# சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

#47

”அன்னை இல்லம் அழைத்தது”

”அன்னையைக் கண்டேன்”, என அஞ்சனை மைந்தன் ஆஞ்சநேயன் அண்ணல் ராமனிடம் உரைத்தது போன்று நானும் அன்னை இல்லத்தில் என் அன்புக்குரிய கலைக்குரிசிலை கண்டேன் களிப்புறறேன்.

ஆமாம் ” 40 ஆண்டுகால காலம் இந்தச் சூரியன் வரவுக்காகக் காத்திருந்த தாமரை நான் ” என கலிபோர்னியா மலிபு நகர் ஸ்ரீ வெங்கடாஜலபதி கோ-யில் மண்டபத்தில் அவருக்கு வழங்கப் பெற்ற வரவேற்புக் கூட்டத்தில் என்னால் வாசிக்கப்பட்ட வாழ்த்து கவிதை வரிகளை மிக உன்னிப்பாக நடிகர் திலகமும், அவரது இல்லத் தலைவியுடன் கூடவே தளபதி ராம்குமார் மற்றும் அந்த மண்டபத்தில் பெருந் திரளாகக் குழுமியிருந்த அனைத்து மொழி ரசிகர்களும் செவிமடுத்து ரசித்த நேரம், என் நினைவை விட்டு நீங்காத பொன்மாலைப் பொழுதாகும்!



பிரெஞ்சு நாட்டு அரசு சிவாஜி ஐயா அவர்களின் நடிப்பாற்றலுக்கும், கலைச்சேவையை பாராட்டியும் வழங்கிய “செவாலியே விருது“ பெற்றமைக்காக அமெரிக்கா வாழ் இந்திய சமூக மக்கள் ஏற்பாடு செய்த பாராட்டு விழாவிற்கு நானும் கனடா மொன்றியல் நகரிலிருந்து சென்று கலந்து கொண்ட பெருநிகழ்வு அது.

பாராட்டு விழாவில் வாழ்த்துக் கவிதையை வாசித்து அவருக்கு வழங்கிய பின் சரியாக ஒரு வருடத்திற்கு பிறகு அருமை நண்பர் பி ஹெச் அப்துல் ஹமீது அவர்களுடைய ஏற்பாட்டின்படி நாங்கள் இருவரும் கலையுலக பீ'மரின் “அன்னை இல்லம்“ சென்றோம்.

வாழ்க்கையில் சில நல்ல சந்திப்புகளும், சம்பவங்களும் நினைத்தோ எதிர்பார்த் தோ நடைபெறுவதில்லை. சில சமயம் நினைத்தது நிறைவேறும். இச்சந்திப்பு எதிர்பாராதது அல்ல! பல ஆண்டுகளாக நடிகர் திலகத்தை பார்க்க வேண்டும். அப்படி பார்க்கும் போது அவர் மனதிலும் என்னைப் பற்றிய நினைவு இடம்பெற வேண்டும் என்று மனதில் ஆசையை வளர்த்து வந்தேன். அது கலிபோர்னியா மாநிலம் மலிபு நகர் ஸ்ரீ வெங்கடாசலபதி ஆலயத்தில் நிறைவேறிற்று. அதன் பின் சென்னையில் அவருடைய “அன்னை இல்லத்தில்“ விருந்தாளியாக நெருக்கமானது!

அவருடைய அழைப்பின் பேரில் இரு நாட்கள் தொடர்ந்து “அன்னை இல்லம்“ சென்றோம். முதல் நாள் மாலை தேனீருடன் கூடிய உரையாடல். ”எங்க அய்யாவைப் பற்றி ரொம்ப தெரிஞ்சிக்கிட்டல்லவா கவிதை படிச்சீங்க. அதை நம்ப கம்பெனியில அல்லா மாட்டிவச்சிருக்கோம்”, இப்படி என்னை நினைவு கூர்ந்தார் அவரது இல்லத் தலைவி கமலாம்மா. அவர் கம்பெனி என்று குறிப்பிட்டது ”சாந்தி தியேட்டர்” என்பது, இங்கு குறிப்பிடத்தக்கது.

பொதுவாக நடிகர் திலகம் அவர்களுக்கு கிடைக்கும் வெளிநாட்டு விருதுகள், பாராட்டுகள், வாழ்த்துக்கள், பரிசுகள் யாவும் ஒருதடவையாவது அவர்களது சொந்த நிறுவனமான சாந்தி தியேட்டரில் பார்வைக்கு வைக்கப்படும். அப்படியே என்னுடைய வாழ்த்துக்கவிதையையும் அங்கு மாட்டி வைத்திருந்தார்கள். ஆக என்னை பற்றிய நினைவு அவர்களது நிறுவனத்திலும், மனதிலும் இடம் பிடித்துள்ளது அறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன்.

நடிகர்திலகம் அவர்களுடன் நேரில் உட்கார்ந்து பேசுவது என்பது ஒரு வித்தியாசமான அனுபவம். எனக்கென்னவோ “தங்கப்பதக்கம்“ எஸ் பி சௌத்திரியுடன் பேசுவது போல பயம் கலந்த உணர்வு. அவருடைய பார்வை, பேச்சு, கைவீச்சு, உடல்மொழி எல்லாமே அப்படி ஒரு பயம் கலந்த உணர்வை ஏற்படுத்தியது. நேரம் ஆக ஆக பயம் நீங்கி நெருக்கமானேன். உண்மையில் அவரது உரையாடல் பேச்சு, கருத்து யாவும் பொய்யற்றவை. ஒரு குழந்தைபோல் கபடமின்றி பேசினார். சில கருத்துக்கள் கூடியிருப்பவர்களுக்கு ஒத்துப்போகாததாய் இருக்கலாம். ஆனால் விகல்பம் அற்றவை.

கலை, அரசியல், நாட்டுநடப்பு, ஈழத்தமிழர் போராட்டம், குடும்ப விவகாரம் என்று பல்வேறு விடயங்கள் உரையாடலில் வந்து போயின. ”இந்த முசல்மானுடன் (ஹமீத் அவர்களை காட்டி) எப்படியப்பா ஸ்நேகம் ஆனீங்க ...!” என்று தனக்கும் ஹமீது அவர்களுக்குமுள்ள நெருக்கத்தை வெளிப்படுத்தினார்.

”ஐயா! நாளைக்கும் வாங்க. மத்தியானம் சாப்பாடு இங்க தான். சரியாக ஒரு மணிக்கு எங்க வீட்டுல சாப்பாடு. எல்லாமே நேரத்துக்கு நடக்கனும்..”, அன்பு கட்டளையை மீற முடியவில்லை.

அறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர், கலைஞர் மு.க, நேருஜி, பெரியார், ராஜாஜி, காஞ்சி பெரியவாள், எம்ஜிஆர், இந்திரா காந்தி, கண்ணதாசன் ஆகியோருடன் எல்லாம் வணங்குவதற்கும், பழகுவதற்கும், பேசுவதற்கும், நட்பு கொள்வதற்கும் வாய்ப்பு கிடைக்குமோ என்று ஏங்கிய சாமான்யன் நான். அது மட்டுமா, உலக நாடுகள் பலவற்றிலும், இந்திய மாநிலங்களிலும், பெரிய பெரிய தலைவர்களினதும், பிரபலமானவர்களினதும் அன்பையும், நட்பையும் பெற்ற புகழுக்குரிய ஒரு கலை மேதையின் அருகே உட்கார்ந்து உரையாடியபோதும், அவரே எனக்கு பக்குவமாக சிற்றுண்டி வகைகளை எடுத்து வைத்து அன்புடன் உபசரித்த போதும் மேற்கூறிய தலைவர்களையும், பெரியோர்களையும் ஓர் உருவில் பார்த்தது போன்ற பெருமிதம் எனக்கு! காரணம் மேற்கூறிய அத்தனை தலைவர்களையும், கலைஞர்களையும் தன்பால் கவர்ந்திழுத்த மேதையின் அருகேயிருப்பதை உணர்ந்து எனக்குள் நான் ஆச்சரியப்பட்டு போனேன்!

எங்கள் வருகை பற்றி செக்யூரிட்டியிடம் சொல்லி இருப்பார்கள் போலும். நண்பர் அப்துல் ஹமீதும், நானும் வந்த வண்டியை பார்த்ததுமே மெயின் கேட் வாசலில் காவலில் இருந்த பணியாள் கதவுகளைத் திறந்து எங்களை உள்ளே அனுமதித்தார்.

“ஐயா மேல இருக்கார்“ உட்காருங்கள் என்று பணியாட்கள் உபசரித்தனர். எங்கள் வருகை அறிவிக்கப்பட்டதும் ஒருவர் மாடியிலிருந்து கீழே வந்து, ஐயா உங்களை மேலேயே கூட்டிவரட்டாம்” என்று அழைத்துப்போனார்.

மேலே என்றதும் மேல் மாடியில் உள்ள ஹாலில் என்று தான் நாம் நினைத்தோம். ”வாங்க! ஐயா உள்ளே பெட்ரூம்ல இருக்கார். டிவியில கிரிக்கெட் நடக்குது. பார்த்துக் கிட்டுருக்கார்”, அப்போது நண்பர் ஹமீத் என்னிடம் காதில்



சொன்னார், ”நானும் எத்தனையோ தடவை வந்திருக்கிறேன். ஒரு நாளும் என்னை பெட்ரும் வரை அழைத்ததில்லை. நீங்கள் புதியவர், ஆனாலும் பெட்ரூமிற்கு உள்ளேயே அழைக்கிறார். நீங்கள் தான் சிவாஜி ரசிகர்” என்று எனக்கு மகிழ்வூட்டினார்.

படுக்கை அறையில் ஒரு மூலையில் இருந்த செயற்கையான மரக்கிளையில் மாட்டியிருந்த பல்வேறு வடிவ தொப்பி தலைப்பாகை என்னை கவர்ந்தன. வ உ சியாக வேடமிட்டு அணிந்த தலைப்பாகை, “எங்கள் ஊர் ராஜா“ தலைப்பாகை “இருவர் உள்ளம்“ படத்தில் “பறவைகள் பலவிதம்“ என்று பாடும் போது அணிந்திருந்த தொப்பி என்று பல்வேறு திரைப்படங்களிலும் அவ்வப்போது அணியப்பெற்ற தொப்பிகளும், ராஜகிரீடங்களும், தலைப்பாகைகளும் அந்த மரக்கிளைகளில் காட்சியளித்தன.

சிவாஜி ஐயா ஒரு கிரிக்கெட் பிரியர். நாங்கள் போயிருந்த வேளை அவர் டிவியில் கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியை பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார்.



”வாங்க.. உட்காருங்க. டேய் பசங்களா, அய்யாவுக்கு வணக்கம் சொல்லுங்கடா”, என்று பேரப்பிள்ளைகளுக்கு உத்தரவிட்டார். மகள் சாந்தி, ராம்குமார், பிரபு எல்லோருடைய பிள்ளைகளும் அங்கு தாத்தா சிவாஜி அய்யாவுடன் சேர்ந்து கிரிக்கெட் ஆட்டத்தைப் பார்த்து மகிழ்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

”டேய் புள்ளைங்களா உங்க பெயரையும், படிக்கிற வகுப்பையும் ஐயாவுக்கு சொல்லுங்கடா” பேரப்பிள்ளைகள் தாத்தாவின் வார்த்தைக்கு மதிப்பு அளித்து ஒவ்வொருத்தராக பெயர் சொல்லி பள்ளிக்கூடப் படிப்பு விபரம் சொன்னார்கள்.

”இவர்தான் என்னுடைய முதலாவது சன் இன் லோ, மிஸ்டர் நாராயணசாமி ஜெர்மனியில் படித்தவர், இன்ஜினியர்”, என்று குடும்பத்தின் மூத்த மருமகனாரை (மகள் சாந்தியின் கணவர்) கம்பீரமாக அறிமுகம் செய்து வைத்தார்.

ஒரு விடயத்தை நினைவு கூர்ந்தேன். “ஆனந்த விகடனில்“ ஒரு சமயம், ஒரு திருமணம் எப்படி நடைபெற வேண்டும் என உங்கள் மகளின் திருமண விழா பற்றி சிறப்பாக எழுதியிருந்தார்கள்”, என நினைவுபடுத்தினேன்! ”அட அதை விடுங்கய்யா..! ஒரு மருமகன் எப்படி இருக்க வேண்டும் என உதாரணமாக என் மாப்பிள்ளை இருக்கிறார் ஐயா”, என்று குடும்பத்தின் மூத்த மருமகன் பெருமையுடன் பார்க்க.. அவர் மிக அடக்கமாக எங்கள் எங்களை அன்புடன் குசலம் விசாரித்தார்.

லாஸ் ஏஞ்சல் மலிபு நகர் வெங்கடாசலபதி கோயில் மண்டபத்தில் வாசித்து வழங்கிய வாழ்த்து கவிதையின் ஒரு பகுதியைக் கீழே தருகிறேன்.

படிப்பதற்கு நீ எங்கள் பல்கலைக்கழகம்

அன்புக்கு இலக்கணமாம்
ராஜாமணி அம்மையாரின் மடிமீது தவழ்ந்தவனே,
அன்னை “பராசக்தி“ அருள் மிகக்கொண்டு
அறிமுகமாகிய எங்கள் தமிழ் நாயகனே!
ஐந்து பெரும் கண்டங்கள் வாழ்
தமிழர் அனைவரையும்,
கலையன்பால் கவர்ந்துவிட்ட
கன்னித்தமிழ் காவலனே,
அமெரிக்கக் கண்டம்
இன்று உன் வரவால் தலைநிமிர
“அன்னை இல்லம்“ காத்து நிற்கும் அய்ங்கரனைத்
தொழுதிடுவோம்!

நாற்பது ஆண்டுகள் இந்த சூரியன் வரவுக்காகக்
காத்திருந்த தாமரை நான்!
தாகம் மிகக்கொண்டு,
கலைத்தாகம் மிகக்கொண்டு,
கலையுலக காவலனாம் “செவாலியர்“ திலகத்தை
கவிதைத் தமிழ் கொண்டு களிப்புடனே வாழ்த்துகிறேன்!

கீழ்வானைக் கிழித்து வரும்
செங்கதிரோன் கதிர் ஒன்று
கலைவானில் ஒளிபரப்பும் திலகமாய் மாறியதோ!
விலை சொல்ல முடியாத விழுப்புரத்து மாணிக்கம்
நிலையான புகழ் பேசும் கலைச்சுடராய் மிளிருதிங்கே!

அடுத்த இதழில் கவிதையும் நினைவுகளும் தொடரும்..

# அன்பின் தொனி - 611

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபம் - ஜெபத்தின் வல்லமை.**

**நான் உம்முடையவன், என்னை இரட்சியும்**

உம்முடைய பிரமாணங்களை நிறைவேற்றும்படி அவைகள் இந்நாள்வரைக்கும் நிற்கிறது, சமஸ்தமும் உம்மைச் சேவிக் கும். உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்துபோயிருப்பேன். நான் ஒருபோதும் உம்முடைய கட்டளைகளை மறக்கமாட்டேன், அவைக-ளால் நீர் என்னை உயிர்ப்பித்தீர். நான் உம்முடையவன், என்னை இரட்சியும், உம்முடைய கட்டளைகளை ஆராய்கிறேன். துன்மார்க்கர் என்னை அழிக்க காத்திருக்கிறார்கள், நான் உமது சாட்சிகளைச் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன். சகல சம்பூரணத்திற்கும் எல்லையைக் கண்டேன், உம்முடைய கற்பனையோ மகா விஸ்தாரம். உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள்முழுதும் அது என் தியானம். நீர் உம்முடைய கற்பனைகளைக் கொண்டு என்னை என் சத்துருக்களிலும் அதிக ஞானமுள்ளவனாக்குகிறீர், அவைகள் என்றைக்கும் என்னுடனே இருக்கிறது. உம்முடைய சாட்சிகள் என் தியானமாயிருக்கிறபடியால், எனக்குப் போதித் தவர்களெல்லாரிலும் அறிவுள்ளவனாயிருக்கிறேன்.. உம்முடைய கட்டளைகளை நான் கைக்கொண்டிருக்கிறபடியால், முதியோர்களைப்பார்க்கிலும் ஞானமுள்ளவனாயிருக்கிறேன். உம்முடைய வசனத்தை நான் காத்து நடக்கும்படிக்கு, சகல பொல்லாத வழிகளுக்கும் என் கால்களை விலக்குகிறேன். நீர் எனக்குப் போதித்திருக்கிறபடியால், நான் உம்முடைய நியாயங்களை விட்டு விலகேன். உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள், என் வாய்க்கு அவைகள் தேனி-லும் மதுரமாயிருக்கும். உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன், ஆதலா-ல் எல்லாப் பொய் வழிகளையும் வெறுக்கிறேன். உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக் கிறது.

**- சங்கீதம் 119: 91-105**

**உம்முடைய வசனத்தின்படியே என்னை உயிர்ப்பியும்.**

உம்முடைய நீதி நியாயங்களைக்காத்து நடப்பேன் என்று ஆணையிட்டேன், அதை நிறைவேற்றுவேன். நான் மிகவும் உபத் திரவப்படுகிறேன், கர்த்தாவே, உம்முடைய வசனத்தின்படியே என்னை உயிர்ப்பியும். கர்த்தாவே, என் வாயின் உற்சாக பலிகளை நீர் அங்கீகரித்து, உமது நியாயங்களை எனக்குப் போதித்தருளும். என் பிராணன் எப்பொழுதும் என் கையில் இருக்கிறது, ஆனாலும் உம்முடைய வேதத்தை மறவேன். துன்மார்க்கர் எனக்குக் கண்ணிவைக்கிறார்கள், ஆனாலும் நான் உம்முடைய கட்டளைகளை விட்டு வழிதவறேன். உம்முடைய சாட்சிகளை நித்திய சுதந்தரமாக்கிக் கொண்டிருக் கிறேன், அவைகளே என் இருதயத்தின் மகிழ்ச்சி. முடிவுபரியந்தம் இடைவிடாமல் உம்முடைய பிரமாணங்களின்படிசெய்ய என் இருதயத்தைச் சாய்த்தேன். வீண் சிந்தனைகளை நான் வெறுத்து, உமது வேதத்தில் பிரியப்படுகிறேன். என் மறை விடமும் என் கேடகமும் நீரே, உம்முடைய வசனத்துக்குக் காத்திருக்கிறேன். பொல்லாதவர்களே, என்னைவிட்டு அகன்று போங்கள், என் தேவனுடைய கற்பனைகளை நான் கைக்கொள்ளுவேன். நான் பிழைத்திருப்பதற்கு உமது வார்த்தையின் படி என்னை ஆதரித்தருளும், என் நம்பிக்கை விருதாவாய்ப்போக என்னை வெட்கத்திற்கு உட்படுத்தாதேயும். என்னை ஆதரித்தருளும், அப்பொழுது நான் இரட்சிக்கப்பட்டு, எக்காலமும் உம்முடைய பிரமாணங் களின்பேரில் நோக்கமாயிருப் பேன். உமது பிரமாணங்களைவிட்டு வழிவிலகுகிற யா-வரையும் மிதித்துப்போடுகிறீர், அவர்களுடைய உபாயம் வெறும் பொய்யே. பூமியிலுள்ள துன்மார்க்கர் யாவரையும் களிம்பைப்போல அகற்றிவிடுகிறீர், ஆகையால் உமது சாட்சிகளில் பிரியப்படுகிறேன். உமக்குப் பயப்படும் பயத்தால் என் உடம்பு சிலிர்க்கிறது, உமது நியாயத் தீர்ப்புகளுக்குப் பயப்படுகிறேன். நியாயமும் நீதியும் செய்கிறேன், என்னை ஒடுக்குகிறவர்களுக்கு என்னை ஒப்புக்கொடாதேயும். உமது அடியேனுக்கு நன்மையாகத் துணைநில்லும், அகங்காரிகள் என்னை யொடுக்கவொட்டாதேயும். உமது இரட்சிப்புக்கும் உமது நீதியின் வார்த்தைக்கும் காத்திருக்கிறதினால் என் கண்கள் பூத்துப்போகிறது. உமது அடியேனை உமது கிருபையின் படியே நடத்தி, உமது பிரமாணங்களை எனக்குப் போதியும். நான் உமது அடியேன், உம்முடைய சாட்சிகளை நான் அறியும்படி என்னை உணர்வுள்ளவனாக்கும். **- சங்கீதம் 119: 106-125**

**மனுஷர் செய்யும் இடுக்கத்துக்கு என்னை விலக்கி விடுவித்தருளும்**

நீதியைச் செய்யச் கர்த்தருக்கு வேளைவந்தது, அவர்கள் உம்முடைய நியாயப்பிரமாணத்தை மீறினார்கள். ஆதலால் நான் பொன்னிலும் பசும்பொன்னிலும் அதிகமாய் உமது கற்பனைகளில் பிரியப்படுகிறேன். எல்லாவற்றைப்பற்றியும் நீர் அருளின எல்லாக் கட்டளைகளும் செம்மையென்று எண்ணி, சகல பொய்வழிகளையும் வெறுக்கிறேன். உம்முடைய சாட்சிகள் அதிசயமானவைகள், ஆகையால் என் ஆத்துமா அவைகளைக் கைக்கொள்ளும். உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும். உம்முடைய கற்பனைகளை நான் வாஞ்சிக்கிற படியால், என் வாயை ஆவென்றுதிறந்து அவைகளுக்கு ஏங்குகிறேன். உம்முடைய நாமத்தை நேசிக்கிறவர்களுக்கு வழங்கும் நியாயத்தின்படியே என்னை நோக்கிப்பார்த்து, எனக்கு இரங்கும். உம்முடைய வார்த்தையிலே என் காலடிகளை நிலைப்படுத்தி, ஒரு அநியாயமும் என்னை ஆளவொட்டாதேயும். மனுஷர் செய்யும் இடுக்கத்துக்கு என்னை விலக்கி விடு வித்தருளும், அப்பொழுது நான் உம்முடைய கட்டளைகளைக் காத்துக்கொள்ளுவேன். உமது அடியேன்மேல் உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணி, உமது பிரமாணங்களை எனக்குப் போதியும். உம்முடைய வேதத்தை மனுஷர் காத்து நடவாதபடியால், என் கண்களிலிருந்து நீர்த்தாரைகள் ஓடுகிறது. (த்சாடே.)கர்த்தாவே, நீர் நீ-திபரர், உமது நியாயத்தீர்ப் புகள் செம்மையானவைகள். நீர் கட்டளையிட்ட சாட்சிகள் நீதியும், மகா உண்மையுமானவைகள். என் சத்துருக்கள் உம்முடைய வசனங்களை மறந்தபடியால், என் பத்திவைராக்கியம் என்னைப் பட்சிக்கிறது. உமது வார்த்தை மிகவும் புடமிடப்பட்டது, உமது அடியேன் அதில் பிரியப்படுகிறேன். நான் சிறியவனும் அசட்டை பண்ணப்பட்டவனுமாயிருக்கி றேன், ஆனாலும் உமது கட்டளைகளை மறவேன். உம்முடைய நீதி நித்திய நீதி, உம்முடைய வேதம் சத்தியம். இக்கட்டும் நெருக்கமும் என்னைப் பிடித்தது, ஆனாலும் உம்முடைய கற்பனைகள் என் மனமகிழ்ச்சி. உம்முடைய சாட்சிகளின் நீதி என்றைக்கும் நிற்கும், என்னை உணர்வுள்ளவனாக்கும், அப்பொழுது நான் பிழைத்திருப்பேன். முழு இருதயத்தோ டும் கூப்பிட்டேன், கர்த்தாவே, என் ஜெபத்தைக்கேளும்ளூ உம்முடைய பிரமாணங்களைக் கைக்கொள்ளுவேன். உம்மை நோக்கிக் கூப்பிட்டேன், என்னை இரட்சியும்ளூ அப்பொழுது நான் உம்முடைய சாட்சிகளைக் காத்துக்கொள்ளுவேன்.

**- சங்கீதம் 119: 12-146**

*தொடரும்...*




PRECONSTRUCTION HOUSES & TOWNHOUSES!
Four Sixteen Whitby Condos
Old Colony Estates
Hillsborough
Anchor Woods
Anchor Woods By Andrin Homes
Hometown Sharon Village
Blue Sky
Universal City Condos 4
U.C. Homes
Cornell Rouge Homes
On the Mark Towns
Angus Glen South Village Homes
Victory Green Homes
Nao Towns
Bala Logendralingam
REALTOR®
EXECUTIVE Award
100% Award
RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage
Office: 416-287-2222
647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9


Home Renovations
Coverall Group Inc.
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
Contact: Siva
416-706-8160

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்தின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

25 வெள்ளி விழா 2021 UTHAYAN உதயன்

NEW CLASS STARTING
புதிய வகுப்புகள் ஆரம்பம்
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

உதயம் 1312 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 28, 2021

# நாங்கள் கவனமாக இல்லாவிட்டால், எமது கனடாவின் கோவிட் – 19 தொற்று வரைபு மீண்டும் உயரத்திற்குச் சென்று விழும்!

### எச்சரிக்கின்றார் கனடாவின் பிரதான பொது சுகாதார அதிகாரி டாக்டர் தெரசா டாம்



கனடாவின் கோவிட் -19 தொற்றுநோய் வரைபை நாம் தினமும் கவனித்து வரவேண்டும். அந்த வரைபில் திடீரென ஏற்படும் மாற்றம் வீழ்ச்சியாக இருந்தால் எமது அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் மகிழச்சியாக இருக்கும். ஆனால் அந்த வீழ்ச்சிக்கான மிக முக்கியமான காரணி எதுவென்றால், எமது அரசாங்கமும் மாகாணங்களும் மற்றும் பிரதேசங்களின் நிர்வாகங்களும் அவற்றின் பொது சுகாதார நடவடிக்கைகளும் தான் ஆகும்.
(தொடர்ச்சி உள்ளே 5ம் பக்கத்தில்)

# ஒன்ராறியோவை மீளவும் இயங்கச் செய்யும் வகையில் மாகாணஅரசு மூன்று படிநிலைகளில் திட்டத்தினை வெளியிட்டுள்ளது

ஒன்ராறியோ அரசாங்கம் மாநில முதன்மை சுகாதார அதிகாரியுடன் கலந்தாலோசித்ததன் அடிப்படையில் மாநிலத்தினை பாதுகாப்பான முறையில் மீளியங்கு நிலைக்குக் கொண்டுவருவதற்கான மூன்று படிநிலைகள் அடங்கிய திட்டமொன்றினை வெளியிட்டுள்ளது. இத்திட்டமானது, மாநில அளவிலான தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்களின் விகிதாசாரம் மற்றும் பொது சுகாதார கட்டமைப்பினால் வழங்கப்படும் தரவுகளில் காணப்படும் முன்னேற்றநிலை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும். மேற்படி தரவுகளின் அடிப்படையில், மே 22, 2021 முதல் ஒன்ராறியோ அரசாங்கம் மேலும் பல வெளியரங்க பொழுதுபோக்கு இடங்களை சில கட்டுப்பாடுகளுடன் திறப்பதற்கு அனுமதியளித்துள்ளது.
(தொடர்ச்சி உள்ளே 5ம் பக்கத்தில்)



# கனடா வாழ் எழுத்தாளர் குரு அரவிந்தன் வாசகர் வட்டம் நடத்திய திறனாய்வுப் போட்டி 2021 முடிவுகள்



உலகளவில் நடத்தப்பெற்ற மேற்படி போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

1வது பரிசு: 25,000 இலங்கை ரூபாய்கள்
நரேஸ் நியூட்டன். த. கழுபோவிலை, கொழும்பு, இலங்கை


2வது பரிசு: 20,000 இலங்கை ரூபாய்கள்
சிவனேஸ் ரஞ்சிதா. கெக்கிராவ, இலங்கை

3வது பரிசு: 15,000 இலங்கை ரூபாய்கள்
முருகேஷ். மு. வந்தவாசி, தமிழ்நாடு

4வது பரிசு: 10,000 இலங்கை ரூபாய்கள்
ஸ்ரீகந்தநேஷன்.ஆ.பெ. யாழ்ப்பாணம், இலங்கை

5வது பரிசு: 7,500 இலங்கை ரூபாய்கள்
சுப்ரபாரதிமணியன்.ப. திருப்பூர், தமிழ்நாடு
(தொடர்ச்சி உள்ளே 9ம் பக்கத்தில்)

# எந்தவொரு அந்தியசக்திகளின் நடவடிக்கைகளுக்கும் எமது தாயகமக்களின் சம்மதம் பெறப்பட வேண்டும் என்கிறார் வி.உருத்திரகுமாரன்



தமிழர் தேசத்தின் இறைமை என்பது நிலத்தில் மட்டுமல்ல, நிலத்தை அண்டிய கடலிலும் உண்டென்ற நிலையில் எந்தவொரு அந்தியசக்திகளின் நடவடிக்கைகளுக்கும் தாயகமக்களின் சம்மதம் பெறப்பட வேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

கடந்த மே 22,23ம் திகதிகளில் இணையவழி ஊடாக இடம்பெற்றிருந்த நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை அமர்வின் போது, ‘சுயநிர்ணய உரிமையும், ஈடுசெய்நீதியிலான பிரிந்து செல்லலும்’ , ‘இந்தியப் பெருங்கடலும் இலங்கைத்தீவில் பெருகிவரும் சீன ஆதிக்கமும்’, ‘தமிழ்நாட்டு ஆட்சி மாற்றமும் இந்தியாவை நோக்கிய செயற்பாடும்’ ஆகிய தொனிப்பொருட்களில் பல்வேறு அறிஞர்பெருமக்கள் பங்கெடுத்திருந்த கருத்தமர்வுகள் இடம்பெற்றிருந்தன.
(தொடர்ச்சி உள்ளே 4ம் பக்கத்தில்)

RE/MAX ACE REALTY INC. BROKERAGE
PUNCH SOCKALINGAM
www.mlslistingtoday.com
Punch
Dir: 416.786.2463
E-Mail: 416punchme@gmail.com
BUY...SELL...LEASE...INVEST...

SCARBOROUGH COVID-19 VACCINE CLINIC
Pop-up COVID-19 Vaccine Clinic in Scarborough
18 வயதுக்கு மேற்பட்டவர்கள்
ஸ்கார்பாரோவில் வசிப்பது (அல்லது வேலை செய்வது)
(முகவரி அல்லது வேலைவாய்ப்பு சான்று தேவை)
தடுப்பூசி: மாடர்னா (முதல் டோஸ் மட்டும்)
Toronto Public Library – Goldhawk Park Branch
295 Alton Towers Circle
மே 29 சனி 9 a.m. - 5 p.m.
முதலில் வந்தவர்களுக்கு முதலில் வழங்கப்பட்ட அடிப்படையில் பாப்-அப் நாளில் தொடங்கி ஒரே நாள் சந்திப்புகளுக்கு டிக்கெட் வழங்கப்படும்
என்ன கொண்டு வர வேண்டும்
tpl toronto public library